"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"
(ஆமோஸ் 4 : 12)

தேவஎக்காளம்



"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" (யோவான் 12 : 32)

பல ஆண்டு காலத்துக்கு முன்பாக தேவ ஊழியத்தின் பாதையில் நான் இமயமலைகளின் அடிவாரத்திலுள்ள ஹரித்துவாரம் என்ற பட்டணத்துக்கு சென்றிருந்தேன். அங்கு ரயில் நிலையத்தில் முதிர் வயதான ஒரு இந்து சாதுவை சந்தித்தேன். தனது சரீரத்தில் கோமணம் ஒன்றை

Vol No. 31 ஏப்பிரல் To ஆகஸ்ட் 1999 No. 4 To 8

மாத்திரம் அணிந்திருந்தவரான அவர் தனது தலைமுடியையும், தாடி முடியையும் வெகு நீளமாக வளர்த்திருந்தார். அவரது கை கால்களின் நகங்கள் வெட்டப்படாததால் அவைகளும் கழுகின் கால் நகங்கள் போல வளர்ந்து கிடந்தன. அந்த இந்து சாதுவுக்கு நான் ஒரு சுவிசேஷ துண்டுப் பிரதியைக் கொடுத்தேன். அதின் முகப்பில் அருமை இயேசு இரட்சகர் சிலுவையில் தொங்கும் காட்சி சித்தரிக்கப்பட்டிருந்தது. அந்த கைப்பிரதியை அவர் வாங்கியதும் அதை அப்படியே தனது கரங்களில் வைத்து சற்று நேரம் மௌனமாகப் பார்த்துக் கொண்டே இருந்தார். அதற்கப்பால் அதை சில தடவைகள் முத்தமிட்டார். பின்னர் அவர் என்னைப் பார்த்து இப்படிச் சொன்னார் ''இந்தக்காட்சியைப் பார். உலகத்தில் எத்தனையோ அவதாரங்கள் வந்தன. எந்த ஒரு அவதாரமாவது மனுமக்களின் பாவங்களுக்காக இவ்விதமாக ஜீவனைக்கொடுத்ததை நீ கேள்விப்பட்டிருக்கின்றாயா? இல்லவே இல்லை. இந்த ஒரு அவதாரத்தை தவிர வேறு எந்த ஒரு அவதாரமும் மனுக்குலத்துக்காக இரத்தம் சிந்தி மாளவில்லை. இவரே உலகின் மெய் அவதாரம். இந்த இயேசு இரட்சகரைத்தான் நானும் வணங்கிவழிபட்டு வருகின்றேன். இந்த சிலுவைக் காட்சியை நீ பார். உனக்கு பசியே வராது'' என்று அந்த சாது கூறினார்.

மேற்கண்ட இந்து சாதுவை உலக இரட்சகர் தம்மண்டை இழுத்துக் கொண்டிருந்தார். அந்த சாதுவைப்போல எகிப்து தேசத்திலே ஒரு வைராக்கியமான முகமதிய மனிதரையும் தேவன் தன்னண்டை இழுத்துக் கொண்ட ஒரு சரித்திரத்தை சமீபத்தில் ஒரு ஆங்கில கிறிஸ்தவ பத்திரிக்கையில் வாசித்தேன். மனிதர் தனது அறியாமையால் ஆரம்பத்தில் ஆண்டவருடைய பரிசுத்த வேதாகமத்தையே தனது கால்களின் கீழ்போட்டு மிதித்திருக்கின்றார். அவரது சாட்சியை அவரது வாயால் சொல்ல நாம் கேட்போமா !

எகிப்து தேசத்தின் நைல் நதி முகத்துவாரத்தின் பகுதியிலுள்ள இடத்தில் வாழும் ஒரு சாதாரண எகிப்தியன் நான். முன்பு எனது பெயர் இப்ராஹிம் என்பதாகும். இப்பொழுது எனது பெயர் தீமோத்தேயு ஆபிரகாம் என்பது. எனது வீட்டைச்சுற்றி ஒவ்வொரு பக்கத்திலும் விவசாய பண்ணை நிலங்கள் உள்ளது. எகிப்தின் ஜீவ நதியான நைல் நதியின் நீரோடைகள் அந்த விளைநிலங்களை செழிப் படையச் செய்து கொண்டிருக்கின்றன. எனது குழந்தைப் பருவத்தி

லிருந்தே நான் தீவிரமான இஸ்லாமிய பின்னணியத்தில் வளர்க்கப்பட்டு வந்தேன். எங்கள் ஊர் கிராமப்பள்ளியில் நான் பயின்றேன். அங்கு எனக்கு குரானை (அல்-குதாப்) போதித்தார்கள். வானத்தையும், பூமியையும் 6 நாட்களில் படைத்த கடவுளுக்கு (அல்லாஹ்) நான் அஞ்சி நடக்கவேண்டும் என்றும் எனக்கு சொல்லிக்கொடுத்தனர். எனது மார்க்கத்தை குறித்து எனக்கு எந்த ஒரு தடுமாற்றமும் இருந்ததே இல்லை. ஏனெனில் அது என்னை கடவுளுக்கு பயந்து வாழவும், சமுதாயத்துக்கு நன்மையே செய்து, தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஒரு ஒழுக்கமான வாழ்வை மேற்கொள்ள அது எனக்கு கற்றுக்கொடுத்தது. மனமகிழ்வுக்கும், சமாதானத்துக்கும் குரானை மனப்பாடம் செய்ய எனக்கு கற்றுக்கொடுத்திருந்தார்கள். நபிகள் நாயகம் முகமது அவர்களை அதிகமாக ஆராதிக்கும் சஃபி என்ற பிரிவை நான் சார்ந்திருந்தேன்.

ஒரு நாள் மாலை நேரம் எங்கள் ஊர் அல்-மஹாட்டா பள்ளிவாசலில் எனது தொழுகையை முடித்து நான் வெளிவந்தபோது முகமது இமாம் மற்றும் சுலைமான் கஹ்வாஷ் என்பவர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தனர். அவர்களுடைய முயற்சியால் நான் ''இஸ்லாம் சகோதரத்துவம்'' என்ற இயக்கத்தில் சேர்ந்தேன். அந்த அமைப்பானது நான் ஒரு அர்ப்பணிக்கப்பட்ட முகமதியனாக வாழ எனக்கு ஊக்கமும், உதவியும் செய்தது. அதின் காரணமாக நான் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் ஒழுங்காக நோன்பு நோற்றேன். நோன்பை (உபவாசத்தை) எங்கள் ஊர் பள்ளிவாசலிலேயே முடித்து எனது இஸ்லாமிய சகோதரர்களுடன் சேர்ந்து ரொட்டி, வெண்ணெய், பேரீச்சம் பழம் மற்றும் சுவையான ஆகாரங்களை புசித்தேன். முகமது நபிகள் நாயகத்தைப் போலவே நான் அமர்ந்து எனது ஆகாரங்களை உண்டேன். எனது இஸ்லாமிய சகோதரர்கள் என்பால் மிகவும் பட்சமாக இருந்தனர். ஒரு சிறந்த பேச்சாளனுக்கு இருக்கக்கூடிய அறிவாற்றல் என்னில் மறைந்திருப்பதை அவர்கள் கவனித்தனர். ''இஸ்லாம் சகோதரத்துவத்தை'' சேர்ந்த சுலைமான் காசிம் என்ற சகோதரன் ஒரு நாள் என்னண்டை வந்து மிகவும் மென்மையும் மதுரமுமான குரலில் ''இப்பிராஹிம், புனித குரானின் போதனைகளான இஸ்லாத்தை பறைசாற்ற நீ அழைக்கப்பட்டுள்ளாய்'' என்று கூறினான். ''எனது அல்லாவே'' நான் ஆச்சரியத்தால் சப்தம் போட்டேன். ''நான் மிகவும் இளைஞன். எனது வயது இப்பொழுதுதானே 14 ஆகின்றது. மாற்றார்கள் என்னுடன் தர்க்கித்து என்னை சுலபமாக வெற்றிகொண்டு விடுவார்கள்'' என்றேன் நான், ''அது ஒருபோதும் உன்னிடம் நடக்காது என்று கூறி ஒரு குவியல் புத்தகங்களை என்னிடம் கொடுத்து இவற்றை நீ வாசித்து இஸ்லாமை பாதுகாக்கும் வாதாட்டங்களுக்கு நீ உன்னை தயார் படுத்திக் கொள்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

ஜாண் என்ற ஒரு உண்மை கிறிஸ்தவனை சந்தித்தது

அமெரிக்க நாட்டிலுள்ள பென்சில்வேனியா நகரத்திலுள்ள ஜாண் என்ற ஒரு கிறிஸ்தவனோடு நான் கடிதத் தொடர்பு வைத்திருந்தேன். 2 வருடங்களாக நாங்கள் இருவரும் ஒழுங்காக கடிதத் தொடர்பு கொண்டிருந்தோம். நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் மதமாற்றம் செய்ய வெகுவாக முயற்சித்துக்கொண்டிருந்தோம். தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தை எதிர்த்து தாக்கக்கூடிய புத்தகங்களை எல்லாம் நான் படித்துக்கொண்டிருந்தேன். வேதாகமத்தை நான் அவமதித்தேன். அந்த புத்தகம் உண்மையில்லாத களங்கமுள்ள புத்தகம் என்று எனக்கு கற்றுத்தந்திருந்தபடியால் நான் அதை எனது காலின் கீழ்போட்டு மிதித்து எனது சப்பாத்துக்களையும் எனது பாதங்களையும் வைக்கும் மிதிபலகையாக அதை பயன்படுத்தினேன்.

இந்தவிதமான சூழ்நிலையில் நான் அதிசயிக்கத்தக்கவிதமாக திடீரென்று ஒரு நாள் ஜாண் என்னைச் சந்திப்பதற்காக எங்கள் கிராமத்துக்கே வந்துவிட்டான். ஒரு உண்மையான கிறிஸ்தவனை முதன்முதலாவதாக நான் அப்பொழுதுதான் பார்த்தேன். ஜாணுடைய உண்மை, கள்ளங்கபடற்ற அவனது வாழ்க்கை, மனதில் கரவில்லாத அவனது குழந்தை உள்ளம், போலி மற்றும் மாயமில்லாத அவனது நிர்மலமான இருதயம் எனது உள்ளத்தை பலமாகத் தொட்டது. ஜாண் எங்கள் வீட்டில் 2 மாத காலம் இருந்தான். ஜாண் ஒரு பிரகாசமான ஜெப வாழ்க்கையை தன்னகத்தே கொண்டிருந்தான். அந்த ஜெப வாழ்க்கை தான் எனது கிறிஸ்தவ வாழ்வின் பிற்பகுதியில் நான் ஒரு முன்மாதிரியான கிறிஸ்தவ வாழ்க்கை நடத்த எனக்கு பெரிதும் கைகொடுத்து உதவியது. அதுவரை நான் கிறிஸ்தவர்கள் ஜெபம் செய்வார்களா என்றுகூட எண்ணியதுண்டு. ஆனால், ஜாண் யாவரும் வாசிக்கும் ஒரு ஜீவனுள்ள நடமாடும் திறந்த நிருபமாக இருந்தான். வெகு தொலைவிலுள்ள ஒரு நாட்டிலிருந்து எனது வீட்டிற்கு வந்து எங்களோடு நடமாடிக்கொண்டிருந்த அவன் கிறிஸ்தவ அன்பை தனது வாழ்வில் பிரதிபலித்துக்காட்டுபவனாக இருந்தான். அவனது வாயின் வார்த்தைகளைவிட அவன் ஜெபம்தான் அதிக வலிமையாகவும், அதிகமாகவும் என்னுடன் பேசுவதாக இருந்தது. தேவனுடைய வசனங்களையேதான் அவன் பெரும்பாலும் எங்களுடன் பேசினான். ஜாணுடைய தேவபக்தியும் ஆண்டவருடனான அவனது உறுதியான ஐக்கியமும் என்னை அவன்மேல் பொறுமை கொள்ள வைத்தது. அதின் காரணமாக நான் எனது குரானிலிருந்து பல பகுதிகளை அவனுக்கு முன்பாகச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் ஜாண் என்னைப் பார்த்து ''நீ ஒரு நாள் ஒரு பவுலாக மாற்றம் பெறுவாய்'' என்று சொன்னான். நான் அவனுக்கு பிரதியுத்தர

மாக ''ஜாண் நீ நிச்சயமாக புத்தி தடுமாறித் தான் பேசுகின்ருய் மார்க்கங்களில் எல்லாம் மேலான மார்க்கமாகிய எங்கள் இஸ்லாமை நான் ஒரு கணப்பொழுது கூட விட்டு விலகமாட்டேன்'' என் று கூறினேன்.

இரண்டு கடவுளர்கள்

தனது அடிமைகளை சித்திரவதை செய்யும் வழிமுறைகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் ஒரு கடவுளைத்தான் குரான் நமக்கு முன் பாக வைக்கின்றது. ஒரு முஸ்லீம் மனிதன் இந்த உலகத்தில் எவ்வளவு நற்கிரியைகளை செய்யக்கூடுமோ அவைகள் அனைத்தையும் அவன் செய்யவேண்டும் என்றும் நியாயத்தீர்ப்பின் நாளில் கடவுள் ஒவ்வொரு மனிதனின் செயல்களையும் தராசிலே வைத்து எடை போடுகின்ருர் என்றும் குரான் கூறுகின்றது. ஒரு மனிதனின் நல்ல செயல்கள் தராசின் ஒரு தட்டிலும் அவனது தீய செயல்கள் மற்ருெரு தட்டிலும் வைக்கப்பட்டு நிறுவை செய்யப் படுகின்றது. தீய செயல்களைக்காட்டிலும் நற்செயல்கள் அதிகமிருந்தால் அந்த மனிதன் பரதீசுக்கு செல்ல அனு மதிக்கப்படுகின்ருன் என்றும் அந்தப் பரதீசானது பாலுறவு இன்பங் களும், களியாட்டுகள், கேளிக்கை ஆட்டங்கள் நிரம்பிய ஒன்ருக குரான் விவரிக்கின்றது (சூரா அல்-வாஹியா 56 : 20-23) எனினும் நமதருமை இரட்சகர் மோட்சத்தைக்குறித்துப் பேசும்போது ''உயிர்த்தெழுதலில் கொள்வனையும், கொடுப்பனையும் இல்லை, அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப் போல் இருப்பார்கள்'' (மத் 22 : 30) என்று கூறினர்.

இஸ்லாமியத்தின் கட்டளைப்படி உனது தீய செயல்கள் அதிக எடையுள்ளதாக தராசிலே காணப்படும் பட்சத்தில் நீ நரக அக்கினியிலே தள்ளப்படுவாய். அது எப்படி தெரிகிறதென்ருல் நீ பரதீசுக்கு செல்ல வேண்டும் என்ருல் 51 சதவீத நற்கிரியை உனக்கு வேண்டும். எனினும் நீ மோட்சம் செல்லுவாய் என்ற நிச்சயம் முற்றுமாக உனக்கு கிடையவே கிடையாது. நீ பரதீசு செல்லுவதைக்குறித்து பேச வேண்டுமானல் ''நான் பரதீசுக்கு போவது கடவுள் ஒருவருக்குத்தான் தெரியும்'' என்று மட்டுமே சொல்லலாம். அல்லாவின் கருணையை எதிர்பார்த்தவனாக நானும் கூட அதே படகில்தான் பயணம் செய்து கொண்டிருந்தேன். ஆனல், எத்தனை ஆச்சரியம் பாருங்கள்! கர்த்தராகிய இயேசு பெருமானின் இரத்த புண்ணியத்தால் ஒரு மனிதன் தான் பரலோகம் செல்லுவதை இந்த பூலோகத்திலேயே திட்டமும் தெளிவுமாக நிச்சயம் பண்ணிக்கொள்ளலாம். இதை நான் நினைத்தபோது கண்ணீர் என் கண்களை நிறைத்தது. இஸ்லாமியத்தில் நான் இருந்தபோது இந்த ஆனந்தமான நம்பிக்கை எனக்கு கிடையாது. ஆண்டவர் இயேசுவின் மகத்துவ மாட்சியை நான் கண்டபோது என் கண்கள் கண்ணீரால்

நிறைந்த நிலையில் நான் ஆனந்த நடுக்கமுற்றேன். நிச்சயமாகவே எனக்கு நித்திய ஜீவன் உள்ளது என்பதை நான் என்னளவில் அறிந்த போது ஆனந்தக் களிகூருதல் அடைந்தேன்.

பரிசுத்த வேதாகமத்திலே தேவனை நீதியுள்ளவராகவும் அதே சமயம் இரக்கம் நிறைந்தவராகவும் நாம் காணலாம். தேவனுடைய மாசற்ற நீதியின்படி மனுக்குலம் அனைத்தும் நாக பாதாளத்தில் வைத்து தண்டிக் கப்பட்டே ஆகவேண்டும். ஏனெனில் தேவன் நுற்றுக்கு நூறு பூரண பரிசுத்தர்.

நாம் எத்தனை கடினமாக முயன்று முயற்சித்தாலும் தேவனை பிரியப் படுத்த இயலாமல் நாம் எப்பொழுதும் அவரது பரிபூரணத்தின் எல்லைக் கோட்டை எட்டிப்பிடிக்க இயலாமல் இன்னும் பாதாளத்தின் அடிமட்ட நிலையில்தான் கிடக்கின்றோம். நமது நற்கிரியைகள் ஒருக்காலும் நம்மை சர்வவல்ல தேவனுக்கு அருகில் கொண்டு வருவதே இல்லை. இந்த விதமான நமது தகுதி இன்மையை கண்ணுற்ற அன்பின் தேவன் தாமே அந்த பாவத்தின் தண்டனையை தன்னில் தானே ஏற்றுக்கொள்ள தீர்மானம் செய்தார். அதின் நிமித்தமாக அவர் தமது வார்த்தையாகிய அல்-மசி (இயேசு கிறிஸ்து)யை உலகத்துக்கு அனுப்பினார். அல்-மசி யாகிய இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்கான தண்டனையை சிலுவை மரத்தில் சுமந்து தீர்க்க முற்றும் பொருத்தமானவராகவும், பாவத்தின் வாசனையே அற்றவராகவும், முற்றும் குற்றமற்றவராகவும் இருந்தார். உனது பாவங்களுக்கான தண்டனையை உன்னைக்குற்றவாளியாக தீர்ப்பளித்த சர்வலோக நியாதிபதியே தம்பேரிலேயே ஏற்றுக்கொள்ள சம்மதித்திருக்கும்போது நீ அந்த அன்புக்கு என்ன சொல்ல இருக் கின்றது ! வேதாகமத்தில் நாம் இந்த ஆச்சரியக்காட்சியைத்தான் காண்கின்றோம், ''தேவன் தம்முடைய ஒரே பேருன குமாரனை விசுவாசிக் கிறவன் எவனை அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'' (யோ 3 : 16) தேவன் நம்மை நேசித்த காரணத்தால் தமது வார்த்தை யாகிய இயேசு கிறிஸ்துவை நமக்காக மரிக்கும்படியாக உலகத்துக்கு அனுப்பினார்.

நாம் பரலோகத்துக்கு செல்லக்கூடிய நிச்சயமான நம்பிக்கையை இஸ்லாம் நமக்குத் தரவில்லை. ஆனால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அந்த பிரகாசமான நம்பிக்கையை நமக்குத் தந்துள்ளார். கர்த்தருக்குத் துதி உண்டாவதாக.

இயேசு கிறிஸ்து யார் ? அவர் ஏன் சிலுவையில் அறையப்பட வேண்டும் ? இரட்சகரின் சிலுவை மரணம் என்னில் எவ்விதமாக கிரியை செய்கின்றது ? என்பது போன்ற வினாக்களை நான் எனக்குள்ளாக

எழுப்பினேன். மனுக்குலத்தின் முழு சரித்திரமும் கிறிஸ்துவை சுற்றி சுழன்று கொண்டிருக்குமேயானால் எனது வாழ்க்கையும், எனது உயிர் வாழ்வும் கூட அந்த இரட்சகரை சுற்றித்தான் சுழன்று கொண்டிருக்க வேண்டும் என்று நான் எனக்குள்ளாக நிச்சயித்தேன். இந்த நிலையில் இரட்சகரின் சிலுவையை மறுப்பது என்பது உலகத்தின் முழு சரித்திரத் தையுமே அபத்தம் என்று மறுப்பதாகும் என்று நான் எனக்குள் தீர்மானித்தேன்.

எனது தேடுதல்

எனது வாழ்வில் முதன்முறையாக ''ஏன்?'' என்ற கேள்வியை நான் கேட்க ஆரம்பித்தேன். அத்துடன் ஒவ்வொரு காரியத்தையும் சவால் விட்டு ஆராய்ந்து பார்த்து ஏற்றுக்கொள்ள தொடங்கினேன். வாதத்திற் குரிய எல்லா அடிப்படைக் காரியங்களையும் நான் தீவிரமாக ஆராயத் தொடங்கினேன். இந்தவிதமான ஆராய்ச்சியானது அதிகாரம் நிறைந்த ஒரு சமுதாயத்தில் என்னை சிக்கலுக்குள்ளாக்கியது. அந்த சமுதாயத்தில் நான் கேள்விகள் கேட்கக் கூடாது. ''அல்லாவின் முகத்துக்கு முன்பாக நீ நிற்காமல் விலகி ஓடு'' என்று அது உனக்கு கூறுகின்றது. ''கீழ்ப்படி, அவ்வளவுதான்'' என்கின்றது இஸ்லாம். ''இஸ்லாம் சகோதரத்துவம்'' என்ற எங்கள் அமைப்பில் எங்களது குறிக்கோள் என்னவெனில் ''நாங்கள் கேள்விப்பட்டோம். நாங்கள் அதற்கு கீழ்ப்படிகின்றோம்'' என்பதுவே.

வருடக்கணக்கான படிப்புக்கு பின்னர் வேதாகமத்தை குறித்து திட்டவட்டமான 2 தீர்மானங்களுக்கு நான் வந்தேன். முதலாவது, வேதாகமமானது கறைதிரையற்ற தேவனுடைய வார்த்தை என்பதை நான் கண்டுகொண்டேன். இரண்டாவதாக, இயேசு கிறிஸ்து தேவனுடைய வார்த்தை என்பதை நான் அறிந்தேன். எனது அறிவாற் றலுக்கு எட்டியது வரை கிறிஸ்தவத்தின் எல்லா விசுவாச சத்தியங்களை யும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டேன். எனினும் எல்லாம் வல்ல இறைவனை ''எனது பிதா'' என்று அழைப்பதைக்குறித்து நான் சிந்தித்த போது பயத்தால் தாக்குண்டு செத்தவனைப்போலானேன். அப்படி அழைக்கவேண்டுமானால் ஒரு அற்புதம் நடந்தே தீரவேண்டும் என நான் எதிர்பார்த்தேன்.

எனது உள்ளத்தின் ஆழத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலையில் எங்களது தொழுகைக்கான பள்ளிவாசலில் நான் அல்லாவை நோக்கி ''கடவுளே, சத்தியத்தை எனக்குச் சொல்லுங்கள். இயேசுவா? அல்லது முகமதுவா? நீங்கள் எனது பிதாவா? சத்தியத்தை எனக்கு காண்பியுங் கள். நீங்கள் வழிகாட்டும் அந்த சத்தியத்தை நான் எனது வாழ்நாட் காலம் எல்லாம் என்ன கிரயம் கொடுத்தாகிலும் நான் சேவிப்பேன்'' என்றேன்.

மேற்கண்ட வார்த்தைகளை நான் சொன்ன உடனே எனது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது. காரணம், அதற்கான கிரயத்தை அதாவது அதினால் ஏற்படக்கூடிய பயங்கரமான எதிர் விளைவுகளை என் போன்ற சிறிய, பெலவீனமான மனிதனால் எப்படி சந்திக்க இயலும்? எனது குடும்பத்தைவிட்டு அடித்து விரட்டப்பட்டு தெருக்களிலும், வீதிகளிலும் ஒரு வீடற்ற பிச்சைக்காரனைப்போல நான் எப்படி படுத்திருக்க இயலும்? இஸ்லாமிய சகோதரத்துவத்தின் தலைவர்கள் எனது காரியத்தை குறித்துக் கேள்விப்பட்டால் என்ன நடக்கும்? இஸ்லாமிய நீதியில் பயங்கரமான வைராக்கியம் கொண்டுள்ள அவர்கள் எடுத்த எடுப்பில் என்னை தீர்த்துக்கட்டி விடுவார்கள். ''தனது இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு வேறு மார்க்கத்துக்கு செல்லுபவனை கொல்லுங்கள்'' என்று கூறிய முகமது நபியின் வார்த்தைகள் எனது காதுகளில் தொனித்துக்கொண்டே இருந்தன.

நான் கண்ணீர் நிறைந்த கண்களோடு ''கடவுளே, நான் உங்களை நேசிக்கின்றேன். நீர் என்றும் சதாகாலமும் நித்தியமாக வாழ்பவர் என்பதை நான் அறிவேன்'' என்று கூறினேன். எனது முகம் முழுவதும் கண்ணீரால் நிரம்பிய நிலையில் நான் தூக்கத்திலிருந்து எழுந்தேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனது உள்ளத்தை உலகம் தரக்கூடாத சந்தோசத்தால் நிரம்பி வழியும் அளவுக்கு நிறைத்திருந்ததை நான் கண்டேன். இயேசுவைக் குறித்து தாகமும், வாஞ்சையும் என் உள்ளத்தில் பெருக்கெடுத்து ஓடியது. எனது சந்தோசப் பெருக்கால் நான் துள்ளிக்குதித்து இரட்சகரை துதித்துப் போற்றினேன். இரவும் பகலும் அருமை நேசரோடு பேசிக்கொண்டிருந்தேன். படுத்து நித்திரை செய்யும்போது கூட வேதாகமத்தை எனது நெஞ்சோடு ஒட்டிவைத்து அணைத்துப் பிடித்தவாறு தூங்கினேன். நான் எனது ஜெபத்தில் கேட்பவை யாவையும் அவர் தருகிறவராக இருந்தார். நான் இன்னும் அதிகமாக அவரது நாமத்தை நேசிக்கவும், அவரைப்போற்றவும், துதிக்கவும் அவர் விரும்பினார்.

முட்புதர் பாதை

என்னுடைய விசுவாசத்தை நான் எனக்குள்ளாக இரகசியமாக அடக்கி வைத்துக்கொண்டேன். அதின் காரணமாக நான் இரகசியமாக ஒரு பாஸ்ட்டருடைய வீட்டிற்குச் சென்று அவரது வீட்டிலேயே நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன். இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றுக்கொண்டிருந்த நான் அதை மறைத்து வைக்கவோ அல்லது இரட்சகர் இயேசுவை மறுதலிக்கவோ இயலாத நிலையில் நான் எனது அனுபவத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டேன். ஒரு தடவை எனது சிறு பிராய நண்பன் ஒருவன் ''இயேசு சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டாரா?'' என்று என்னிடம் கேட்டான். நான் அவனுக்கு

மறுமொழியாக ''ஆம்'' என்று கூறிவிட்டு அவர் மரிக்க வேண்டியதன் அவசியத்தை தெளிவாக அவனுக்கு விளக்கிக்கூறினேன். ஆண்டவர் இயேசுவை தனது சொந்த இரட்சகராக அவன் தனது இருதயத்தில் ஏற்றுக்கொள்ள நான் அவனுக்கு தேவ ஆலோசனைகள் கொடுத்தேன். பின்னர் நாங்கள் இருவருமாக சேர்ந்து ஜெபித்தோம்.

என்னோடு அவன் சேர்ந்து ஜெபிக்கும்போது நடுநடுங்கினேன். அவனது உடம்பிலிருந்து வியர்வை தாராளமாக வடியத்தொடங்கியது. நான் ஆரம்பத்தில் சேர்ந்திருந்த இஸ்லாம் சகோதரத்துவம் குழுவினர் எனது நண்பன் இயேசுவைக் குறித்து பேசுவதை தங்கள் காதுகளால் கேட்டு அவனைப் பிடித்து ''இந்த தேவதூஷணமான காரியங்களை உனக்கு கற்பித்தவன் யார்? நீ அந்த ஆளை எங்களுக்கு சொல்லாத பட்சத்தில் நாங்கள் உன்னைக் கொல்லுவோம்'' என்று பயமுறுத்தவே எனது நண்பன் பயத்தின் காரணமாக என்னைக்காட்டிக்கொடுத்து விட்டான். அவர்கள் என்னை பிடித்துக்கொண்டு சென்று நாங்கள் தொழுகை செய்யும் மசூதிக்கு முன்பாக என்னை நன்கு அடித்தார்கள். இதே மசூதிக்கு முன்பாகத்தான் இஸ்லாம் மார்க்கமே மெய்யான மார்க்கம் என்று நான் வைராக்கியத்தோடு ஒரு சமயம் முழக்கமிட்டு பேசி இருக்கின்றேன். நான் தேவ தூஷணம் செய்த ஒரு வேதப்புரட்டன் என்றும், நான் மனம் மாறுத பட்சத்தில் மரண தண்டனையே எனக்கு காத்திருக்கிறது என்பதையும் அவர்கள் நன்கறிந்திருந்தனர் எனது மதமாற்றத்தை இஸ்லாமுக்கும், அல்லாவுக்கும் நான் செய்த மன்னிக்க முடியாத மாபெரும் துரோக செயலாக அவர்கள் கருதினர்கள்.

எனது மதமாற்றம் வெளிப்படையாக யாவருக்கும் தெரிந்துவிட்ட படியால் என்னைக் கொல்லுவதற்காக எனது முந்தைய இஸ்லாமிய நண்பர்கள் சதித்திட்டம் தீட்டினர்கள். அதை அறிந்த நான் எனது ஜீவன் தப்ப ஓடினேன். எனது சொந்த கிராமமான டெல்ட்டாவிலிருந்து இஸ்லாமியா என்ற இடம் வரை ஒரு கூட்டம் முகமதிய மக்கள் என்னைக் கொல்லுவதற்கு பெரும் பிரயாசம் எடுத்தனர். ஆனால், தேவன் அவர்களின் கைகளில் என்னை ஒப்புக்கொடுக்கவில்லை. இறுதியில் நான் எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு வந்து சேர்ந்தேன். அங்கு வசிக்கும் எனக்கு தெரிந்த சில கிறிஸ்தவ நண்பர்களை நான் அணுகினேன். என்னை தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ள அவர்கள் மிகவும் பயந்து நடுங்கினர்கள். எனவே, வேறு புகலிடம் இல்லாமல் நான் திரும்பவுமாக எனது கிராமத்துக்கே வந்து சேர்ந்தேன். அங்கே என்னை துன்புறுத்த ஒரு கூட்டம் இஸ்லாமியர் கோபத்துடன் எனக்காக காத்துக்கொண்டிருந்தனர். எனது வேதாகமம், எனது கிறிஸ்தவ புத்தகங்கள், தேவனுடைய வசனங்கள், பாடல்கள் அடங்கிய அநேக கேசட்டுகளை எல்லாம் அவர்கள் தீயில் போட்டு கொழுத்தி சாம்பலாக்கினர்கள்.

என் அருமை தாயார் எனது கிறிஸ்தவ மதமாற்றத்தின் காரணமாக கருப்பு உடை உடுத்தியிருந்தார்கள். கருப்பு ஆடை உடுத்தினால் அது புலம்பலுக்கும், துக்கத்துக்கும் அடையாளமாக எகிப்து நாட்டிலே கருதப்பட்டது. ''உனது தாயாருக்கு இந்த கதி உன்னிமித்தமாக உண்டாகத் தேவையே இல்லை. ஏழை மாது ! அவள் மகன் கிறிஸ்தவ நாஸ்திகர்களோடு சேர்ந்துகொண்டு பெற்ற தாயை புறக்கணித்து விட்டான்'' என்று பெண்கள் எல்லாரும் என்னைக்கண்டு தங்கள் பற்களை கடித்தார்கள். இந்தச் சமயம் ஜோர்டான் நாட்டிலுள்ள எனது நண்பன் ஒருவனிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்து கிடைத்தது. அதில். ஜோர்டான் நாட்டில் வேலை பார்க்கும் எனது தகப்பனார் தன்னோடு வேலை பார்க்கும் முகமதிய மக்கள் எனது மதமாற்றத்தின் காரணமாக எனது தகப்பனாரை கடுஞ்சொற்களால் இழிவுபடுத்தி பேசுவதால் அவர் தனது வேலையைவிட்டு விட்டு தெருக்கள் வழியாக அழுதுகொண்டே நடப்பதாக எனக்கு எழுதியிருந்தான்.

கர்த்தரின் நாமம் பலத்த துருகம், நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்

எகிப்தின் தலைநகரான கெய்ரோ பட்டணத்தில் எகிப்திய பாப்திஸ்த்து சபையின் ஒரு நண்பனுடைய வீட்டில் நான் தங்கியிருந்தேன். அந்த நண்பன் என்னை எல்லா நேரங்களிலும் வெகுவாக ஆறுதல்படுத்திக்கொண்டே இருந்தான். நான் மனமடிவாகி அழுது அங்கலாய்க்கும் நேரங்களில் எல்லாம் கீழ்க்காணும் தேவ வசனத்தை அவன் எனக்கு வாசித்துக் காண்பித்து எனக்கு ஆறுதல் கூறினான்.

> ''அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோசமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே கிறிஸ்துவென்று பிரசிங்கித்தார்கள்'' (அப் 5 : 41-42)

ஒரு நாள் மேற்கண்ட எனது சிநேகிதன் எனக்கு ஒரு அராபிய மொழி புதிய ஏற்பாட்டைக் கொடுத்து ''எனது பெற்றோர் உன்னை எங்கள் வீட்டில் மறைத்து வைப்பதற்காக பெரிதும் அஞ்சுகின்றார்கள். தொடர்ந்து உன்னை ஒளித்து வைத்தால் எகிப்திய அரசாங்கம் அவர்களை என்றென்றைக்குமாக சிறையிலே போட்டுவிடும் என்று பயப்படுகின்றார்கள்'' என்று அவன் என்னிடம் சொன்னான். நான் இனி எங்கே போக இயலும் ? நான் செய்யக்கூடியதெல்லாம் தேவனுடைய பாதுகாவலின் கரங்களில் அடைக்கலம் புகுவதே என்பதை நான் திட்டமாக உணர்ந்தேன்.

இப்பொழுது நான் எனது சொந்தக் கிராமத்தை நோக்கி சென்று கொண்டிருந்தேன். எனது நண்பன் எனக்குக்கொடுத்த அராபிய மொழி புதிய ஏற்பாட்டை நரன் எனது சப்பாத்துக் காலுறைக்குள் பத்திரமாக வைத்து ''ஆண்டவரே, எனது அராபிய மொழி புதிய ஏற்பாடு கீழே விழுந்துவிடாதபடி அதை பாதுகாத்துக்கொள்ளும்'' என்று ஒரு குட்டி ஜெபமும் செய்துகொண்டேன் எனது வழித்தடத்தில் போலீசார் என்னைக் கைது செய்து சிறையில் போட்டார்கள். கொஞ்ச நாட்களுக்குப் பின்னர் அவர்கள் என்னை விடுதலை செய்தனர். திரும்பவும் போலீசார் என்னைக் கைது செய்து ஜெயிலில் போட்டனர். இந்த கைது நடவடிக்கை விட்டுவிட்டு நடந்து கொண்டே இருந்தது. இந்த துயர அனுபவமானது என் உள்ளத்தை உடைத்து நொறுக்க இயலவில்லை. சிறைக்கூடங்களில் நான் இருந்தபோதும் கர்த்தருக்குள்ளான எனது களிகூருதலின் மிகுதியால் நான் ஆனந்தப்பாடல்கள் பாடிக்கொண்டே இருந்தேன். எனது கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. விடிவெள்ளி நட்சத்திரமாம் இயேசு இரட்சகர் என்னை வந்து விடுவிக்கும்படியாக அவரை ஒவ்வொரு நாளும் எதிர் பார்த்த வண்ணமாக நான் காத்துக் கொண்டிருந்தேன். சிறைக்கூடத் தில் என் ஆத்துமா ஆண்டவருக்குள் அமர்ந்து அமைதலாக தேவ சமாதானத்தால் நிறைந்து இருந்தது. அங்கிருந்த நாட்களில் எல்லாம் நான் என்னைக் குறித்து சிந்திக்காமல் என் இயேசுவைக் குறித்தே எல்லா நேரமும் தியானம் செய்து கொண்டிருந்தேன்.

சிறைக்கூடத்தில் நான் எனது வேதாகமத்தை திறந்து அடிக்கடி கீழ்க்கண்ட தேவ வசனங்களை வாசித்து கர்த்தருக்குள் ஆறுதல் அடைந்தேன் :-

''அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம். புத்தியீன மாய் பேசுகிறேன். நான் அதிகமாய் பிரயாசப்பட்டவன். அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.

யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிப்பட்டேன்

மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒரு தரம் கல்லெறியுண் டேன், மூன்று தரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப் பகல் முழுவதும் போக்கினேன்.

அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன், ஆறுகளால் வந்த மோசங் களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுய ஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங் களில் உண்டான மோசங்களிலும், வனாந்திரத்தில் உண்டான மோசங் களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரி டத்தில் உண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும்,

அநேகமுறை கண் விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேக முறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்'' (11 கொரி 11 : 23-27)

என்னைக்கொண்டு தேவன் நிறைவேற்றப்போகும் தமது மேலான ஊழியத்தினிமித்தம் அவர் என்னை இவ்விதமான பாடுகள், போராட்டங் களுக்கு ஊடாக வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்றார் என்பதை நான் திட்டமாக அறிந்து கொண்டேன்.

எனது வேதாகமத்தை போலீசார் அடிக்கடி பறிமுதல் செய்துவிடுவ தால் அதை வெகு பத்திரமாக மறைத்துவைக்கும் ஒரு இடத்தை நான் உபாயம் செய்து தேடிக்கொண்டிருந்தேன். அந்த மறைவிடத்தை போலீசார் எந்தவிதத்திலும் கண்டு கொள்ளாதிருக்க முயற்சித்தேன். இறுதியாக நான் எனது முயற்சிகளில் வெற்றியும் பெற்றேன். அந்த மறைவிடம் எனது இருதயம் மட்டுமே என்பதை நான் கண்டு கொண்டேன். எனவே, என்னால் முடிந்த அளவு ஏராளமான தேவனு டைய வசனங்களை மனப்பாடமாக படித்து அவைகளை என் இருதயத் துக்குள் வைத்துக்கொண்டேன். அந்த நாட்களிலிருந்து வேதபுத்த கத்தை நான் எனது தலைமாட்டில் வைத்துத்தான் இரவில் தூங்கினேன். தேவனுடைய பரிசுத்த வேதாகமம் உலகத்தின் எல்லா பொக்கிஷங்களை காட்டிலும் விலையேறப்பெற்றதாகவும் தேனிலும், தெளி தேனிலும் மதுரமாகவும் எனக்கு இருந்தது.

நீதியின் பாதையில் ஜீவன் உண்டு அந்தப் பாதையில் மரணம் இல்லை

ஆண்டவர் இயேசுவை எனது சொந்த இரட்சகராக நான் ஏற்றுக் கொண்டு 5 ஆண்டுகள் கடந்து சென்றுவிட்டன. எகிப்து தேசத்திலுள்ள எனது சொந்தக்கிராமத்தில் பயமுறுத்துதல்களுக்கும், கொலைமிரட்டல் களுக்கும், மரணப்போராட்டங்களுக்கும் நடுவில்தான் நான் இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். என்னை ஆட்கொண்ட கர்த்தர் என்னை கண்மணி போல தமது கரங்களால் பாதுகாத்து உலகத்திடமிருந்து வரக்கூடிய எதிர்ப்புகள், அச்சுறுத்தல்கள் யாவையும் நான் தைரியமாய் வெற்றிகொண்டு முன் செல்லத்தக்கதான தமது கிருபைகளையும், இரக்கங்களையும் நாள்தோறும் அபரிதமாக எனக்கு அளித்துக்கொண்டு வருகின்றார்.

ஒரே ஒரு காரியத்தை நான் இங்கு கூறாமல் எனது சாட்சியை முடிப்பேனானால் அந்த சாட்சி முற்றுப்பெற்ற ஒரு சாட்சியாக ஒருக்காலும்

இருக்க இயலாது. எனது தாயார் தன்னுடைய கட்டுக்கடங்காத ஆவலில் என்னை எப்படியாவது கிறிஸ்தவத்திலிருந்து எங்களது பழைய இஸ்லாமியத்துக்குத் திருப்பிவிட ஆசைகொண்டு ஒரு சூனியக்காரியை அணுகி தனது சூனியத் திறமையைக்கொண்டு என்னை முகமதிய மார்க்கத்துக்கு கொண்டு வர முயற்சித்தார்கள். தாயாரின் விருப்பப்படி அந்த சூனியக்காரி எங்கள் வீட்டுக்கு வந்து எல்லா உறவினர்களின் மத்தியில் அவர்கள் எல்லாரும் ஆச்சரியத்தால் பிரமிப்படையும்படியாக இவ்வித மாக கூறினாள். ''உங்கள் குமாரன் இப்பொழுது பின்பற்றிச்செல்லும் பாதையிலிருந்து இனி ஒருபோதும் திசை திரும்பப்போவதோ இல்லை அதை மறக்கப்போவதோ கிடையாது. அந்தப்புனிதப் பாதையில் அவன் நடக்கும் காலம் வரை அவன் தன் வாழ்வில் ஜெய கெம்பீர வெற்றி வீரனாக திகழுவான்''. இயேசு இரட்சகரைக்குறித்து இத்தனை ஆச்சரியமான வல்லமையின் சாட்சி சூனியக்காரியான அந்த பிசாசின் வாயிலிருந்து வந்தது. அந்த வார்த்தைகளைக் கேட்ட எனது இளைய உடன் பிறந்த சகோதரன் உடனே ஆண்டவர் இயேசுவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டான். எனவே, தேவனுடைய சித்தம் செய்வதில் நான் ஒருவன் மாத்திரம் தனிமையாக இருந்து போராட வில்லை. எனது தம்பியும் என்னுடன் சேர்ந்து கொண்டான். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலுடைய வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால்:-

> ''மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப்பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்''
>
> (ரோமர் 8 : 38, 39)

(நீங்கள் வாசித்த மேற்கண்ட அனுபவ சாட்சி ''சோயிங் சர்க்கிள்'' என்ற ஆங்கில கிறிஸ்தவ பத்திரிக்கையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட செய்தியாகும். இந்த சாட்சி சம்பந்தமாக ஏதேனும் கடிதம் எழுத விரும்புவோர் கீழே தரப்படும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும் :-

The Sowing Circle,
The Bible Society of India,
206, Mahatma Gandhi Road,
Bangalore - 560 001.

பரதேசியின்

மோட்ச பிரயாணம் - 16

உபாயியைச் சந்தித்தல்

இப்படி அவர்கள் இருவரும் பேசிக்கொண்டு மாயாபுரியின் கோட்டை வாசலைக் கடக்கவே, தங்களுக்கு முன்னே நடந்துபோன ஒருவனைக்கண்டு அவனுடன் கூடினர்கள். அவனுக்கு உபாயி என்று யெயர். (உபாயி:- இது லோக வாழ்வுக்கடுத்த விஷயங்களில் அனுகூலமாக இருக்கும் மட்டும் பக்தர்போல் நடந்துகொண்டு அதற்கு விரோதமான சம்பவங்கள் சம்பவிக்கும்போது பக்தியை முற்றிலும் விட்டுவிடுகிறவர்களைக் குறிக்கிறது. இவனுடைய பந்துக்களின் பெயர் மாயக்காரரின் குணங்களைக் காட்டுகிறது) கிறிஸ்தியானும், திடநம்பிக்கையும் அவனை நோக்கி : உமக்கு எந்த ஊர் ஐயா ? இந்த வழியாக நீர் எவ்வளவு தூரம் போகிறீர் ? என்று கேட்டார்கள். அதற்கு அவன் : நான் நயவசனபுரியில் இருந்து புறப்பட்டு வருகிறேன். உச்சிதபட்டணம் நோக்கி நடந்துபோய்க் கொண்டிருக்கின்றேன் என்றான். ஆனால் அவன் தன்னுடைய பெயரையோ சொல்லவில்லை.

நயவசனபுரியில் இருந்தா புறப்பட்டீர்? அவ்வூராருக்குள் எவனாவது யோக்கியன் உண்டா? (நீதி 26 : 25) என்று கிறிஸ்தியான் கேட்டான்.

உபாயி :- ஆம், நயவசனபுரியில் நல்லவர்கள் இல்லாவிட்டால் பின் எங்கேதான் இருப்பார்கள் ?

கிறிஸ்தியான் :- ஐயா நான் உம்மை என்ன பெயரால் அழைக்க வேண்டும். தயவுசெய்து சொல்லும்.

உபாயி :- நான் உங்களை அறியமாட்டேன், நீங்கள் என்னை அறியவும்மாட்டீர்கள். நீங்கள் இந்த வழியே போகிறது மெய்யானால் உங்களுடன் கூட வழிநடப்பது எனக்குச் சந்தோசம்தான். மற்றப்படி நான் தனிமையாகத்தான் போகவேண்டும்.

கிறி :- உம்முடைய நயவசனபுரியைக்குறித்து நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். அது மகா ஐசுவரியமுள்ள ஒரு பட்டணம் என்று கேள்விப்பட்டதாக எனக்கு ஞாபகம் உண்டு.

உபாயி :- அதற்கும் சந்தேகமா ? அது வாழ்வுள்ள ஒரு பட்டணம் என்பதற்குச் சந்தேகம் இல்லை. அவ்விடத்து மகாராஜரான பலர் எனக்கு பந்துக்கள்தான்.

கிறி :- நான் துணிந்து கேட்பதையிட்டு நீர் விசனம் அடைய வேண்டாம். அவ்விடத்திலுள்ள உமது இனஜனபந்துக்கள் யார் ஐயா ?

உபாயி :- ஏறெக்குறைய எல்லாரும் என் பந்துக்கள்தான். ஆனல் வெகு நெருங்கிய இனத்தாரை மாத்திரம் சொல்லுகிறேன். கட்சிமாறி நாயனூர் இருக்கிறூரே அவர், சமயதந்திர மன்னர், இந்தப் பட்டணத் திலே முதலாவது குடியேறி, தமது பெயரையே அதற்கு இட்ட குடும்பத் தலைவராகிய நயவசனி இருக்கிறூரே அவர் ஆகிய உயர்குலத்தோரும், இனியன் இருமுகன் ஆகிய இவர்களும் என் பந்துக்கள்தான். எங்கள் ஊர் மூலஸ்தான குருவாகிய இருநாக்கு இருக்கிறூரே அவரும் தூரம் உள்ளவர் அல்ல. அவர் என் பிதா வழியில் தாய் மாமன்தான். இன்னும் நிஜத்தை சொல்லவேண்டுமானல், நான் பேரெடுப்புள்ள ஒரு பிரபுவாக்கும். எனது பாட்டனூரோ ஒரு படகோட்டிதான். அவர் ஒரு திசை நோக்கி மறு திசையாய் தண்டுவலிக்கிற மகாசமர்த்தர். நானும் அந்தப்படியே தண்டுவலித்துத்தான் திரண்ட பொருளைச் சம்பாதித்துக் கொண்டேன் என்ருன்.

கிறி :. நீர் ஒண்டிக்காரரா? கலியாணம் செய்தவரர ?

உபாயி :- கலியாணக்காரன்தான். என் மனைவி மகா பதிவிரதா பத்தினி. அவள் பத்தினி வயிற்றில் பிறந்த பத்தினிதான் அப்பா ! யாருடைய மகள் சொல்லட்டுமா? அவள் போலியம்மாள் பெற்ற செல்வபுத்திரியாக்கும். ஆகையால் அவள் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். பெரிய வீட்டுக்காரி மகள் ஆனபடியால் அரசனுனலும் சரி ஆண்டியானலும் சரி எல்லாருக்கும் இணக்கமானபடி நடந்துகொள் ளத்தக்க பெருந்தன்மை புத்தியுடையவளாய் இருக்கிருள். எங்களுக்கும் மார்க்க விசயங்களில் பக்தியாய் நடந்துகொள்ள பிரயாசப்படுகிறவர் களுக்கும் அவ்வளவு ஒத்துவராது என்பது மெய்தான். ஆனல் என்ன ? இரண்டு அற்பமான காரியத்திலேதான் அந்தப் பேதம் இருக்கிறது. அது என்னவென்ருல் முதலாவது நாங்கள் காற்றுக்கும் அலைக்கும் எதிர்த்துப்போகிறதில்லை. இரண்டாவது மார்க்கமானது வெள்ளிச் சப்பாத்தைப் போட்டுக்கொண்டு தெருவீதி ஏறுகிறபோது நாங்கள் அதிக வைராக்கியம் உடையவர்களாய் ஆகிறேம். இச்சமயத்தில் சூரியப் பிரகாசம் பளிச்சென்று பிரகாசிக்கவும், ஜனங்கள் ஆர்ப்பரித்துப் புகழவும் நேரிட்டால் எங்களுக்கு மெத்தவோ மகிழ்ச்சி உண்டாகிறது என்று சொன்னுன்.

இவ்வளவும் கேட்டவுடனே கிறிஸ்தியான் சற்றே விலகி நடந்து தன் தோழனுகிய திடநம்பிக்கையண்டை சென்று, காரியத்தை பார்த்தால் இவன் நயவசனபுரியில் உபாயி என்றுதான் என் மனதில் படுகிறது. இவன் அவனேயானல் அவ்விடத்து துஷ்டர் எல்லாரிலும் பரமதுஷ்டன் நமக்கு தோழன் ஆனன் என்று அறிந்துகொள்ள வேண்டியதுதான்

என்ருன். அதற்குத் திடநம்பிக்கை : அவன் பேரைத்தான் கேளுமேன், பேரைச்சொல்லவும் அவனுக்கு வெட்கம் இருக்குமா ? அப்படி வெட்கப் படமாட்டான் என்று எனக்குத் தோன்றுகிறது என்ருன். அப்புறம் கிறிஸ்தியான் மறுபடியும் மெதுவாய் அவனண்டை சேர்ந்து, ஐயா நீர் பேசுகிறதைப்பார்த்தால் உம்மிடத்திலுள்ள அறிவு உலகம் முழுவதிலும் உள்ளவர்களிடத்திலும் இல்லே போலக் காணப்படுகின்றது. ஆனல், நான் வரம்பு தப்பிப் பேசுகிறதாக நீர் எண்ணவேண்டியதில்லே. உம்மைப்பற்றி எனக்கு இனம் தெரியும்போல் இருக்கிறது. உம்முடைய நாமதேயம் நயவசனபுரியின் உபாயி அல்லவா ?

உபாயி :- ஆ-கா-கா ! அது என்னுடைய பெயர் அல்ல. ஆனல் என்மேல் பொருமைப்படுகிற சிலர் இந்த வக்கணைப்பேரால் என்னைக் கூப்பிடுகிறதுண்டு. நல்லோர் அநேகர், நிந்தையான பலபேர்களே மகிமையாக எண்ணி இதற்குமுன் ஏற்றுக்கொண்டதுபோல, நானும் இதை மகிமையாக ஏற்றுக்கொள்ள வேண்டியதாய்த்தான் இருக்கிறது.

கிறி :- ஆனல் இதற்குமுன் பலரும் இந்தப்பேரால் உம்மை அழைக்கும்படி நீர் இடம்பண்ணிக் கொண்டதில்லேயோ ?

உபாயி :- இல்லவே இல்லே. இந்தப்பேரால் என்னை அவர்கள் அழைக்கும்படி இடம்பண்ணிக்கொண்ட கெட்டகாலம் எதுவென்ருல், காலத்துக்கும் சமயத்துக்கும் தக்கதாக நான் என் சொந்தப் புத்தியின்படி நடந்து, நல் அதிர்ஷ்டம் அடைகிறதுண்டு. அந்த முறையாக நல்ல வாழ்வும், பாக்கியமும் எனக்குப் பெருகிற்று. சிலர் என் அதிர்ஷ்டத்தைப் பார்த்து மனம் பொருமல் இப்படி வக்கணைப் பேர் சொல்லுகிறதுண்டு. ஆனலும் இப்படிப்பட்ட காரணத்தைத் தொட்டு ஒரு அவகீர்த்தி உண்டாகுமானல் அதை நான் ஆசீர்வாதம் என்றே எண்ணிக்கொள்ள வேண்டியவனுக இருக்கின்றேன். அதினலே பொருமைக்காரர் என்மேல் அவகீர்த்தியை குவிக்கவேண்டியதில்லே.

கிறி :- நான் கேள்விப்பட்டிருந்த ஆள் நீர்தான் என்று நினைத்தது சரிதான். என் மனவிருப்பத்தை உள்ளபடி சொல்லவேண்டுமானல் நீர் விரும்பினலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, இந்தப் பேர் உமக்கே தகுதியானதாய் இருக்கிறது என்று எனக்கு நன்ருய்த் தோன்றுகிறது.

உபாயி :- உம்முடைய மனதில் அப்படி அபிப்பிராயப்பட்டால் அதற்கு நான் என்ன செய்யக்கூடும் ? ஆனல் என்னை உங்கள் கூட்டா ளியாகச் சேர்த்துக்கொள்ளப் பிரியம் இருக்குமானல் என்னை நல்ல தோழன் என்று அறிந்துகொள்ளுவீர்கள் என்பது மெய்.

கிறி : நீர் எங்களோடு கூட வருகிறது மெய்யானால், காற்றுக்கும் அலைக்கும் எதிர்த்துப்போக வேண்டியது. அப்படி எதிர்ப்பதோ உமது மனதுக்கு விரோதமாய் இருக்கிறதாய்போல தோன்றுகிறதே. உமது வார்த்தையின்படி மார்க்கமானது வெள்ளிப் பாதரட்சை போட்டு வீதிவழி வரும்பொழுது மாத்திரம் அல்ல, அது கந்தை கட்டினதாய்க் கடைத் தெருவில் வரும்போதும் அதைச்சார்ந்திருக்க வேண்டியது. தெருக்களில் புகழ்ச்சி பெறும்பொழுது மாத்திரம் அல்ல, இரும்பு விலங்குகளோடு போகும்போதும் அதைச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்றே.

உபாயி :- நீங்கள் என் மனதைக்கட்டாயப்படுத்தி என் விசுவாசத் துக்கு ஆண்டவன்மாராய் இருக்கக் கூடாதே. என்னே என் இஷ்டத் துக்கு விட்டுவிடுங்களேன். நான் கூடவே வருகிறேன்.

கிறி :- அது எப்படி ஆகும்? நான் முன் சொல்லியபடி நீரும் செய்யாவிட்டால் ஒரு அடி எடுத்துவைத்தல் ஆகாது என்று கிறிஸ்தியான் சொன்னான்.

இப்படி சொன்னவுடனே உபாயி சொல்லுகிறான்: நீங்கள் என்ன சொன்னாலும் சொல்லுங்கள். என்னுடைய அபிப்பிராயங்களில் யாதொரு குற்றம் இல்லை. மேலும் அதினால் அதிக லாபம் இருக்கிறது. ஆகையால் நான் என் பழைய எண்ணங்களை விடவேமாட்டேன். உங்களுடன்கூட வருகிறதற்கு வகை இல்லை என்றால், உங்களை சந்திக்குமுன் நடந்து வந்ததுபோல தனித்து நடந்து போவேன். என் நோக்கத்துக்கு இசைந்தவன் எவனாவது பின்னாலே வந்து சேர்ந்தால் அப்புறம் நாங்கள் சல்லாபமாய் பேசி உல்லாசமாய் நடந்து வருவோம். நீங்கள் போங்கள் என்று சொன்னான்.

உபாயியின் தோழர் சந்திப்பு

அப்புறம் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் உபாயியை விட்டுப்பிரிந்து முன்னெட்டி நடந்துபோனார்கள். சற்று தூரம் போனவுடன் இருவரில் ஒருவன் பின் நோக்கிப் பார்த்தான். பார்க்கவே உபாயியோடு வேறு மூன்று பேர் கூடி வருவதைக்கண்டான். அவர்கள் கிட்டவந்தவுடனே உபாயி அவர்களுக்கு தலைகுனிந்து வந்தனம் செய்தான். அவர்களும் அவனுக்கு மரியாதை செய்தார்கள். அம்மூவரில் ஒருவனுக்கு **உலகப்பற்று** என்றும் மற்றவனுக்கு **பணவாஞ்சை** என்றும் வேறொரு வனுக்கு **பிசினாறி** என்றும் பெயர். இவர்கள் மூவரும் உபாயியினுடைய பள்ளி தோழர்கள்தான். இவர்கள் எல்லாரும் இச்சித்தல் என்ற பெயர் வழங்கப்பட்ட வடநாட்டு வியாபார பட்டணங்களில் ஒன்றாகிய ஆதாய வாரிபுரி என்னும் ஊரில் இருந்த சர்வகலாசாலைத் தலைவராகிய

பணம்பிடுங்கி என்னும் வித்வசிரோன்மணியின் பாதத்தில் படித்தவர் களாய் இருந்தார்கள். இந்த உபாத்தியாயர் பலவந்தமாயாவது, தந்திர உபாயமாயாவது, இதம் பேசியாவது, பொய் பேசியாவது, தேவபக்தியின் வேஷம் போட்டாவது, மாயம் போட்டாவது தமது மாணக்கர் பணம்பிடுங்கி பெரிய குடித்தனக்காரராகிவிட நன்ருய் படிப்பித்து வந்தார். அவருடைய கல்விச்சாலையில் படித்த மாணக்கர் அனைவரிலும் இந்த நான்கு பேரும் கல்வியில் தேறின ஆசாமிகள் ஆகி விட்டதால் அப்புறம் அவரவரே இப்படிப்பட்ட ஒவ்வொரு பள்ளிக் கூடத்தை சுயமாக ஏற்படுத்தி நடத்திவந்தார்கள்.

அவர்கள் பூர்வோத்தரம் இப்படியிருக்க, நான் முன் சொல்லியபடி அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து, மாற்றி மாற்றி வந்தனங்கள் பண்ணிக்கொண்ட பின்பு பணவாஞ்சை என்பவன், அதோ நமக்கு முன்னே போகிறூர்களே அவர்கள் யார்? என்று உபாயியைக் கேட்டான், ஏனெனில் கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் அவர்கள் கண்ணெட்டும் தூரத்துக்குள்தான் போனர்கள்.

உபாயி :- அவர்கள் யாரோ தூர தேசத்தார். அவர்கள் தங்கள் மனப்போக்கின்படியே பிரயாணம் செய்கிறவர்களாக்கும் என்ருன்.

பணவாஞ்சை :- ஐயோ ! ஏன் நின்ருர்கள் இல்லே, எல்லாருங்கூடி ஒரே கும்பலாகப் போகலாமே அவர்களும், நாங்களும், ஐயா ஒருவேளை நீரும் கூட மோட்சபிரயாணம்தானே போகிறேம் ?

உபாயி :- ஆம், நாம் எல்லாரும் அந்தப் பயணத்தில்தான் இருக்கின்ருேம். ஆனல் அதோ முந்திப்போகிறூர்களே அவர்கள் வெகு கண்டிப்புக்காரர். தங்கள் மனதில் அபிப்பிரயங்களின் மேல் பிரியங் கொண்டிருக்கிறூர்கள். ஒரு மனுஷன் எவ்வளவு பக்தியுடையவனய் இருக்கட்டுமே, அவன் அவர்கள் கருத்துக்கு இசைந்து நடவாவிட்டால், அவனை முற்றிலும் அசட்டைபண்ணி தங்களோடுகூட வரக்கூடாது என்று துரத்திவிடுகிறூர்கள்.

பிசினறி :- அது மகா கெட்ட குணம். சில பூரண பக்தரை குறித்து நாம் வாசித்திருக்கிறேம். அப்படிப்பட்டவர்களுடைய அதனபக்தியானது தங்களைத்தவிர மற்றவர்களுக்கு இரட்சிப்பே இல்லே என்று துணிந்து சொல்லும்படி அவர்களை ஏவிவிடுகிறது ஆனல், உமக்கும், அவர்களுக் கும் வித்தியாசப்பட்ட விஷயங்கள்தான் என்ன ? எந்தக் காரியங்களில் நீங்கள் ஒருவருக்கொருவர் பேதப்பட்டிருக்கிறீர்கள் என்று சொல்லும்படி உம்மை மன்ருடுகிறேன்.

உபாயி :- அவர்கள் தங்கள் முரட்டுக்குணத்துக்குத்தக்கதாக. மழை ஆனாலும் சரி, வெயில் ஆனாலும் சரி, ஆடை ஆனாலும் சரி, கோடையானாலும் சரி பிரயாணத்தை நடத்தவேண்டும் என்கிறார்கள். நானே காற்று நின்று கடலின் அலை தணிகிறது பார்த்து புறப்படலாம் என்கிறேன். அவர்கள் தேவசகாயத்தை நம்பிக்கொண்டு திடும்பிரவேசமாய் சகலத்தையும் முடிக்கப்பார்க்கிறார்கள். நானே ஜீவநாசமாவது பொருள் நஷ்டமாவது சம்பவியாதபடி சகலத்தையும் ஆற அமர்ந்து நடத்தப் பிரயாசப்படுகின்றேன். எல்லாரும் அவர்கள் நோக்கத்துக்கு விரோதமாய் சொன்ன போதிலும் அவர்கள் தங்கள் கருத்தே சிறந்ததென்று சொல்வார்களேயன்றி, மாறுகிறதில்லை. நானே என் மட்டுக்குக் காலத்துக்கேற்றதாகவும் பொருள் நஷ்டம் ஆகாமலும் எல்லா விஷயங்களிலும் தேவபக்தியைப்பிடித்துக்கொண்டிருக்கின்றேன். அவர்கள் கந்தைகட்டி கனவீனப்படுகிற சமயத்திலும் பக்தியைவிடக்கூடாது என்கிறார்கள். நானே அந்த பைத்தியமான புத்தியைத் தள்ளிப்போட்டு, அது தன் வெள்ளிப் பாதரட்சைகளைத்தொடுத்துக்கொண்டு, சூரியப் பிரகாச வேளையில் சம்பிரமமாய் வீதி வழி வரும்போது அதைப் பிடித்துக் கொள்ளுவேன் என்று சொல்லுகிறேன் என்றான்.

உலகப்பற்று :- அதைக்கேட்டவுடனே உலகப்பற்று என்பவன் சொல்லுகிறான்: ஆம், ஆம், அது சரி என் பிராண சிநேகிதராகிய உபாயி என்பவரே ! உமது கருத்தை விடாதேயும். ஒருவன் தனக்கு அகப்படும் ஆதாயங்களைக் காபந்துபண்ணிக்கொள்ளச் சுயாதீனமுடையவனாய் இருந்தும், விவேகமில்லாமல் அதை கைநழுவ விட்டுவிடுவானானால் அவனைப்போல மூடன் இல்லை என்று என் புத்திக்குத்தோன்றுகிறது. நாமோ சர்ப்பங்களைப்போல விழுவுள்ளவர்களாயிருப்போமாக. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுவது உத்தமம். தேனீக்களைப் பாருமேன். அவை மாரி காலமெல்லாம் சும்மாய் இருந்து, வெயில் காலத்தில் லாபம் அடையும்படியாக சந்தோசத்தோடு பூவுக்குப் பூ பறந்து திரிகின்றன. தேவன் சில காலத்தில் மழை பெய்யவும், சில காலத்தில் வெயில் எரிக்கவும் செய்கின்றார். அவர்கள் மழை காலத்தில் பயணம் போகவேண்டும் என்று சாதிக்கிற மதிகேடராய் இருந்தால் இருக்கட்டும். நாம் வெயில் காலத்தில் சுகமாய் நடந்து போகலாம். என் மட்டுக்குச் சொன்னால் தேவன் நமக்கு அருளும் ஆசீர்வாதங்களை பேணிக் கொடுக்கிற மாதிரியான தேவபக்தி எதுவோ அப்படிப்பட்ட பக்தியின் மேலேதான் எனக்குப் பிரியம் இருக்கிறது. இந்த ஜீவியத்திற்கு அடுத்த நல்ல வாழ்வுகளை தேவனே தந்திருக்கையில் அவர் நிமித்தம் நாம் அவைகளைப் பேணிக்கொள்ளல் ஆகாது என்று தன் சுயயோசனையின்படி எவனாவது தீர்மானிக்கக்கூடுமா ? ஆபிரகாமும், சாலொமோனும் பக்தியோடு பக்தியாய் பணக்காரராயும் இருந்தார்கள். மேலும் யோபு என்பவர்,

நல்ல மனுஷன் பொன்னைத் தூளைப்போல் சேர்த்து வைப்பான் என்றும் சொல்லி இருக்கிறார். அதோ முந்தி நடக்கிறார்களே அவர்கள் நீர் சொன்ன குணம் உடையவர்களானால், யோபு சொல்லுகிற மனுஷன் அவர்களைப் போல் இருக்கக்கூடாதே.

பிசினறி :- எனக்குத் தோன்றுகிறபடி நாம் எல்லாரும் இந்தக் காரியத்தில் ஏகமனமுடையவர்களாய் இருக்கிறதினால் அதைப்பற்றிப் பேச்சை வளர்ப்பது அவசியம் இல்லை.

பணவாஞ்சை :- அந்தப் பேச்சை நிறுத்தவேண்டும் என்பது சரிதான். ஏனெனில் நாம் நம்முடைய அபிப்பிராயத்தை வேதத்துக்கும், புத்திக்கும் இசைவாகத் தீர்மானித்திருப்பது போல், எவனெருவன் தன் அபிப்பிராயத்தை நிலைநாட்டாமல் இருப்பானே அவன் தனக்குள்ள சுயாதீனத்தை அறியாமலும் தன் வாழ்வைத்தேடாமலும் இருப்பான்.

உபாயி :- நாம் எல்லாரும் ஏகமாய் பரலோகம் பிரயாணம் போகிறவர்களாய் இருக்கிறேமே, நாம் ஆகாமியத்திற்கு விலகிக் கொள்ளும்படியாக நான் ஒரு பொதுக்கருத்தை உங்களுக்கு எடுத்துச் சொல்லும்படி நீங்கள் உத்தரவு கொடுக்க வேண்டியது.

ஒரு குரு, அல்லது ஒரு வியாபாரி அல்லது வேறு எவனுவது இருக்கிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். அவனுக்கு முன்பாக, இந்த ஜீவனுக்குரிய மேலான பாக்கியங்கள் சில வைக்கப் பட்டிருக்கின்றன. அந்தப் பாக்கியங்களை அவன் தேவபக்திக்குரிய சில காரியங்களில் வேஷம் போட்டால் அன்றி மற்றப்படி அடைந்து கொள்ள ஏதுவே இல்லை என்றும் வைத்துக்கொள்ளுவோம். இப்படிப்பட்ட சமயத்தில் அவன் தேவபக்தியின் வேஷம் தரித்து அவைகளை சம்பாதித்துக்கொண்டு அதோடு நல்லவனுகவும் இருப்பது தோஷம் ஆகுமோ ?

பணவாஞ்சை :- ஓகோ ! உமது கேள்வியின் ஆழம் எனக்கு விளங்குகிறது. இந்தக்கனவான்களுடைய சம்மதப்படி நான் அதற்குத் தகுமான உத்தரவை சமைத்துச் சொல்லுகிறேன் கேளும். முதலாவது : ஒரு குருவின் சம்பந்தமாய் நீர் சொல்லுகிறதைப்பற்றி பேசுவோம். ஒரு குரு இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளும். அவருக்கு குரு யோக்கியதை எல்லாம் இருந்தும், அற்ப வரும்படியுள்ள ஒரு சபையே கிடைத்திருக்கிறது. அவர் அதிக வருமானமும், செல்வாக்கும், அந்தஸ்தும் தருகிறதற்கு ஏதுவான மற்றெரு கோவிலையும், சபையையும் நாடுகிற போது, அதுவும் தேவாதீனமாய் அகப்பட்டுக்கொள்ளுகிறற்போல் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். அச்சமயத்தில் அவர் அதிக ஆராய்ச்சி செய்கிறதும், அந்தக்காலத்து ஜனங்களின் குணகுணத்துக்கு ஏற்றபடி அடிக்கடி பிரசங்கிக்கிறதும், வைராக்கியமாய் விளக்குகிறதும், சபையாரின் கருத்துக்கு இசைவாகத் தமது சொந்தத்தீர்

மானங்களின் சிலதை மாற்றிக்கொள்ளுகிறதுமாய் இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். இப்படிப்பட்ட ஒரு அழைப்பு தனக்கு இருக்குமானால், அந்தக்குரு இந்தப்படி செய்கிறதினாலே, அல்லது இதற்கு மிஞ்சி செய்தபோதிலும் தப்பிதம் என்று சொல்லக்கூடுமோ? என் மனதுக்கு தோன்றுகிறபடி அவர் இவை எல்லாவற்றேடுங்கூட நல்லவராய் இருக்கலாமே - எப்படியெனில் :

(1) அதிக வரும்படியுள்ள கோயில் உத்தியோகம் தெய்வாதீனமாய் அவருக்கு கிடைக்கிறதான படியால் அதை அவர் நாடுவது நியாயம் தான். அது நியாயம் அல்ல என்று ஒருவரும் சொல்லக் கூடாது. மனச்சாட்சியில் மாத்திரம் அவருக்கு மயக்கம் இல்லையானால் தாராளமாக பெற்றுக் கொள்ளலாம்.

(2) அதுவும் அல்லாமல், அதிக வரும்படியுள்ள கோவில் உத்தியோகத்தின் மேலுள்ள ஆசையானது அதிக வேத ஆராய்ச்சிக்கும், அதிக பக்தி வைராக்கியத்துக்கும், நல்ல பிரசங்கத்துக்கும் அவரை ஏவி எழுப்பி முன்னிலும் தேறினவராக்குகிறது. இவையெல்லாம் தேவசித்தம்தானே.

(3) அந்த குரு ஜனங்களின் குணகுணங்களுக்குத் தக்கதாக தம் முடைய போக்கை மாற்றிக் கொள்ளுகிற விஷயத்தைப்பற்றி சொன்னால் அப்படி அவர் மாற்றுகிறதினாலே முதலாவது தன்னை வெறுக்கிற குணம் உடையவர் என்றும் இரண்டாவது மற்றவர்களை தன் வசம் இழுத்துக் கொள்ளும் நேசகுணமுடையவர் என்றும் மூன்றுவது குருவானவருக்கேற்ற அதிக யோக்கிய குணசாலி என்றும்தானே நன்றாய் விளங்குகிறார்.

(4) ஆகையினால் என் தீர்மானம் என்னவென்றால், ஒரு குரு அதிக வரும்படிக்காக, சொற்ப வரும்படியுள்ள சபையை விட்டுவிடுகிறது பொருளாசையினால் மாத்திரமே என்று தீர்ப்புச் சொல்வது நியாயமாய் இராமல் தனக்குக்கிடைத்த நற்காலத்துக்குத் தக்கதாக தன் உத்தியோகத்துக்கு அடுத்தவைகளை தேர்ச்சியாக்கி, சுறுசுறுப்போடு தன் அழைப்பில் முயற்சி செய்கிறவர் என்றே நாம் தீர்மானிக்கவேண்டும்.

இப்போது நீர் வியாபாரிகளையும் மற்றவர்களையும் குறித்துச் சொன்ன இரண்டாம் பாகத்தைக் குறித்து நான் சொல்லுகிறதைக் கேளும்: ஒரு மனுஷன் தாழ்ந்த உத்தியோகத்தில் இருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அவன் பக்தியுள்ளவனாகிறதினாலே தன் வாழ்வை வர்த்திக்கப்பண்ணக்கூடும். ஒரு வேளை ஒரு பணக்காரியை விவாகம் பண்ணிக்கொள்ளலாம். அல்லது பணக்காரரான அதிகம் பேரை தன் கடைக்கு வாடிக்கைக்காரர்களாக பிடித்துக்கொள்ளலாம். இப்படிச் செய்கிறது தோஷம் அல்லவென்றே என் மனதுக்குத் தோன்றுகிறது. அதெப்படி என்று கேட்பீரோ?

(1) ஒரு மனுஷன் எந்த உபாயங்களினால் ஆனாலும் சரி அவன் பக்தியுள்ளவனாகிறது நற்குணம்தான்.

(2) பணக்காரியைக் கலியாணம் செய்வதும், பெரியோரை வாடிக்கை பிடிப்பதும் அநியாயமா?

(3) அதுவுமன்றி தேவபக்தியுள்ளவன் ஆகிறதினாலே, இவ்வளவு லாபத்தையும் சம்பாதித்துக் கொள்ளுகிற ஒரு மனுஷன்தானே நல்லவன் ஆகிறதினால் நல்லவர்களிடத்தில் உள்ள நல்லவைகளாயே தனக்கு வசப்படுத்திக்கொள்ளுகிறான். அவனுக்கு நல்ல மனைவி அகப்பட்டிருக்கிறாள். நல்ல வாடிக்கைக் காரர் கிடைத்திருக்கிறார்கள். நல்ல லாபம் கிட்டியிருக்கிறது. இவையெல்லாம் அவன் பக்தியுள்ளவன் ஆகிறதினாலேதான் கிடைத்தன. அந்த பக்தியும் நலமானதுதானே. ஆதலால் இந்த நன்மைகளை அடையும்படி ஒருவன் பக்தியுள்ளவனாகிறது நலமும் அனுகூலமுமான நோக்கமாகவே இருக்கிறது.

உபாயி என்பவர் ஸ்தாபித்த கருத்துக்கு, பணவாஞ்சை என்பவர் விவரமாய் சொல்லிய இந்த தாற்பரியம் மிகவும் பொருத்தம், பொருத்தம் என்று அவர்கள் எல்லாராலும் புகழ்ந்து கொள்ளப்பட்டது. ஆதலால் அந்த கருத்து மொத்தத்தில் ஆரோக்கியமும், ஆதாயமுமான முறை என்று அவர்களால் தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானத்தை எதிர்த்து மடக்கிப்போட எவனாலும் கூடாது என்று அவர்கள் எண்ணிக் கொண்டபடியினாலும், கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் இன்னும் கூப்பிடு தூரத்துக்குள்ளேதான் போய்க்கொண்டிருந்தபடியினாலும், விசேஷமாய் முன்னே அவர்கள் உபாயியை எதிர்த்துப் பேசினபடியினாலும், சற்று எட்டி நடந்து அவர்களைப் பிடித்து, இந்தக் கேள்வியைப் போட்டு மடக்கிவிடவேண்டும் என்று ஏகமாய் யோசித்துக்கொண்டார்கள். அந்த யோசனையின்படியே இவர்கள், அவர்களை நின்று போகும்படிக் கூப்பிட்டார்கள். அப்படியே இவர்கள் வந்து சேரும்மட்டும் கிறிஸ்தியானும், திடநம்பிக்கையும் நின்றார்கள். இவர்கள் அவர்களண்டை நடந்து போகும்போதே ஒருவருக்கொருவர் சொல்லுகிறார்கள் : உபாயி என்பவருக்கும் அவர்களுக்கும் விவாதம் நேரிட்டுப் போனதால், அவர் இனி அவர்களை மடக்கும் இந்தக் கேள்வியைப் போட்டால் எரிகிற கொள்ளிக்கு எண்ணெய் வார்த்தால் போல் இருக்கும். ஆதலால் உலகப்பற்று என்பவர் கேட்டால்தான் நலம். அப்போது அவருக்கு பழையபடி எரிச்சலோடு உத்தரவு சொல்லாமல் சாவதானமாய் சொல்லுவார்கள் என்று தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள்.

அப்படியே அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து ஒருவருக்கொருவர் மினவிக்கொண்டபின்பு உலகப்பற்று என்பவன் அந்தக் கேள்வியைக் கிறிஸ்தியானுக்கும் அவன் கூட்டாளிக்கும் சொல்லி, இதற்கு மறுமொழி கொடுங்கள் பார்ப்போம் என்றான்.

அதற்கு கிறிஸ்தியான் சொல்லுகிறான் : தேவபக்தியில் குழந்தையாய் இருக்கிறவன் முதலாய் இம்மாதிரி பத்தாயிரம் கேள்விகளுக்கு உத்தரவு சொல்லக்கூடும். யோவான் சுவிசேஷத்தில் சொல்லிய வண்ணம் (யோ 6 : 26) போஜனத்துக்காக இரட்சகரைப் பின்பற்றுவது நியாயம் அல்ல. ஆனால், அவரையும் தேவபக்தியையும் உலகத்தின் வாழ்வுகளை சம்பாதிக்கும்படி ஏறிப்போகிற குதிரையைப்போல வைத்துக் கொள்ளுகிறது எவ்வளவு அநியாயம் என்று சொல்லவேண்டியது. இப்படிப்பட்ட எண்ணம் அஞ்ஞானிகளுக்குள்ளும், மாயக்காரருக்குள்ளும், பிசாசுகளுக்குள்ளும், பில்லிசூனியக்காரருக்குள்ளும் இருக்கிறதாக நான் கண்டேனேயல்லாமல் மற்றவர்களுக்குள் நான் கண்டதில்லை.

முதலாவது :- அஞ்ஞானிகள் இப்படி நினைக்கிறார்கள் என்று சொன்னேனே, அது எப்படி என்று கேளுங்கள். ஏமோருக்கும் சீகேமுக்கும் யாக்கோபின் மகள் மேலும் ஆடுமாடுகள் மேலும் நாட்டம் உண்டான போது, தாங்கள் விருத்தசேதனம் பெற்றால் அன்றி அவைகளில் ஒன்றும் தங்களுக்குக் கிட்டாது என்று கண்டு, தங்கள் சிநேகிதரை நோக்கி : அந்த மனிதர் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களாய் இருக்கிறது போல, நம்மிலுள்ள ஆண்மக்கள் யாவரும் விருதசேதனம் பண்ணப் பட்டால், அவர்களுடைய ஆடுமாடுகள், ஆஸ்திகள், மிருகஜீவன்கள் எல்லாம் நம்மோடு சேரும் அல்லவா ? என்று சொன்னான். அவர்கள் விரும்பியதெல்லாம் யாக்கோபின் குமாரத்தியும் அவனுடைய ஆடு மாடுகளுமே. அவைகளைச் சம்பாதிக்கும்படி அவர்கள் ஏறிப்போன பக்தியின் குதிரையும் இதுதான் (ஆதி 34 : 20-24).

இரண்டாவது :- மாயக்காரராகிய பரிசேயரும் இப்படிப்பட்ட பக்தியுடையவர்கள்தான். அவர்கள் வெளிக்கு நீண்ட ஜெபங்கள் செய்வார்கள், உள்ளுக்குள் எந்தக் கைம்பெண் வீட்டைக்கட்டை மண்ணும் குட்டிச்சுவரும் ஆக்கிவிடலாம் என்ற கருத்துடையவர்களாய் இருப்பார்கள். இவர்கள் மேல் தேவன் அதிக ஆக்கினையை சுமத்தி யிருக்கிறார் (லூக் 20 : 46, 47)

மூன்றாவது :- யூதாசு என்ற பிசாசும் இவ்வித பக்தியில் சேர்ந்தவன் தான். அவன் பணப்பையில் போடப்படுகிறதை அபகரித்துக்கொள்ளும் படியான கருத்துக்கொண்ட பக்தனாக இருந்தான். ஆகையால் அவனைப் பணப்பையின் பகதிமான் என்று நாம் சொல்லலாம். அவன் கைவிடப் பட்டு புறம்பாகத் தள்ளப்பட்டு, கேட்டின் மகனாக கெட்டே போனான்.

நான்காவது :- பில்லிசூனியக்காரனாகிய சீமோனும் இவ்விதபக்தியில் சேர்ந்தவன்தான். இவன் திரண்ட பணத்தை சம்பாதிக்கும் படியாக பரிசுத்த ஆவியானவர் தனக்கு வேண்டும் என்று விரும்பினான் அவனுக்கு பேதுரு சொன்ன உத்தரவு தகுதியானதுதான் (அப் 8 : 10-22)

ஐந்தாவது :- என் மனதில் இருக்கிற இன்னொரு தீர்மானம் ஒருக்காலும் மாறமாட்டாது. அதாவது: லோக வாழ்வுகளைச் சம்பாதிக்கும்படி தேவபக்தியை கருவியாக பயன்படுத்துகிறவன், லோக வாழ்வுக்காக தன் பக்தியை விட்டுவிடுவான். ஏனெனில், யூதாஸ் உலகத்தை நாடி பக்தியுள்ளவனானது எப்படியோ அப்படியே உலகத்துக்காக தன் பக்தியையும் தன் எஜமானையும் விற்றே போட்டான். ஆதலால் உங்கள் கேள்விக்கு நான் நினைக்கிறபடி நீங்கள் எல்லாரும் ஒத்துக்கொண்ட பிரகாரம், ஆம், ஆம், அது சரி என்று சொல்லுகிறதும், அது மெய்தான் என்று ஏற்றுக்கொள்ளுகிறதும், அஞ்ஞானமும், மாய்மாலமும், பேய்த்தனமுமாய் இருக்கின்றன. உங்களுக்கு கிடைக்கிற பலனும் உங்களுடைய கிரியைகளுக்கு தக்கதாகவே இருக்கும் என்று சொல்லி முடித்தான்.

கிறிஸ்தியான் இப்படிச் சொல்லவே, அவர்கள் எல்லாரும் எதிர் வார்த்தை பேச சக்தியற்று, திருகத்திருக விழித்து ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். திடநம்பிக்கை என்பவரும் கிறிஸ்தியானுடைய தெளிந்த புத்தியுள்ள உத்தரவை கவனித்து அது சரி என்று ஒத்துக்கொண்டார். ஆகவே அனைவரும் கம்மென்று சற்று நேரம் அமைதலாய் இருந்தார்கள். அப்புறம் கிறிஸ்தியானும் அவன் தோழனும் முந்திப்போகட்டும் என்ற மனம் உடையவர்கள்போல், உபாயியும், அவனுடைய தோழரும் மெதுவாய் நடந்தார்கள். இப்போது கிறிஸ்தியான் தன் தோழனைப்பார்த்து : இவர்கள் மனிதருடைய நியாயதோரணைக்கு முன்நிற்கவே கூடாததானால் தேவனுடைய நியாயத் தீர்ப்புக்கு எப்படி எதிர் நிற்கக்கூடும்? களிமண் பாண்டங்களுக்கு முன்பாக கட்டைபோல் நிற்கிற இவர்கள், பட்சிக்கிற அக்கினிஜ்வாலை பற்றி எரியும்போது என்ன செய்வார்கள் என்றான்.

ராஜஸ்தான் மாநிலம் பரத்பூரில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு துதி உண்டாவதாக. ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பரத்பூர் பட்டணத்துக்கு தேவ ஊழியத்தின் பாதையில் 28 வருடங்களுக்கு முன்பாக நான் சென்றதுண்டு. அந்த 1971 ஆம் ஆண்டில்தான் அங்குள்ள காவல் துறையினர் என்னை பாக்கிஸ்தான் உளவாளி என்று எண்ணி சாதாரண உடையில் என் பின்னல் சுற்றிக் கொண்டிருந்தனர். கர்த்தர் என்னை தமது திருக்கரத்தால் அந்த நாட்களில் அற்புதமாக பாதுகாத்துக்கொண்டார்.

கால் நூற்றாண்டுக்கும் கூடுதலான இந்த இடைவெளியில் பரத்பூரே தலைகீழாக மாறிவிட்டது. பெருகிய ஜனப்பெருக்கம் பட்டணத்தை ஆட்கொண்டுவிட்டது. அதற்கு ஏற்றாற்போல வாகனங்களும் பெருகி, கட்டிடங்களும், வீடுகளும் நிரம்பி வழிகின்றது. மனிதனை மனிதன் ஏமாற்றும் கொடிய குணமும் மக்களிடையே பெருகிக்கிடப்பதை துலாம்பரமாக காண முடிந்தது. அன்று காணப்பட்ட மாந்தரின் அன்பு தணிந்து மக்களிடையே மாயமும், கபடமும், எப்படியாவது பணம் சம்பாதிக்கவேண்டுமென்ற வியாபார தந்திரங்களும் கொடிகட்டி பறப்பதை எங்கும் காண முடிந்தது.

திரும்பவும் இந்த பட்டணத்திற்கு வந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்ய எங்களுக்குக் கொடுத்த ஒரு நல்ல வாய்ப்புக்காக ஆண்டவருக்கு துதி செலுத்தினேம். இந்த பட்டணத்திலுள்ள காம்சேன் என்ற தர்ம சாலையில் நாங்கள் தங்கியிருந்தோம். முற்றும் வசதியற்ற ஒரு அறைதான் இந்த தர்மசாலையில் எங்களுக்கு கிடைத்தது. அந்த அறையில் கிடந்த மின்சார விளக்கின் மிகக்குறைந்த வெளிச்சம் காரணமாக நாங்கள் எங்கள் வேதபுத்தகத்தை கூட வாசிக்க இயலாமல் வெளியே சென்று வேறு ஒரு மின் விளக்கின் ஒளியில் வேதாகமத்தை வாசித்தோம். அந்த அறை மிகவும் வசதி குறைவாக இருந்தபோதிலும் நாங்கள் அதற்காக சந்தோசப்பட்டோம். காரணம், மொட்டை மாடியில் அமையப்பெற்றிருந்த அந்த அறையிலிருந்து வான வீதியில் காலையிலும், மாலையிலும், கூட்டம் கூட்டமாக பறந்து செல்லும் தேவனுடைய அற்புதப்படைப்பான பல்வேறு நாடுகளின் வாத்துக் கூட்டங்களை கண்டு கர்த்தருக்குள் பரவசமடைய அது எங்களுக்கு உதவியாக இருந்தது.


உலகப் புகழ்பெற்ற நீர்ப்பறவைகளின் சரணாலயம்

கேலடா பறவைகள் சரணாலயம் உலகப்புகழ்பெற்ற ஒன்றாகும். அது இந்தப் பரத்பூர் பட்டணத்துக்கு அருகாமையில்தான் உள்ளது. இந்த பறவைகள் சரணாலயம் 29 சதுர கி. மீ. பரப்பளவு உள்ளதாகும். ஆண்டுக்கு 1 லட்சம் பறவைப்பிரியர்கள் இந்தியாவிலும், உலகின் பல வெளி நாடுகளிலிருந்தும் இதைக்காண வருகின்றனர். 375 வகைப் பறவைகள் இங்கிருப்பதாக கணக்கிட்டுள்ளனர். நீர்பறவைகள் கூடு கட்டி முட்டையிடும் ஒரு பருவகாலத்தில் மாத்திரம் சுமார் 10000 கூடுகளை குஞ்சுகளுடன் எண்ணியிருக்கின்றார்கள் என்றால் அந்த பறவை களின் சரணாலயத்தின் சிறப்பை நீங்களே நன்கு யூகித்துக்கொள்ளலாம்.

இந்த இடத்தை காணவேண்டுமானால் சரணாலயத்தின் முகப்பிலுள்ள அரசாங்க அலுவலகத்தில் ரூபாய் 20 கொடுத்து ஒவ்வொருவரும் டிக்கெட் எடுத்துக்கொள்ள வேண்டும். நானும், சகோதரன் நார்ட்டன் அவர்களும் முந்தின தினத்தன்றே அங்கு சென்று பறவைகள் சரணாலயத் திற்குள் செல்லும் விபரங்களை எல்லாம் கேட்டறிந்தோம். அவர்கள் சொன்ன விபரங்கள் எல்லாம் எங்களுடைய தலைகளை சுழல வைப்பதாக இருந்தன.

காட்டிற்குள் பறவைகளை காணச்செல்ல சைக்கிள் ரிக்ஷாக்கள் உள்ளன. அவைகளில் சென்றால் மணிக்கு ரூபாய் 30 வாடகை கொடுக்க வேண்டும். இல்லை, தனி சைக்கிள் வாடகை எடுத்துச் செல்லலாம். அதற்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 100 ஆகும். சைக்கிள் ஒன்றுக்கு தலா 1000 ரூபாய் அட்வான்ஸ் கொடுக்கவேண்டும். சைக்கிள் ரிக்ஷா எடுத்தால் நம் விருப்பப்படி காட்டிலுள்ள எல்லா இடங்களுக்கும் சென்று பொறுமையாக நின்று பார்க்க இயலாது. பணமும் நிறைய வசூலித்து விடுவார்கள். சைக்கிளில் போனால், இடையில் அது எதாவது பழுதாகிப் போனால் நாம் கடுங்கஷ்டத்துடன் சைக்கிளையும் தூக்கிக்கொண்டு வர வேண்டும். அத்துடன் கட்டின முன் பணம் ஆயிரத்தில் ஏதாவது நம்மீது பழிபோட்டு கணிசமான பணத்தையும் பிடித்தம் செய்து கொள்ளுவார்கள். எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்தக் காரியத்தை முற்றுமாக தேவ ஆலோசனைக்காக நாங்கள் விட்டு விட்டு அமர்ந்திருந்தோம்.

அடுத்த நாள் காலை தேவனுடைய திட்டவட்டமான ஆலோசனை எங்களுக்குக் கிடைத்தது. அதாவது, பறவைகள் சரணாலயத்தை கால் நடையாகவே நடந்து பார்ப்பது என்று நாங்கள் தீர்மானித்தோம். அதின்படி காட்டு வழியில் சாப்பிடுவதற்காக சில பிஸ்க்கட் பாக்கெட்டு களையும், தண்ணீர் பாட்டல்களையும் வாங்கிக்கொண்டு ஜெபத்தோடு காலை சுமார் 9 மணிக்கு பறவைகளின் கானகத்திற்குள் நுழைந்தோம்.



அந்தக்கானகத்துக்குள் அன்று கால்நடையாகச் சென்றது நாங்கள் இருவர்தான். மற்றவர்கள் எல்லாரும் சைக்கிள் ரிக்ஷாக்களிலும், சைக்கிள்களிலும் காட்டைச் சுற்றிப்பார்க்க சென்றனர். அப்படிச் சென்றவர்கள் ''பைத்தியக்காரர்கள் இருவர் வழிநடந்து வருகின்றனர்'' என்று எங்களைப்பார்த்து சிரித்தவாறே சென்றனர்.

தேவன் எங்களை ஏன் கால்நடையாக காட்டைப்பார்க்க அனுமதித்தார் என்பதை பின்னர் நாங்கள் கண்டு அவருக்கு துதி ஸ்தோத்திரங்களை



ஏறெடுத்தோம். நாங்கள் காட்டுக்குள் நுழைந்த சற்று நேரத்துக் குள்ளாகவே ஒரு பெரிய நரி இடது கைப்பக்கத்தில் உள்ள நீர் குட்டைக் குள் நடந்து செல்லுவதை கவனித்தோம். நரி முகத்தில் முழித்தால் அந்த நாள் நலமான நாளாக இருக்கும் என்ற ஒரு தமிழ் பழமொழிப்படி அந்த நரி முகத்தில் முழித்துச் சென்றது எங்களுக்கு சந்தோசமான நாளாகவே அமைந்தது (தமாஷாக இதை நான் குறிப்பிடுகின்றேன்) சற்று நேரத்துக்குள்ளாகவே இன்னும் 3 நரிகளை நாங்கள் கண்டோம்.

பறவைகள் சரணாலயத்தில் ஓரிரு கி மீ. தொலைவு நாங்கள் நடந்ததும் திடீரென்று ஒரு பெரிய சந்தைக் கடையில் ஏற்படும் சந்தடி போன்று ஒரு பெரிய ஆரவாரத்தின் சத்தம் கேட்டது. என்ன ஆச்சரியம்! இப்பொழுது நாங்கள் எங்கள் வலது, இடது கைப் பக்கங்களிலுள்ள தண்ணீர் தடாகத்தில்!ஆங்காங்கு நிற்கும் ஏராளமான உயர்ந்த மரங்கள் ஒவ்வொன் றிலும் நிறைய கூடுகளில் வாழும் பலதரப்பட்ட நீர் வாழ் பறவைகளை குறிப்பாக செங்கால் நாரைகள், கூழக்கடாக்கள் போன்ற பெரும் நீர்ப் பறவைகளை பெரும் எண்ணிக்கையில் கண்டோம். அந்தக்கூடுகளிலுள்ள குஞ்சுகளும், தாய்ப்பறவைகளும் இடும் சத்தத்தால் அந்தக்கானகமே ஒரு பெரிய ஊர் சந்தை எழுப்பும் சத்தத்தால் எதிரொலிப்பது போல எதிரொலிக்கின்றது. மரங்களுக்கு கீழாக உள்ள நீர்பரப்பிலும் பலவித மான சிறிய வாத்துக்கள் நீந்திக்களிக்கின்றன. கூட்டம் கூட்டமாக நீந்தும் இவைகளெல்லாம் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்தவை களாகும். இப்படிப்பட்ட ஒரு காட்சியை நாம் எங்கும் காண இயலாது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே நீர்ப்பரப்பும், மரங்களுமாக, மரங்களிலே நிறைய பறவைக் கூடுகளுமாக, அவைகளில் வாழும் நீர்ப் பறவைகள் எழுப்பும் குரலோசையால் கானகம் மூழ்கியிருக்கின்றது. அந்த தண்ணீருக்குள் சில இடங்களில் புள்ளிமான்கள் புல் மேய்ந்த வண்ணமாக காணப்படுகின்றன.

29 சதுர கி. மீ. பரப்புக்கு அநேகமாக ஒரே தண்ணீரும், மரங்களு காக இருக்கும் ஒரு இடத்தை நீங்களே கற்பனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள். இதைக்குறித்து நான் அதிகமாக விவரித்துகொண்டு செல்லவில்லை. எனினும் தேவன் நாங்கள் இந்த இடத்தை காண வேண்டுமென்று விரும்பினார். அதிலும் குறிப்பாக பறவைப்பிரியனை நான் பார்த்து மகிழ ஆவல் கொண்டு தமது சித்தத்தின்படி காரியங்களை நடத்தினார். கலீடா பறவைகள் சரணாலயத்தின் முகப்பிலுள்ள காட்சி யையும், நீர்ப்பறவைகள் நிறைந்த அந்தக்காட்டின் ஒரு பகுதியையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

கர்த்தர் தமக்குப் பயப்படுகிறவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகிற தேவன்

''நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும்'' (நீதி 10 : 24) என்ற ஒரு அருமையான தேவ வசனம் உண்டு. பாவிக ளாகிய நம்மை தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நீதிமான் களாக்கிய தேவன் நமது விருப்பத்தின்படி செய்ய ஆவலுள்ள கர்த்தராக இருக்கின்றார். பறவைகளை அதிகமாக கவனிக்கின்ற, அவைகளை நேசிக்கின்ற எனக்கு வெகு காலமாக ஒரு ஆசை எனது உள்ளத்தில் இருந்துவந்தது. அது என்னவெனில், எப்படியாகிலும் பரத்பூருக்கு வரும் சைபீரிய நாரைகளை காணவேண்டும் என்பதுதான்.

நேப்பாளம், சிக்கிம், பூட்டான், மேற்கு தீபெத் என்று அழைக்கப் படுகின்ற லடாக், புத்தர்கள் அதிகமாக வாழும் ஸன்ஸ்கார் பள்ளத் தாக்கு, காஷ்மீரம், இமயமலைகள் மற்றும் இந்தியாவின் பல மாநிலங் களிலுள்ள பற்பலவிதமான அழகு, அழகான விந்தைப் பறவைகள் எத்தனை எத்தனையோ வகைகளை தேவ தயவால் நான் பார்த்து அவைகள் எழுப்பும் நூதனமானதும், இனிமையானதுமான குரல்களை எல்லாம் கேட்டிருக்கின்றேன். எனினும், உலகப்புகழ்பெற்றதும் தொடர்ச்சியாக 8000 கி. மீட்டர்கள் பறந்து செல்லக்கூடியதுமான ரஷ்யாவின் சைபீரிய நாரைகளை எப்படியாவது நேரில் பார்த்துவிட வேண்டும் என்று நான் வெகு காலமாக ஆசைப் பட்டுக்கொண்டிருந்தேன். எனது மனதின் ஆசையை தேவன் தமது நினைவில் வைத்திருந்து கடந்த ஆண்டான 1998 ஆம் ஆண்டில் அதை நிறைவேறச் செய்தார்.

இந்த சைபீரிய நாரைகள் பொதுவாக ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பரத்பூர் என்ற இடத்திலுள்ள உலகப்பிரசித்திபெற்ற கலீடா பறவைகள் சரணாலயத்திற்குத்தான் வந்து செல்லுகின்றன என்பதை நான் ஏற்கெனவே படித்து வைத்திருந்தேன். ஒரு காலத்தில் கூட்டம் கூட்டமாக வந்த இந்த சைபீரிய நாரைகள் நாளடைவில் குறைந்து குறைந்து இறுதியில் முற்றுமாக நின்றே போய்விட்டது. இந்த நாரைகள் ஆப்கானிஸ்தானம், பாகிஸ்தான் வழியாக வரும்போது அந்த நாடு களிலுள்ள ஏரிகளில் இறங்கும்போது மக்கள் அங்கேயே வேட்டையாடி தின்றுவிடுகின்றனர். அபூர்வமாக ஏதோ ஒரு ஆண்டில் சில நாரைகள் மட்டுமே இந்தியாவின் பரத்பூருக்கு வரும். பின்னர் ஒரிரு ஆண்டுகளுக்கு அவைகள் வருவதே கிடையாது.

ஆனால் கடந்த ஆண்டு சைபீரியாவிலிருந்து 2 நாரைகள் மாத்திரம் பரத்பூருக்கு அதிசயமாக வந்திருந்தன. நாங்கள் பரத்பூர் பறவைகள் சரணாலயத்துக்கு அதைப்பார்க்க செல்லுகின்றோம் என்று நாங்கள்

தங்கியிருந்த காம்சேன் தர்மசாலை மானேஜரிடம் குறிப்பிட்ட அந்த நாளின் காலை வேளை கூறினபோது அவர் எங்களைப் பார்த்து ''நீங்கள் நல்ல அதிர்ஷ்டசாலிகள். நேற்றுத்தான் 2 சைபீரிய நாரைகள் பரத்பூர் பறவைகள் சரணாலயத்துக்கு வந்திருப்பதாக செய்தி தாளில் செய்தி வந்துள்ளது'' என்று கூறி தனது மேஜை மீது கிடந்த இந்தி தினசரி பேப்பரை எங்களது கரங்களில் கொடுத்து அங்கு வந்திறங்கியுள்ள நாரைகளின் புகைப்படத்தையும் அந்த செய்தி தாளில் எங்களுக்கு மகிழ்ச்சி பொங்க சுட்டிக்காட்டினர். அதைக்கண்ட எனக்கு அளவற்ற ஆனந்தமாக இருந்தது. எனினும், அந்த சந்தோசம் நீண்ட நேரம் எனது உள்ளத்தில் நிலைத்து நிற்கவில்லை. காரணம், 29 சதுர கி. மீ. பரப்பில் அமைந்துள்ள அந்த பறவைகளின் கானகத்தில் எந்த இடத்தில் அவைகள் இருக்கின்றன என்று நாம் அவைகளை எப்படி கண்டுபிடிக்க முடியும் என்று நான் மனம் தளர்ந்து போனேன். எனினும் கர்த்தர் எனது ஆவலை நிறைவுசெய்ய தீர்மானித்திருக்கும்போது எந்த ஒரு தடை அதற்கு குறுக்காக நிற்க முடியும் ! கர்த்தருக்கே துதி உண்டாவதாக.


நாங்கள் சைபீரிய நாரைகளை தேடிக்கொண்டு அந்த பறவைகள் சரணாலயத்தில் கால்நடையாக சில கி. மீ. தொலைவு நடந்ததின் பின்னர் அவைகளை பார்த்துவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்களில் செல்லும் சில பறவைப் பிரியர்களை கண்டு அவைகள் இருக்கும் இடத்தை கேட்டோம். அவர் களில் ஒரு ஆங்கிலேய பறவைப்பிரியர் சைபீரிய நாரைகள் இருக்கும் இடத்தை திட்டவட்டமாக எங்களுக்கு விளக்கிக்கூறி அதற்கான வழித் தடத்தையும் சொன்னர். அவரது வார்த்தையின்படி நாங்கள் சென்றோம். ஒரு குறிப்பிட்ட இடம் வந்ததும் ஒரு சிறு கூட்டம் மக்கள் தங்கள் கரங்களில் தொலைநோக்கி கண்ணாடிகளுடன் ஏதோ ஒன்றை கூர்ந்து நோக்குவதை நாங்கள் கவனித்தோம். என்ன ஆச்சரியம் ! அந்த மக்கள் தேவனுடைய அந்த அற்புதப்படைப்பைத்தான் அத்தனை ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தனர். தைவான் நாட்டிலிருந்து வந்திருந்த பறவைப்பிரியர்களான இரு பெண்கள் தங்கள் விலையுயர்ந்த பைனாகுலர்களை எங்களிடம் கொடுத்து சைபீரிய நாரைகளை பார்க்கும் படியாக கூறினர்கள். சரியான நேரம் தேவன் அந்த பெண்களையும் அங்கு அனுப்பி வைத்திருந்தார். கர்த்தர் அந்த நாளில் எனது நீண்ட கால ஆவலை நிறைவு செய்தார். எனது மனங்குளிர அந்த அற்புதமான பறவையினத்தை கண்டு கர்த்தரை துதித்து அவருக்கு நன்றி கூறினேன்

சிருஷ்டி கர்த்தாவின் அற்புதமான படைப்பு

8000 கி. மீ. தொலை தூரத்தை அப்பொழுதுதான் பறந்து கடந்து வந்த ஒரு விமானத்தினுள் நீங்கள் ஏறிச்சென்று அந்த விமானத்தின் விமானி அறையை நீங்கள் சென்று பாருங்கள். ஆ, எத்தனை, எத்தனை யான கருவிகள். உயரம்காட்டும் கருவி, காற்றழுத்தம் காண்பிக்கும்

கருவி, திசைகாட்டும் கருவி, வேகம்காட்டும் கருவி, எரிபொருள் அளவு காட்டும் கருவி, சீதோஷ்ணநிலை காண்பிக்கும் கருவி, பூமியிலுள்ள விமான நிலையங்களோடு தொடர்பு கொள்ளும் தந்தியில்லா கம்பி கருவிகள் இன்னும் எத்தனை எத்தனையோ உபகரணங்கள் அந்த அறை முழுவதையும் மூடி மறைத்து இருப்பதை நீங்கள் பார்க்கலாம் (நான் எனது வாழ்வில் இதுவரை விமானம் ஏறியது கிடையாது. இனிமேல் ஏறும் ஆசையும் எனக்கில்லை.)

எட்டாயிரம் கி. மீ. தொலைவை கடந்து வந்த இரண்டு சைபீரிய நாரைகளை அதோ பாருங்கள் ! மேலே நாம் ஆகாயவிமானத்தில் கண்ட அத்தனை கருவிகளையும் அற்புத படைப்பாளியாம் தேவன் அந்த நாரைகளிலும்தான் வைத்து படைத்துள்ளார். ஆனால் ஒன்றும் வெளியே



தெரிவதில்லை. அதின் உடல் அமைப்பு, செட்டைகள், கால்கள் யாவிலும் அதின் சிருஷ்டிகர் அந்த அற்புதமான கருவிகளை மாட்டி வைத்துள்ளார். விமானத்தைப்போல தரையிலே சற்று தூரம் ஓடி வான வீதிக்குப் பறக்க ஆரம்பித்ததும் அத்தனை கருவிகளும் தத்தம் வேலைகளை நேர்த்தியாக செய்ய ஆரம்பித்துவிடுகின்றன. அவைகளின் உதவியால் கரைகாணு சமுத்திரங்கள், பாலைவனங்கள், காடுகள், பனிமலைகள், நாடு நகரங்கள் அனைத்தின்மேலும் சற்றும் பிசகில்லாமல் பறந்து கடந்து விமானமானது தனது விமான ஓடு தளத்தில் பத்திரமாக தரை இறங்குவது போல அத்தனை இலகுவாக வந்து தரை இறங்கி விடுகின்றது. ரஷ்ய தேசத்தின் சைபீரியாவை விட்டுப் புறப்பட்டால் இந்தியாவின் பரத்பூரிலுள்ள கேலடா பறவைகள் சரணாலயத்தில் கடந்த வருடம் தான் கூடுகட்டிய

மரத்தின் அந்தக்கூட்டிலேயே வந்து இறங்கிவிடுகின்றது. ஆ, தேவனுடைய படைப்பின் மாட்சிதான் என்னே! அந்த அற்புதமான படைப்பான சைபீரிய நாரைகளின் படத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். படத்தில் நீங்கள் பார்க்கும் வண்ணமாகவே அந்த இரு சைபீரிய நாரைகளையும் நாங்கள் பரத்பூரில் பார்த்தோம்.

தனித்துக்காணப்பட்ட சைபீரிய நாரைகள்

29 சதுர கி. மீ. பரப்பளவுகொண்ட கலீடா பறவைகள் சரணாலயத்தில் ஆங்காங்கு நீர்ப்பறவைகள் திரள் கூட்டம் கூட்டமாக இருக்கும் போது மேற்கண்ட சைபீரிய நாரைகள் மாத்திரம் முற்றும் தன்னந்தனியே இருப்பதை நான் கவனித்தேன். அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த நாரைகளுக்கு அருகாமையில் கொக்குகளோ, கூழக்கடாக்களோ, புள்ளினங்களோ மற்றும் எந்த ஒரு பறவைக் கூட்டங்களோ தென்படவில்லை. அந்த முழு பறவைகள் சரணாலயத்திலும் மேற்குறிப்பிட்ட சைபீரிய நாரைகள் மட்டும் தங்கள் தனித்தன்மையை காண்பித்து நின்றன. மாயாபுரி சந்தையிலே கிறிஸ்தியானும், உண்மை என்ற அவனது தோழனும் எப்படி உலக மக்களிடமிருந்து வேறுபட்டு காணப்பட்டார்களோ அவ்விதமாகவே அந்த இரு நாரைகளும் தனித்துக்காணப்பட்டன. நான் உலகத்தான் அல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல (யோ 17 : 16) என்று இயேசு இரட்சகர் தமது சீடர்களை சுட்டிக்காண்பித்துக் கூறினார். இந்த மாய உலக கானல் நீர் பொய்கையில் வந்து இறங்கியுள்ள நாமும் நம்மை இந்த உலகத்துக்கு அந்நியரும், பரதேசிகளுமாக காண்பிக்க வேண்டியதன் அவசியத்தை அந்த நாரைகள் எங்களுக்கு சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன. ''நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டு பிரித்தெடுத்தேன்'' (லேவி 20 : 26)

தூய வெண்மைதான் அதின் நிறம்

சைபீரிய நாரைகளின் நிறம் பளிச்சிடும் பனி வெண்மை நிறம் என்று பறவை நிபுணர்கள் கூறுகின்றனர். கொக்கு போன்ற நீர்ப்பறவைகளின் வெண்மை நிறத்தை சைபீரிய நாரைகளின் வெண்மை நிறத்துடன் ஒப்பிட இயலாது. நாங்கள் அந்த நாரைகளை வெகு தொலைவிலிருந்து தான் பார்க்க முடிந்தது. அருகில் செல்ல இயலாதவாறு தண்ணீர் சூழ்ந்து இருந்தது. தூரத்தில் அவைகள் இருந்தபோதினும் அவைகளின் பிரகாசமான வெண்மை நிறம் எத்தனை துலாம்பரமாக இருந்தது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள் ! மறக்கமுடியாத பளிச்சிடும் வெண்மை நிறம்.

பாவம் நிறைந்த இருள் சூழ்ந்த உலகில் நாம் வாழ்கின்றபோதிலும் நமது பரிசுத்தமான வாழ்க்கை மக்களுக்கு வெளிச்சம் வீசுவதாக இருக்க வேண்டும் என்பதை அந்த நாரைகளின் வெண்மை நிறம் பறைசாற்றுவ தாக இருந்தது. ''நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்'' (மத் 5 : 14) என்ருர் நம் அருமை இரட்சகர். தேவதூதனுடைய முகம் பிரகாசமாக இருக்கும். அந்த வெண்மை பிரகாசம்தான் ஸ்தேவானின் முகத்திலும் காணப்பட்டதாக நாம் வேதாகமத்தில் வாசிக்கின்ருேம். ''அவன் முகம் தேவதூதன் முகம் போலிருக்கக் கண்டார்கள்'' (அப் 6 : 15) அந்த முகச்சாயலே ஒவ்வொரு தேவபிள்ளையின் வாழ்விலும் முகத்திலும் பட்டொளி வீசி பிரகாசிக்க வேண்டுமென்று தேவன் எதிர் நோக்குகின்ருர்.

அடக்கமும், அமைதலும்தான் அதின் சுபாவம்

ரஷ்யாவின் சைபீரியா என்ற இடத்திலிருந்து வந்திருந்த அந்த இரு நாரைகளும் அடக்கமும், அமைதலும் உள்ளவைகளாக இருப்பதை நான் கண்ணுற்று அளவற்ற ஆச்சரியம் அடைந்தேன். சுமார் ஒரு மணி நேரம் நாங்கள் அந்த சைபீரிய நாரைகளே காண்பதில் செலவிட்டோம். வாழ்க்கையில் இப்படிப்பட்ட ஒரு காட்சியை யாவராலும் காண இயலாது அல்லவா ! உலகமெங்குமுள்ள பறவை பிரியர்கள் இந்தக்காட்சிக்காக தவம் கிடக்கின்ருர்கள். ஆனல், அவர்களில் அநேகருக்கு இந்த அற்புத காட்சி கிட்டுவதில்லே. இந்த அதிசய வான் பறவைகளே காண்பதற்காக நானு தேசங்களிலும் இருந்து பறவைப் பிரியர்கள்வந்து பரத்பூரிலுள்ள லாட்ஜ்களிலும், அரசாங்க விடுதிகளிலும் எத்தனேயோ நாட்களாக பணங்களேக்கொட்டி அல்லவா காத்திருக் கின்றனர்.

இந்த சைபீரிய நாரைகள் அடக்கம், அமைதலுள்ளவைகள். ஒரு சிறிய சதுப்பு நீர் பரப்புக்குள்ளேயேதானே அவைகள் தங்கள் இரைகளே தேடி சாவதானமாக அலகால் கொத்தி உண்டுகொண்டு நிற்கின்றன. அதே சமயம் வயலில் இரை தேடும் ஒரு கொக்கை எடுத்துக்கொள்ளுங் கள். அது விரைவாக அங்கும் இங்கும் தனது இரைக்காக பதறிக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கும். ஒரு இடத்தில் அமைதியாக சற்று நேரம்கூட அதினுல் அமர இயலாது. ஒரு மணி நேரத்திற்குள்ளாக அது தனது இரை தேடும் பணியில் எங்கெங்கெல்லாமோ போய்விடும். ஆனல், சைபீரிய நாரைகளேப் பொறுத்த அளவில் அந்த பதறுகின்ற, அமைதலற்ற குணத்தை நாம் காண இயலாது. ஒரு மணி நேரமும் அந்த ஒரு சிறிய இடத்துக்குள்ளேயே அமரிக்கையாக நின்று தங்களது இரைகளே மெள்ள தேடி உண்டு கொண்டிருந்தன.

ஒரு கிறிஸ்தவனுக்கு இந்த நாரைகளின் அடக்கமும், அமைதலு மான தேவ சுபாவம் எத்தனை தேவை ! மற்றவர்கள் தங்கள் வாழ்வில் வளமடைந்து துரிதமாக முன்னேறுவதைக்கண்டு அநேகருக்கு மனம் பொறுப்பதில்லை. அவர்களுடைய ஸ்தானத்தை நாம் எப்படியும் எட்டிப் பிடித்துவிடவேண்டும் என்று பாடாய்ப்படுகின்ருர்கள். அங்கும் இங்கும் ஓடி அலைகின்ருர்கள். எப்பொழுதும் அமைதலற்றுக் காணப்படுகின்ருனர். குறிப்பாக தேவ ஊழியர்கள் மற்ற தேவ ஊழியர்கள் கர்த்தரால் ஆசீர் வாதமாக எடுத்து பயன்படுத்தப்படுவதை கண்டு புளங்காகிதம் அடைந்து அவர்களுடைய ஊழியத்தை அப்படியே காப்பி அடித்து அவர்களைப்போல பிரசங்கிக்கவும், ஜெபிக்கவும், தீர்க்கத்தரிசனம் சொல்லவும் ஆரம்பிக் கின்றர். அவர்களைப்போல பணங்களை துரிதமாக திரட்டுவதற்காக பிரயாசப்படுகின்றனர். அதின் காரணமாக துணிந்து பொய் தீர்க்க தரிசனங்கள் கூட சொல்லி இறுதியில் தங்கள் சாட்சியையும் இழந்து விடுகின்றனர். ஆம். இவைகளெல்லாம் ஆரம்பத்தில் நாம் கண்ட வயல்காட்டு பதஷ்டப்படும் கொக்கின் புத்தியாகும்.

ஆனல், ஒரு மெய்யான தேவபிள்ளை தன்னுடன் சேர்ந்த மற்றவர்கள் செழிப்படைந்து உயருவதைக் கண்டு பொருமை கொள்ளாமல் தன் கர்த்தர் தன்னை அனுமதித்த அந்த சிறிய வட்டத்துக்குள்ளேயே மிகுந்த பொறுமையுடன் கர்த்தர் தன்னை உயர்த்தும் வரை அமர்ந்து காத்திருக் கும். அது எந்த ஒரு சூழ்நிலையிலும் பதஷ்டமடையாது. பதறி துடிக்காது மார்ருக, தேவனுடைய பலத்த கரத்துக்குள் அடங்கி ஒடுங்கி அவருடைய இரட்சிப்புக்காக நம்பிக்கையோடு காத்திருக்கும்.

கலிலடா பறவைகள் சரணலயத்தில் நடைபெற்ற தேவ ஊழியம்

கால்நடையாகவே பறவைகள் சரணலயத்தை நாங்கள் காணும் படியாக எங்களை வழிநடத்தின தேவ ஞானத்தின் பின்னணியத்தில் மறைந்திருந்த ஒரு அதிசயத்தை அந்தக்காட்டுக்குள் நாங்கள் வெகு தூரம் சென்றதன் பின்னர் கண்டுகொண்டோம். கழுதை தேடிப்போன சவுலுக்கு ராஜ பதவி கிடைத்ததுபோல சைபீரிய நாரைகளை தேடிக் கொண்டு போன எங்களுக்கு தேவன் 2 ஆத்துமாக்களை தந்தார்.

நாங்கள் கானகத்துக்குள் வெகு தொலைவு சென்றபோது எங்களுக்கு பின்னல் இரண்டு வாலிப தம்பிமார் நடந்து வருவதை கவனித்தோம். அவர்களை கண்டபோது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் இருவரும் ராஜஸ்தான் மாநிலம் பரத்பூர் ஜில்லாவை சேர்ந்தவர்கள். இருவரும் கல்லூரி மாணவர்கள். அவர்களில் ஒருவன் பெயர் லீலாதர். அவன் பரத்பூரிலுள்ள கல்லூரியில் சரித்திரம் பயில்வதாக கூறினன். அடுத்தவனின் பெயர் மோகன் ஷயாம் என்பதாகும். அவனும் அதே கல்லூரியில் சமஸ்கிருதம் படிப்பதாக சொன்னன்.

இந்த இரண்டு ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் சொல்லுவதற்கான நல்லதொரு சமயத்தை தேவன் எங்களுக்கு தந்தார். அந்த இரு வாலிபரும் பரத்பூருக்கு சமீபமாகவுள்ள நாக்லா கோக் என்ற கிராமத்தை சேர்ந்தவர்களாவார்கள். தாங்கள் பரத்பூர் ஜில்லாவை சேர்ந்தபோ தினும் தங்களுடைய வாழ்வில் முதன் முதலாவதாக இப்பொழுதுதான் பரத்பூர் கலீடா பறவைகள் சரணாலயத்தை பார்ப்பதாக ஆச்சரியத்துடன் கூறினர்கள். அன்று அவர்கள் கல்லூரிக்கு விடுமுறை நாள் என்பதால் பறவைகள் சரணாலயத்தை காணவேண்டுமென்று ஆசைகொண்டு வந்ததாத சொன்னர்கள். அவர்களுடைய வார்த்தைகள் எங்களுக்கு ஆச்சரியத்தை கொடுப்பதாக இருந்தது. எங்களை கால் நடையாக காட்டைச் சுற்றிப்பார்க்க அனுமதித்த தேவன், அந்த இரு வாலிபர்களையும்



எங்களுடன் சேர்ந்துகொள்ளும்படியாக அவர்கள் உள்ளத்தில் ஏவுதலை உண்டாக்கியிருந்தார். இந்தக் காரியம் தற்செயலாக நடக்கவில்லை. தங்கள் வாழ்நாளிலேயே அந்தக் காட்டைக் காணுதவர்கள், நாங்கள் செல்லும் அந்த நாளிலேயேதானே அவர்கள் இருவருக்கும் ஏகோபித்த ஆசை உண்டாகி கானகத்தை காண வந்திருக்கின்றார்கள் என்றால் அது தேவனுடைய நடத்துதலே இல்லாமல் வேறென்றும் இல்லை.

நாங்கள் நால்வரும் அந்த நாளில் முழுமையாக 6 மணி நேரம் அந்தப் பறவைகள் சரணாலய விஸ்தார கானகத்தில் கால் நடையாக நடந்திருந்தோம். 20 கி. மீ. தொலைவுக்கும் கூடுதலாக நாங்கள் நடந்திருந்ததை கணக்கிட்டோம்.

மோகன் ஷயாமுக்கும், லீலாதர் சர்மாவுக்கும் ஆண்டவர் இயேசுவை குறித்து விஸ்தாரமாக கூறி வகைக்கு ஒன்றுக எங்கள் வசம் இருந்த சுவிசேஷ பிரதிகளை எல்லாம் அவர்களுக்கு ஜெபத்தோடு கொடுத்தோம். நாங்கள் எங்களுக்கென்று பிஸ்கட் பாக்கெட்டுகளை வாங்கும்போது கூடுதலாக இன்னும் 2 பிஸ்கட் பாக்கெட்டுகளை நாங்கள் வாங்கிக் கொள்ளும்படியாக கர்த்தர் எங்கள் உள்ளத்தில் பேசினதால் அப்படியே வாங்கிக்கொண்டோம். மத்தியான நேரம் அந்த இரண்டு தம்பி மாருக்கும் ஒவ்வொரு முழுமையான பிஸ்கட் பாக்கெட்டுகளை சாப்பிடும் படியாக கொடுத்து ஒரு புதரின் நிழலில் நாங்கள் அமர்ந்து பிஸ்கட்டுகளை சாப்பிட்டு தண்ணீரை குடித்தோம் எங்களுடைய அன்பு நாங்கள் அவர் களுக்கு கொடுத்திருந்த சுவிசேஷ பிரதிகளை பொக்கிஷம் போல வைத்து படிக்கும்படியான ஒரு எண்ணத்தை அவர்களுக்கு உண்டாக்கி கொடுத்தது. கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

பறவைக்காட்டில் நடந்துகொண்டே நாங்கள் தொடர்ந்து அவர் களுக்கு சுவிசேஷம் அறிவித்துக்கொண்டு வந்தோம். நல்ல அன்பும், பணிவும், பெருமையற்ற வாலிபர்கள் அவர்கள். நிச்சயமாக தேவன் அவர்கள் இருவரோடும் நாங்கள் கொடுத்த தேவனுடைய வசனங்கள் மூலமாக பேசுவார் என்ற நிச்சயமான நம்பிக்கை எங்களுக்குள்ளது. அவர்கள் இருவரையும் அந்தக்கானகத்தில் வைத்து புகைப்படம் எடுத்து நாங்கள் இங்கு வந்ததும் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அவர்கள் இருவருக்கும் பயன் அளிக்கக்கூடிய கொஞ்சம் கிறிஸ்தவ புத்தகங்களை நாங்கள் அனுப்பிக்கொடுத்தோம். கிறிஸ்தவ இந்தி காலண்டர்களும் இந்த வருட ஆரம்பத்தில் அனுப்பினேம். அவைகளை பெற்றுக்கொண்டு மிகவும் அன்பு பாராட்டி எங்களுக்கு கடிதம் எழுதி இருந்தார்கள். ஆளுக்கொரு இந்தி மொழி புதிய ஏற்பாடும் நாங்கள் அவர்களுக்கு பதிவு தபாலில் அனுப்பி கொடுத்தோம். இப்பொழுது நாங்கள் அவர்களுடைய முகவரிகளை முசோரியிலுள்ள தபால் மூலம் வேதபாடம் கற்கும் வேதாகம கல்லூரிக்கு அனுப்பி இருக்கின்ரேம். கர்த்தர் இந்த வேதாகம பாடங் களின் மூலமாக அவர்களை சந்திக்கும்படியாக நீங்களும் அவர்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். தொடர்ந்து கடிதத் தொடர்பும் வைத்திருக் கின்ரேம். இந்த செய்தியை எழுதிக்கொண்டிருக்கும்போது மோகன் ஷயாமிடமிருந்து கடிதம் வந்துள்ளது. கர்த்தருக்கே துதி உண்டாவ தாக. மோகன் ஷயாம் மற்றும் லீலாதர் ஆகிய இருவரின் புகைப்

படத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். இருவருடைய கரங்களிலும் தேவனுடைய பிரசுரங்கள் இருப்பதை நீங்கள் பார்க்கக் கூடும்.


மனிதனுக்கு தேவை இரட்சகர் இயேசு ஒருவர் மாத்திரமே

நாங்கள் நால்வரும் அந்த 29 சதுர கி. மீ. பரப்பளவுகொண்ட பறவைகள் சரணாலயத்தின் வழியாக சென்று கொண்டிருக்கும்போது ஒரு கருவேல் மரத்தின் நிழலில் ஒரு பெரிய விரால் மீன் துடிதுடித்துக் கொண்டிருப்பதை கவனித்தோம். எப்படியோ அது அருகில் ஓடிக் கொண்டிருக்கும் சிறிய நீரோடையிலிருந்து தரைக்கு துள்ளியிருக் கின்றது. திரும்பவுமாக நீரோடையில் போய் விழ அதினால் இயலவில்லை. பூமியில் கிடந்து அது துள்ளினவண்ணமாக இருந்தது. சகோதரன் நார்ட்டன் உட்பட அந்த தம்பிமார் இருவரும் துடிக்கும் மீனைப்பிடித்து தண்ணீரில் விட தயக்கம் காட்டிக்கொண்டிருந்த வேளையில் நல்ல சமாரியனாக நானே அதைப்பிடித்து தண்ணீருக்குள் விட்டேன். இப்படி பெரிய பெரிய மீன்களால் அங்குள்ள நீர்த்தடாகங்கள் நிறைந்திருப்ப தால்தான் அவைகளை உண்ண உலகமெல்லாம் இருந்து நீர்ப்பறவைகள் இந்த கானகத்தில் வந்து கூடுகின்றன.

அந்த விரால் மீன் துடிதுடிப்பதை பார்த்த நான் ஆண்டவர் இயேசு இல்லாமல் உலகில் வாழும் மாந்தருடைய பரிதாப நிலையை கண்ணோக் கினேன் கர்த்தர் இல்லாத இருதயமும் இப்படித்தான் உலக மாயை களில் துடிதுடித்துக்கொண்டிருக்கின்றது. ''துன்மார்க்கரோ கொந்தளிக் கும் கடலைப்போலிருக்கிறார்கள், அது அமர்ந்திருக்கக்கூடாமல் அதின் ஜலங்கள் சேற்றையும், அழுக்கையும் கரையிலே ஒதுக்குகிறது'' (ஏசாயா 57:20) ''துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்'' (ஏசா 48 : 22) என்று தேவனுடைய வார்த்தை அத்தனை அழகாக பேசுகின்றது. ஆ, ஒரு மனிதன் நிம்மதியாக, சமாதானத்தோடு வாழவேண்டுமானால் இயேசு இரட்சகர் அந்த மனிதனுக்கு எத்தனை தேவை !

காம்சேன் தர்மசாலையில் நடைபெற்ற தேவ ஊழியம்


பரத்பூரிலுள்ள காம்சேன் தர்மசாலையில் தங்கியிருந்த நாங்கள் அதின் மானேஜரான மனிதருக்கு எங்கள் வசமிருந்த சுவிசேஷ பிரசுரங்களில் எல்லாம் வகைக்கு ஒன்றாக கொடுத்தோம். அவைகளை அவர் ஆசை ஆவலோடு எங்களிடமிருந்து பெற்று தன் வசமாக வைத்து படித்து வந்ததை நாங்கள் கவனித்தோம்.



நாங்கள் அந்த தர்ம சாலைக்கு சென்ற சமயம் அதை இடித்து பெரிதாகக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அங்கு வேலைக்கு வந்த தொழிலாளிகளில் ஒருவரான ராம் பரோசி எங்கள் அறைக்கு பக்கமாக வேலை செய்து கொண்டிருந்த போது அவருக்கும் தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களை ஜெபத்துடன் அளித்து தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள கர்த்தர் உதவி செய்தார். பரத்பூருக்கு சமீபமாகவுள்ள சேவார் என்ற கிராமத்திலிருந்து தினமும் வேலைக்கு வரும் அந்த மனிதர் தேவனுடைய பிரதிகளில் அதிக வாஞ்சை காண்பித்தார். அவருடைய படத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். ராம் பரோசிக்காகவும் நீங்கள் ஜெபித்துக் கொள்ளுங்கள். காம்சேன் தர்மசாலையில் நடைபெற்ற தேவ ஊழியங்களைத் தவிர பரத்பூர் பஜாரிலும் தேவனுடைய பிரதிகளை சில இடங்களில் ஜெபத்தோடு விநியோகிக்க கர்த்தர் உதவி செய்தார்.

கோவர்தன், பதேபூர் போன்ற இடங்களில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்


பரத்பூரை மையமாக வைத்துக்கொண்டு கோவர்தன், பதேபூர் என்ற இரண்டு இடங்களுக்கும் சென்று தேவ ஊழியங்களை செய்து வந்தோம். கோவர்தன் என்ற இடம் இந்து மக்களுக்கு மிகவும் புண்ணிய ஸ்தலமாக உள்ளது. பரத்பூரிலிருந்து 1½ மணி நேர பேருந்து ஓட்டத்தில் அமைந்துள்ள இந்த இடத்தில் சில பெரிய பூர்வீக இந்து கோவில்களும், மாசி கங்கா என்ற ஒரு பெரிய ஆழமான நீர்த்தடாகமும் உள்ளது. ராட்சதர்களை அழித்த பின்னர் இந்து மக்களின் கடவுளான கிருஷ்ணன் தனது புல்லாங்குழலால் பூமியை சற்றே கிளறி இந்த ஆழமான நீர்த்



தடாகத்தை உண்டாக்கினாராம். இந்த மாசி கங்கா தடாகத்தின் ஓரத்தில் அமர்ந்திருக்கும் ராஜேந்திரகுமார் என்ற புரோகிதருக்கு தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களை கொடுக்க கர்த்தர் உதவி செய்தார்.

அதற்கு முன்பாக அவர் எனது நெற்றியில் சந்தனத்தை பூசி பொட்டு வைக்க மனிதர் பெரிதும் விரும்பினர். முதலாவது சகோதரன் நார்ட்டன் அவர்களுக்கு அவ்விதமாக செய்ய முயற்சித்தார். சகோதரன் அந்த இடத்தில் நிற்காமல் ஓட்டம் பிடித்துவிட்டார்கள். எனக்கும் ஆரம்பத்தில் மனதுக்கு சற்று கஷ்டமாக இருந்தபோதிலும் நிலைமையை சுதாகரித்துக் கொண்டு எப்படியாவது கர்த்தருடைய ஜீவனுள்ள வசனங்களை அவரது கரங்களில் அளித்து அவரது விலையேறப்பெற்ற ஆத்துமாவை நித்திய அழிவின் பாதாளத்துக்கு விலக்கி காக்கும் முகமாக எனது நெற்றியை அந்த மனிதருக்கு கையளித்தேன். மனிதர் தனது ஆசை தீர எனது நெற்றியில் சந்தனம் பூசி ஒரு திலகத்தையும் வைத்து மகிழ்ந்தார். அவரது அன்புக்கு கைம்மாறுக என் வசமிருந்த தேவனுடைய பிரதிகளில் வகைக்கு ஒன்றுக எடுத்து ஜெபத்தோடு அவருக்கு கொடுத்தேன். மனிதர் அவைகளை அன்பு பொங்க வாங்கி பத்திரமாக தன் வசம் வைத்துக் கொண்டு படிக்கலானார். தனது வீட்டில் எங்களை ஓரிரு நாட்கள் தங்கி செல்ல அன்போடு அழைத்தார். அவரது முகவரியை பெற்றுவந்து மேற்கொண்டு இந்தி மொழி புதிய ஏற்பாடு மற்றும் பயனுள்ள கிறிஸ்தவ புத்தகங்களை அனுப்பி உள்ளோம். அவருடைய வீட்டை தாண்டி சற்று தூரம் சென்றதும் அவர் எனது நெற்றியில் பூசியதை துடைத்துவிட்டு


முகத்தை நன்கு கழுவிவிட்டேன். அப்படி ஒரு காரியம் நடக்கப்போவதை அன்று அதிகாலையிலேயே நான் எனது ஆவிக்குள்ளாக உணர்ந்தேன். தேவனுடைய சுவிசேஷத்தை அடிமைகளுக்கு எப்படியும் அறிவிக்க வேண்டுமென்ற தாகத்தோடு ஒரு தேவ மனிதன் தன்னையே வேண்டு மென்று அடிமையாக மாற்றிக்கொண்டு அடிமை வாழ்வு வாழ்ந்து அடிமைகளுக்கு சுவிசேஷம் அறிவித்த அன்புக்கு எனது காரியம் தூசியும் பெருது அல்லவா ?



விக்கிரகங்கள் நிறைந்ததும், சுகாதார வசதியற்ற அசுத்தமான தெருக்கள் உள்ளதுமான அந்தப் பட்டணத்தில் பிரமோத், பிரேம்சிங், சந்திரசேகர் என்ற மூன்று வாலிப தம்பிமார்களுக்கும் சுவிசேஷ பிரதிகள் கொடுக்க கர்த்தர் இரக்கம் செய்தார். கிருஷ்ணர் தனது புல்லாங் குழலால் உருவாக்கிய மாசி கங்கா நீர்த்தடாகத்தையும் புரோகிதர் ராஜேந்திரகுமாரையும் நீங்கள் இந்த செய்தியில் காணலாம்.

ஒரு நாள் நாங்கள் பரத்பூரிலிருந்து பதேபூர் சிக்ரி என்ற இடத்துக்கு சென்றோம். பரத்பூரிலிருந்து சுமார் ஒரு மணி நேர விரைவு பேருந்து ஓட்ட தூரத்தில் இந்த இடம் உள்ளது. வழித்தடத்தில் எண்ணற்ற கிராமங்கள் ரஸ்தாவுக்கு வலது இடது பக்கங்களில் தேவனுடைய சுவிசேஷத்தின் வாசனையே படாத நிலையில் சாத்தானுடைய முழுமையான

ஆளுகைக்குள் இருப்பதை கண்டு கலக்கமுற்றேம். பதேபூர் சிக்கிரியில் சாலிம் சிஸ்தி என்ற முகமதிய துறவியின் கல்லறை உள்ளது. மொகலாய மன்னர் அக்பர் குழந்தைகளில்லாமல் சோகத்தில் மூழ்கியிருந்த சமயம் அவருக்கு 3 ஆண்மக்கள் பிறப்பார்கள் என்று இந்த சாலிம் சிஸ்தி கூறினராம். அப்படியே அக்பருக்கு மகன்கள் பிறந்தனராம். அந்த சாலிம் சிஸ்திக்கு இங்கு கல்லறை கட்டி ஒரு அழகான பளிங்கு கல் மண்டபமும் அக்பர் கட்டியுள்ளார். குழந்தையில்லா மக்கள் திரள் திரளாக இந்த கல்லறைக்கு வந்து தொழுகை செய்து பட்டுநாடாக்களை கல்லறையின் கட்டிடத்தில் உள்ள ஜன்னல்களில் கட்டி தொங்கவிடு கின்றனர். உலகில் எத்தனை மக்கள் குழந்தையில்லா சோகத்தில் இங்கு



வந்து பட்டு நாடாக்களை கட்டி உள்ளனர் என்பதை சாலிம் சிஸ்தியின் கல்லறைக்கு நாம் செல்லுவோமானால் துயரத்தோடு காண்போம். சாலிம் சிஸ்தியின் கல்லறையையும் நீங்கள் இந்த செய்தியில் பார்க்கலாம். இந்த பதேபூர் சிக்ரியில் அக்ரம், அன்வார் என்ற இரண்டு முஸ்லீம் வாலிபர்களுக்கு தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களை ஜெபத்துடன் கொடுக்க இரட்சகர் எங்களுக்கு தயை புரிந்தார். கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வை படுத்துவார்" (நீதி 3:6)

(ஒரு பரிசுத்த குருவானவர் ஐயா அவர்களின் கடந்தகால நினைவுகள்)

இந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் தேவ எக்காளம் பத்திரிக்கையை அதிகமாக நேசிக்கும் ஒரு கர்த்தருடைய பிள்ளையின் வீட்டுக்கு அவர்கள் அழைப்பின்பேரில் சென்றிருந்தேன். கோவை மாவட்டத்தின் ஒரு சிறிய கிராமத்தில் மலை அடிவாரத்தில் காற்றோட்டமான அழகிய வீட்டில் அந்தக் குடும்பம் கர்த்தரை தங்களது வீட்டின் தலைவராகவும், மேய்ப்பராகவும் கொண்டு அமைதியாக ஜீவித்துக்கொண்டிருக்கின்றனர். அந்த அன்பான குடும்பத்துடன் மிகவும் விருத்தாப்பியமான ஒரு தாயும், தகப்பனும் கூட இருக்கின்றனர். அந்த தகப்பனர் தனது வாழ்நாட் காலம் முழுவதையும் தன் ஆண்டவருடைய பரிசுத்த சேவையில் செல விட்டவராவார்கள். திருநெல்வேலி சீமையில் நாசரேத் என்ற அழகான கிறிஸ்தவ கிராமத்தில் பிறந்து வளர்ந்த அவர்கள் குருவானவராக நெல்லை மாவட்டத்தில் பல கிறிஸ்தவ கிராமங்களிலும் ஊழியம் செய்த வர்கள்.

அந்த குருவானவர் தகப்பனுக்கும், தாய்க்கும் என்னைக்கண்டது மிகவும் சந்தோசமாக இருந்தது. பரிசுத்த குருவானவர் ஐயாவுக்கு 91 ஆம் வயது நடந்து கொண்டிருப்பதாக சொன்னர்கள். வயது மூப்பின் காரணமாக ஐயா அவர்கள் தள்ளாடிவிட்டபோதினும் அவர் களின் பார்வை, பேச்சு, கம்பு ஊன்றிய நடை எல்லாம் தேவ கிருபையால் உள்ளது. ஆனல் ஒரு குறைவு, நாம் பேசும் வார்த்தைகள் அவர்களுக்கு கேட்பது கடினமாக உள்ளது.

நான் அவர்கள் அருகில் இருந்த நேரம் தனது வாழ்க்கை சரித் திரத்தை இரத்தின சுருக்கமாக என்னிடம் கூறினர்கள். எனது கேள்வி களுக்கு அவர்களால் பதில் கூற இயலாதவாறு காது கேட்க முடியாத நிலையில் இருந்தார்கள். சற்று நேரத்திற்குள்ளாக அவர்கள் என்னிடம் சொன்ன வார்த்தைகளை மொத்தமாக தொகுத்து உங்களுடைய ஆசீர் வாதத்துக்காக கீழே தருகின்றேன்.

எனது சொந்த ஊர் நாசரேத் ஆகும். நான் பிறந்து வளர்ந்து கல்வி கற்றது எல்லாம் அங்கேதான். எனது தகப்பனர் இலங்கை தேசத்தில்

வேலை செய்ததால் அந்த நாட்டிலும் நான் கல்வி கற்றது உண்டு. எனது குருத்துவ படிப்பு அப்பொழுது நாசரேத்திலிருந்த திருமறையூர் வேத சாஸ்திர கல்லூரியில் படித்து முடித்து குருவானவர் ஆனேன். எனது பெற்றோர் பள்ளி ஆசிரியர்களாவார்கள்.

நான் சிறுவனாக இருந்தபோது மிகவும் குறும்புக்காரனாக இருந்தேன். ஒரு சமயம் தரையில் சுமார் அரையணா (அந்தக்காலத்து பைசா நாணயம்) கிடந்தது. அதை எடுத்துக் கொண்டு வெகு தூரம் நடந்து சென்று எனது ஆர்வ மிகுதியால் ஒரு கட்டு பீடியை வாங்கினேன். அதில் ஒன்றைப்பிரித்து எடுத்து கடைக்கு முன்னால் தொங்கிக்கொண்டிருந்த கயிற்றின் நெருப்பில் அந்தப் பீடியை பற்றவைத்து முழு மூச்சுடன் இழுக்க ஆரம்பித்தேன். அவ்வளவுதான், பீடியின் புகை என் சிரசுக்குள் நன்றாக ஏறி திக்குமுக்காடி வெகு பாடுபட்டேன். நான் பட்ட கஷ்டம் தாங்காமல் பீடிக்கட்டின் மேல் கோபம் கொண்டு அதிலிருந்த பீடிகள் யாவையும் ஒடித்து நாசப்படுத்தி தூரமாக வீசி எறிந்துவிட்டேன். அத்துடன் எனது பீடி புகைக்கும் ஆசையும் தேவ தயவால் என்றுமாக குழிதோண்டி புதைக்கப்பட்டது.

பள்ளியில் நான் சிறுவனாக படிக்கும்போது புரிந்த சேஷ்டைகள் கணக்கில் அடங்காது. நான் சிறுவனாக பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது எனக்கு பாடம் சொல்லிக் கொடுத்தவர்கள் ஒரு பரங்கிப் பெண் ஆவார்கள் (ஆங்கிலோ இந்திய பெண்) ஒரு சமயம் நான் ஏதோ அதிகமான குறும்பு செய்த காரணத்தால் கடுங்கோபம் கொண்டு என்னை பிரம்பால் அடிக்க கரத்தை ஓங்கினார்கள். உடனே நான் பாய்ந்து தாவிக்குதித்து அவர்கள் கரத்தைப் பற்றிப்பிடித்து அவர்கள் கம்பை பிடுங்கி வீசி எறிந்துவிட்டேன். அதைக்கண்ட அவர்கள் கோபாவேசத்துடன் :-

''எனது கையிலுள்ள கம்பைப் பிடுங்கி வீசிவிட்டாய். அதைப்பற்றி பரவாயில்லை. எனது காலில் என்ன கிடக்கின்றது பார்த்தாயா?'' என்றார்கள். நான் அதற்கு மறுமொழியாக

''எனது காலில் என்ன கிடக்கின்றது என்பதையும் நீ பார்க்க வேண்டும்'' என்று உடனே பதில் கொடுத்தேன்.

அந்த ஆசிரியை என்னை தலைமை ஆசிரியரிடம் அழைத்துச்சென்று எனது நடத்தையை அவரிடம் எடுத்துக்கூறினபோது அவரும் என்னை அடிக்க பிரம்பை எடுத்தார். ஆனால், நான் அவரிடம் போட்ட சத்தத்தையும், ஏச்சையும் கேட்ட அவர் என்னை பள்ளியிலிருந்தே துரத்திவிட்டார். எனது தகப்பனாரும் தலைமை ஆசிரியராக வேறு பள்ளியில் வேலை செய்ததால் எப்படியோ எனது தகப்பனார் அவரை சாந்தப்படுத்தி திரும்பவும் அதே பள்ளியில் எனது படிப்பை தொடர வகைசெய்து கொடுத்தார்கள்.

இப்படியாக எனது கல்வி முடிந்து, எனது குருத்துவ படிப்பும் முடிந்து ஒரு சபைக்கு குருவானவரானேன். நான் குருவானவராக பொறுப்பேற்கும்போது எனது பழைய கோபம், மூர்க்கம் மற்றும் பழைய ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்குரிய எல்லா தீய குணங்களும் மாறி கிறிஸ்து இயேசுவுக்குள் புதிய மனிதனாகி கர்த்தாவின் அடிமையானேன்.

இந்தக்காலத்தில் போக்குவரத்து சாதனங்கள் பெருகிக்கிடக்கின்றது. ஆனால் அந்தக் காலத்தில் பேருந்துகள் எதுவும் கிடையாது. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு செல்ல வேண்டுமானால் மக்கள் கூட்டம் கூட்டமாக கால்நடையாகவே நடந்து செல்லுவார்கள். வெகு தூரமான பயணத்துக்கு மக்கள் இரண்டு மாடுகள் பூட்டிய வில் வண்டியை அதிகமாக பயன் படுத்தினார்கள். எனது வாழ்வில் நானும் கால்நடையாக எத்தனையோ ஆயிரம் மைல்கள் நடந்து, நடந்து எனது ஆண்டவருக்கு அவர் பெலத்தால் ஊழியம் செய்திருக்கின்றேன். எல்லா துதியும் என் ஆண்டவர் இயேசுவுக்கே உண்டாவதாக.

நான் எனது வாழ்வில் முதன் முதலாவதாக திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வேம்பார் என்ற கிராமத்துக்கு குருவானவராக சென்றேன். அதுதான் எனது குருத்துவ ஊழியத்தின் ஆரம்ப கிராமம். குளத்துர் என்ற இடத்திலிருந்து 14 மைல்கள் கால்நடையாக நடந்து வேம்பார் கிராமத்திலுள்ள மிஷன் வீட்டுக்குச் சென்றேன். நான் வேம்பார் போய் சேரும்போது மாலை நேரமாகிவிட்டது. நான் தங்கியிருக்கக்கூடிய மிஷன் வீடு மிகவும் பழமையான வீடு. நான் அந்த வீட்டில் கிடந்த நாற்காலியில் எனது களைப்பின் மிகுதியால் அப்படியே கண்ணயர்ந்து அமர்ந்திருந்தபோது திடீரென எனக்கு முன்பாக தொப்பென்று ஏதோ ஒன்று விழும் சப்தம் கேட்டு எனது கண்களை திறந்தேன். சற்று அருகில் போய் கூரையிலிருந்து கீழே விழுந்த பொருள் என்னவென்று பார்த்த போது அது ஒரு பெரிய தேள் என்பதை கண்டேன். சற்று பின் நோக்கி அது விழுந்திருக்குமானால் அது என் மேலேயே விழுந்து என்னைக்கொட்டியிருக்கும். ஆனால், அன்பின் கருணைகரன் என்னை கிருபையாக அன்று பாதுகாத்துக்கொண்டார். அந்த ஒரு நாளிலேயே நான் 28 மைல்கள் நடந்திருந்தேன். ஓய்வுநாட்களில் ஒரே நாளில் மூன்று சபைகளுக்கு நான் சென்று ஆராதனை நடத்தவேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கும், அப்பொழுது நான் 30 மைல்கள் தூரம் வரை சாதாரணமாக நடந்திருப்பேன்.

எனது நீண்ட குருவானவர் பணி காலத்தில் எத்தனையோ கிராம சபைகளில் குருவானவராக நான் எனது கர்த்தருக்கு உண்மையும், உத்தமமுமான இருதயத்தோடு தேவ ஊழியம் செய்துள்ளேன்.

தேவன் தமது பரிசுத்த மக்களுக்கு வழிகாட்டும் பிரகாசமான தேவ வாக்குகளை கொடுக்கின்ருர். அப்படியே எனது வாழ்வின் ஆசீர்வாதத் துக்காக என்னை ஆட்கொண்ட என் அன்பின் கருணைகரன் எனக்கு கொடுத்த தேவ வசனம் ''உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைபடுத்துவார்'' (நீதி 3 ; 6) என்பதாகும். எனது முழுமையான கிறிஸ்தவ பக்தி வாழ் வையும், எனது குருவானவர் ஊழிய பணியையும் இந்த விடிவெள்ளியான தேவ வசனமே வழிநடத்தி அழைத்து வந்துள்ளது. நானும் என்னை ஞானியென்று எண்ணிக்கொள்ளாமல் எனது வழிகளை எல்லாம் என் ஆண்டவருக்கு ஒப்புவித்து என் அருமை நேசரை எனது காரியங்கள் யாவிலும் நினைத்து எனது கடமைகளை எல்லாம் செவ்வையாகவும், கர்த்தருக்கு மகிமையாகவும் செய்து முடித்துள்ளேன்.

91 வயதான நானும், எனது மனைவியும் இந்த பழுத்து முதிர்ந்த வயது காலத்தில் மிகுந்த தேவ சமாதானத்தோடு எனது அருமை மகளின் குடும்பத்தோடு வாழும் கிருபையை தந்த என் கர்த்தாவுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்ருேம். பிள்ளைகள் எங்களுக்கு இந்த வீட்டில் ஒரு தனி அறையையே கொடுத்திருக்கின்றனர். எங்களை அவர்கள் அருமையாக கவனித்துக் கொள்ளுகின்றனர். நாங்களும் எங்கள் அன்பின் இரட்சா பெருமானுக்கு எங்கள் நன்றி நிறைந்த உள்ளங் களிலிருந்து துதி கீதங்களை இரவும் பகலும் ஏறெடுத்துக் கொண்டு எங்கள் பரம வீட்டு அழைப்புக்காக ஒவ்வொரு நாளும் ஆவலோடு காத்திருக்கின்ருேம். அந்த பேரின்ப பாக்கியத்தை கர்த்தர் எங்களுக்கு தந்து எங்களை ஆசீர்வதிக்கவேண்டும்.

(மேலே குறிப்பிட்ட பரிசுத்த குருவானவர் ஐயா அவர்களுக்காகவும், அருமை தாயாருக்காகவும், அவர்களை அன்பாக ஆதரிக்கின்ற மகளின் குடும்பத்துக்காகவும் தேவப் பிள்ளைகளாகிய நீங்களும் அன்பாக ஜெபித் துக்கொள்ளுங்கள்)

கர்த்தருக்கு கீழ்ப்படிவோரை அவர் ஆசீர்வதித்து அவர்களை மகிழ்ச்சியடையப்பண்ணுவார்

(குருவானவர் ஐயா அவர்கள் சொன்ன ஒரு உதாரணம்.)

நான் எனது பெற்றோர்களுடன் இலங்கை தேசத்தில் இருந்த சமயம் நானும் எனது உடன் பிறந்த தங்கையும் மிகுந்த அன்பும் பாசத்தோடும் இருப்போம். ஒரு சமயம் நானும் எனது தங்கையும் சேர்ந்து ஒரு பலாப்பழ கொட்டையை எடுத்து பூமியில் ஒரு அடி ஆழத்துக்கு குழி தோண்டி அந்தக் கொட்டையை முளைப்பதற்காக போட்டோம். கொஞ்ச நாட்கள் ஆகியும் முளையே வரவில்லை. எங்களுக்கு ஆச்சரியமாகி போய் விட்டது. கொட்டையை முளைக்கப்போட்ட குழியை நானும், தங்கையும் தோண்டி அதை ஆராயத் தொடங்கினோம். என்ன ஆச்சரியம், அது நன்றாகவே முளைத்திருந்தது. எனினும் அது ஆழமாக புதைக்கப்பட்டி ருந்ததால் அதினால் வெளியே வர கூடாது போயிற்று. அதை நாங்கள் எங்கள் அப்பாவிடம் காண்பித்தோம். பலாக்கொட்டையை அத்தனை ஆழத்தில் புதைக்கக்கூடாது என்றும், சிறிய ஆழத்தில் அதனை திரும்பவு மாக ஊன்றிப்புதைக்க அப்பா ஆலோசனை சொன்னார்கள் அப்பாவுடைய அறிவுரைப்படியே நாங்கள் செய்தோம். அது முளைத்து எழும்பி சிறிய செடியாக வளர்ந்து நாளடைவில் அது ஒரு மரமாக வளர்ந்து கெம்பீரமாக நின்றது. அதைக்காண எங்களுக்கு பரவசமாகவும், ஆனந்தமாகவும் இருந்தது.

நம்முடைய இஷ்டப்படியே மனம்போன போக்கில் நமது காரியங் களை செய்து கொண்டு போய் இறுதியில் வேதனைப்படாதபடி நமது வாழ்வின் ஒவ்வொரு காரியங்களிலும் ''ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்'' (அப் 9 : 6) என்ற பவுலைப்போலவும் ''கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்'' (1 சாமுவேல் 3 : 9) என்ற சாமுவேலைப் போலவும் கர்த்தரின் சத்தம் கேட்டு அவருடைய சித்தம் செய்வோமானால் நமது ஒவ்வொரு காரியங்களும் ஜெயமாக முடிவுறும். தேவனுக்கு கீழ்ப்படிவோரை அவர் ஆசீர்வதித்து அவர்களை மகிழ்ச்சியடையப்பண்ணுவார் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

உங்கள் உருக்கமான ஜெபம் தேவை

கர்த்தருடைய திருவுளத்துக்குச் சித்தமானால், இந்த இதழ் உங்கள் கரங்களுக்கு கிடைத்த சில தினங்களில் சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் கர்த்தருடைய ஊழியத்தின் பாதையில் இமயமலைகளுக்கு பயணப்பட்டுச் செல்லுவோம். இந்தவிதமான சுவிசேஷ பயணங்கள் மிகுந்த ஆபத்தான பிரயாணங்கள் என்பதை உங்களுக்கு அன்பாக நினைப்பூட்ட விரும்புகின்றேன். எனினும் நம் சர்வ வல்ல தேவன் எங்களுக்கு முன்பாக வழிநடந்து செல்லுகின்றார் என்பதைக் குறித்த திட்டமான நம்பிக்கை எங்களுக்கு உண்டு. கர்த்தர் எங்களோடிருந்து எங்களுடைய மரண நிழலின் பாதைகளிலே எங்களை பாதுகாக்கவும். நாங்கள் அவர் நாம மகிமைக்காக மேற்கொள்ளும் எல்லா சுவிசேஷ பிரயத்தனங்களையும் ஆசீர்வதிக்கவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். நாங்கள் தேவனுடைய சுவிசேஷத்துடன் சந்திக்கும் ஒவ்வொரு ஆத்துமாவோடும் கர்த்தர் தாமே பேசவும். மக்களுக்கு ஜெபத்தோடு விநியோகிக்கப்படும் சுவிசேஷப் பிரசுரங்கள் ஒவ்வொன்றும் ஏசாயா 55 : 10, 11 வசனங்களின்படி அதை வாங்கும் உள்ளங்களில் கிரியை நடப்பிக்கவும் உங்கள் ஊக்கமான ஜெபங்களை ஆவலோடு எதிர்நோக்கி கடந்து செல்லுகின்றேம். எனவே, எனக்கு அருமையான தேவ பிள்ளைகளே, எங்களுக்காக தயவாக வேண்டிக்கொள்ளுங்கள்.

எல்லாம் குப்பையாக மாறும் காலம் வரும்

ஒரு ஐசுவரியமுள்ள கிறிஸ்தவ மனிதனை நான் நன்கு அறிவேன். நல்ல வளமான நிலபுலங்கள், செல்வம் கொழிக்கும் தொழில், சொந்த மான மோட்டார் வாகனங்கள், வசதியான சில வீடுகள் எல்லாம் அந்த மனிதருக்கு உண்டு. ஆனால், இயேசு இரட்சகர் மாத்திரம் அவரது வாழ்வில் இடம் பெறவில்லை. ஒரு நாள் நண்பகல் நேரம் மேற்கண்ட மனிதரை நேருக்கு நேர் சந்தித்தபோது நிலையில்லா உலக வாழ்வையும் அதின் கவர்ச்சியான மாயத்தோற்றத்தையும், அதை முழுமையாக நம்பி கர்த்தரை கைநழுவவிடுவதிலுள்ள பயங்கரமான ஆபத்தையும் அந்த நபருக்கு திட்டமும் தெளிவுமாக நான் எடுத்துக்கூறினேன். அதைக் கேட்ட அவர் என்னை உள்ளங்கால் தொடங்கி உச்சந் தலைவரை அப்படியே ஒரு பார்வை பார்த்தார். பார்த்துவிட்டு ஏளனமாக ஒரு புன்முறுவல் செய்து விட்டுப் போய்விட்டார். அவரது பார்வை என்னுடன் இவ்விதமாக பேசுவதாக இருந்தது. ''பைத்தியக்காரனே, நான் உலகத்தை எத்தனை முழுமையாக சுவைத்துப்புசித்து ஆனந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன். எல்லாம் மாயை, ஷணப்பொழுதில் மறைந்துவிடும் என்று பிதற்றுகிற உனது மதியீனத்தை நான் என்ன வென்று சொல்லுவது ! எனது கட்டுமஸ்தான வலுமையான சரீரத்தைப் பார், எதைச்சாப்பிட்டாலும் குறிப்பிட்ட நேரத்தில் அற்புதமாக அரைத்துத்தள்ளிவிடும் ஆற்றல் அதற்குண்டு. இந்த உலகமானது முழுமையாக நாங்கள் அனுபவிக்கும்படியாக எங்களுக்கென்று கடவுளால் படைக்கப்பட்டதாயிருக்கும்போது உனக்கு மாத்திரம், உனது குருட்டு கண்களுக்கு மாத்திரம் எல்லாம் என்னவோ மாயையாகவும் வெறுமை யாகவும் தெரிகின்றது. இந்த உலகம் முழுமையிலும் உன்னைவிட மதிகெட்டவன் எவனுமே இருக்க இயலாது'' என்று கூறுவதாக இருந்தது.

அதற்கப்பால் அந்த மனிதனிடத்தில் அவருடைய இரட்சிப்பைக் குறித்து பேச வேண்டாமென்று தேவ ஆவியானவர் கூறிவிட்டதால் நான் அவரிடத்தில் ஒன்றும் பேசுவதில்லை. செல்வ திரட்சி, எந்த ஒரு குறைவும் இல்லாத நிறைவான உலக வாழ்க்கை, சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து, கொழுமையான போஜன பதார்த்தங்கள், எல்லாம் அந்த மனிதனின் ஆவிக்குரிய கண்களை இருளடையச் செய்து கர்த்தாதி கர்த்தாவையும், அவருடைய இரட்சண்யத்தையும், தனக்கு முன்பாக வுள்ள தனது சடுதியான மரணத்தையும், முடிவில்லாத நித்தியத்தையும் காணக்கூடாதபடி செய்துவிட்டது.

எனினும், மனிதன் ஒரு நாள் நிச்சயமாக கண் விழித்துக்கொள்ளுவார். அதற்குச் சந்தேகமே இல்லை. தான் மரணமடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்போ அல்லது ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவோ அவரது ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு, தான் தனது ஜீவிய காலமெல்லாம் நிலைபெயராத உண்மை, நிஜம் என்று நம்பியிருந்த ஆஸ்தி, ஐசுவரியம், வீடு வாசல், சொத்து சுகம், சுற்றம் நட்பு, சொந்தம் பந்தம், உலகம் அளித்த வானம் எட்டிய உலகப்புகழ் அனைத்தும் முதல்தரமான குப்பை மேட்டுக் குப்பையேயல்லாமல் பிறிதொன்றுமில்லை என்பதை நிச்சயமாக அடையாளம் கண்டு கொள்ளுவார்.

மரணமடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக தான் நம்பியிருந்த உலகமேன்மை எல்லாம் குப்பை என்று கண்டுகொண்ட ஒரு மனிதனின் சோகக் கதை கேட்பீர்களா ?

எனக்கு ஒரு கிறிஸ்தவ குடும்பம் தெரியும். பெற்றோரை இழந்த மகனும், மகளும் மட்டும் அந்த பெரிய வீட்டில் வாழ்ந்து வந்தனர். வாலிபத்தின் வயதை எப்பொழுதோ கடந்துவிட்ட அவர்கள் இருவருக்கும் திருமணமே ஆகவில்லை. மகன் பொறியாளராகவும், மகள் உயர் பட்டதாரியாகவும் இருந்தனர். பொறியாளரான அந்த மனிதருக்கு வீட்டில் தனி அறை உண்டு. அங்கு அவரது மேஜையில் அவருடைய இருதயத்துக்கு விருப்பமான பொறியியல் சம்பந்தமான புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆனால், அங்கு வேதாகமத்துக்கு இடம் கிடையாது. மனிதருக்கு தனது தொழில், தனது நண்பர்கள், தனது சமுதாயஅந்தஸ்துதான் உலகில் எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருந்தது. தனது சிருஷ்டிகரைத் தேடவும், தனது நாசியில் தமது சுவாசத்தை வைத்தவரை நோக்கிப்பார்க்கவும் மனிதருக்கு சமயம் கிடையாமற் போயிற்று. நாட்கள் கடந்து சென்றன. திடீரென அவர் ஒரு நாள் மாரடைப்பால் காலமானார். அவர் மரணம் அடைந்த பின்னர் நான் அவர்கள் வீட்டிற்கு ஒரு நாள் சென்றிருந்தேன். அப்பொழுது அவருடைய தங்கையான அந்த சகோதரி தனது பேச்சின் போது இவ்விதமாக சொன்னார்கள் :- ''அண்ணாவுடைய அறைக்குச் சென்று நான் அவர்களுடைய அறையை துடைப்பத்தால் கூட்டி சுத்தம் செய்வேன். ஆனால், அவர்களுடைய மேஜையை மாத்திரம் சுத்தம் செய்ய என்னை அனுமதிக்கவேமாட்டார்கள். ''அண்ணா, உங்கள் புத்தகத்திலுள்ள தூசியையாவது நான் தட்டி சுத்தம் செய்கின்றேன்'' என்றால் அதற்குக் கூட என்னை அனுமதிக்கமாட்டார்கள். மேஜை மீதுள்ள தனது பொறியியல் புத்தகங்களை எல்லாம் அவர்களே தூசிதட்டி சுத்தம் செய்து கொள்ளுவார்கள். அவர்களுடைய புத்தகங்களை தொடக்கூட என்னை அனுமதிக்கமாட்டார்கள். அத்தனையாக அவைகளை அவர்கள்

நேசித்தார்கள். ஆனால், என்ன ஆச்சரியம், அண்ணு மரிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக என்னை தனது அறைக்கு ஒரு நாள் அழைத்து ''இதோ பார், இந்தக்குப்பைகளை எல்லாம் என் மேஜையைவிட்டு உடனே அப்புறப்படுத்து. நான் அவைகளை இனி என் மேஜை மீது பார்க்கக்கூடாது'' என்று கூறினார்கள். அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. தனது புத்தகங்களிலுள்ள தூசியைக்கூட தட்டி சுத்தம் செய்யவிடமாட்டார்களே, இப்பொழுதோ தனது புத்தகங்களையே குப்பை என்று சொல்லி தனது அறையைவிட்டு அப்பால் எடுத்துச்செல்லச் சொல்லுகின்றார்களே என்று எனக்குள் பெரிதும் வியப்படைந்தேன். எத்தனை ஆச்சரியம் பாருங்கள் ! இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்துக் குள்ளாக எதிர்பாராதவிதமாக அண்ணு திடீரென்று மரித்துப்போனார் கள்'' என்று கூறினார்கள்.

ஒரு காலத்தில் தனக்கு உயிருக்கு உயிராக இருந்த தனக்கு அருமை யானவைகள் தனது ஜீவன் இந்த உலகத்தைவிட்டு எடுபடும் வேளை நெருங்கியபோது சுத்த சூனியமாகவும், முதல்தரமான குப்பையாகவும் மாறிவிட்டதை பொறியாளர் வாழ்விலிருந்து நாம் தெள்ளம் தெளிவாக காண்கின்றோம். அதைப்போலவே உலகத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் எல்லாவற்றிற்கும் எல்லாமாக உயிருக்கு உயிராக நேசிக்கும் யாவரும் தங்களது முடிவில், அதாவது அவர்களது மரணம் நெருங்கும் நேரம் அவைகள் யாவையும் அற்பமும் தூசியுமாக எண்ணி தங்களுக்கு முன்பாக உள்ள முடிவில்லா நித்தியத்துக்கு முன்பாக அவைகள் ஒன்றுக்கும் உதவாத குப்பைகள் என்று அறிந்து கண்ணீர் சொரிந்து கலங்குவார்கள்.

இதை கருத்தோடு வாசிக்கும் தேவ பிள்ளையே, உலகமும், உலகத் திலுள்ளவைகள் யாவும் உனது கண்ணோட்டத்தில் எப்படி உள்ளன ? நீ அதற்கு எந்த ஸ்தானத்தை கொடுத்து வைத்திருக்கின்றாய் ? ''பொய் யான மாயைப்பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கின்றார்கள்'' (யோனா 2 : 8) என்றார் யோனா தீர்க்கன். ஆஸ்தி ஐசுவரியம், வீடு வாசல், பட்டம் பதவி, உலகப் புகழ்ச்சி, சமுதாய கண்ணியம், கவுரவம், மாம்ச சிற்றின்ப ஆசைகள் போன்ற உலகத்தின் பொய்யான மாயைகளை விடாப்பிடியாக பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு நேராக வரும் இயேசு இரட்சகருடைய கிருபையைப் போக்கடித்து தங்களுடைய அருமை தேவனை தங்கள் வாழ்வின் எல்லைக் கோட்டிலிருந்தே ஓட ஓட துரத்தி அடித்துவிடுவார்கள்.

உனது மரண நேரத்தின் இறுதி நேரத்தில் உலகத்தின் மாயைகளை குப்பையாக அடையாளம் கண்டு நரக பாதாளம் செல்லுவதற்கு முன்பாக இப்பொழுதே உலகத்தின் ஆசை இச்சைகளை உனது ஆத்துமாவுக்கு எதிராக சாத்தான் வைத்துள்ள மரணக்கண்ணி என்பதை பயத்தோடும், நடுக்கத்தோடும் இனம் கண்டுகொண்டு சங்கீதக்காரனைப்போல ''மாயையைப்பாராதபடிக்கு நீர் என் கண்களை விலக்கி உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்'' (சங் 119 : 37) என்ற தேவ வசனத்துக்கிணங்க உலகத்தின் விரைந்து கடந்து செல்லும் மாயாபுரி சந்தை சரக்குகளை பரம சீயோன் பட்டணத்து நித்திய பேரின்ப வாழ்வுக்கு பதிலாக பண்ட மாற்று செய்து கொள்ளாமல், தேவனுடைய பேரின்ப உன்னத வழிகளில் உன்னை உயிர்ப்பித்துக்கொண்டு உச்சித பட்டணத்துக்கு நேராக ஜீவனே, நித்திய ஜீவனே என்று குரல் கொடுத்துக்கொண்டே ஓட அன்பின் தேவன் உனக்கும், பாவியாகிய எனக்கும் தயை செய்வாராக.

அரிஸ்டோபுலஸ் என்ற சரித்திர ஆசிரியன் மகா அலெக்ஸாண்டருடைய வீரதீர செயல்களை எல்லாம் மிகவும் புகழ்ந்து பாராட்டி எழுதி, அலெக் ஸாண்டருடைய உண்மை நிலைக்கு அப்பால் அவரை வெகுவாக முகஸ்துதி செய்து எழுதிய ஒரு பெரிய புத்தகத்தை அவருககு கொடுத் தான். அதை வாசித்த அலெக்ஸாண்டர் அதை அப்படியே தூக்கி ஐடாஸ்பஸ் நதியில் வீசி எறிந்து விட்டு அதை எழுதிய அரிஸ்டோ புலஸை மூர்க்க வெறியுடன் பார்த்து ''நீயும் கூட அந்தப் புத்தகத்துடன் ஐடாஸ்பஸ் நதியில் வீசி எறியப்படவேண்டியவன்தான்'' என்று கூறினார்.

தேவ ஜனமே உங்களை முகஸ்துதி பேசுகிறவர்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். அந்த முகஸ்துதிகளுக்கு நீங்கள் இடம் கொடுத்தால் இறுதியில் நீங்கள் பாதாளத்தில் உங்கள் படுக்கையைப் போட்டிருப்பதைக் காண்பீர்கள். ''நீதிமான் என்னை தயவாய் குட்டி, என்னைக்கடிந்து கொள்ளட்டும். அது என் தலைக்கு எண்ணெயைப் போலிருக்கும். என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை'' (சங் 141 : 5)

2000 ஆம் ஆண்டு முதல் மாதம் முதல் தேதி காலைக் கதிரவனின் முதல் சூரிய கதிர்கள் பிரகாசிக்கும் பாக்கிய தேசம்

இந்த ஆண்டு ஜூன் மாதம் ''டைம்ஸ் ஆப் இந்தியா'' என்ற ஆங்கில நாளேட்டில் ஒரு அதிசயமான செய்தி வெளியாகி இருந்தது. அதாவது, இங்கிலாந்து தேசத்திலுள்ள கிரீன்விச் என்ற இடத்திலுள்ள ராஜாங்க வானமண்டல ஆராச்சி மையத்தின் கணிப்பின்படி 2000 ஆம் ஆண்டு பிறந்து பொழுது விடிந்து வரும்போது காலைக்கதிரவனின் முதல் சூரியக்கதிர்கள் விழும் தேசம் நமது இந்தியா என்று கண்டறியப் பட்டுள்ளது. கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

உலகத்தில் எத்தனை எத்தனையோ தேசங்கள், குட்டி குட்டி தீவாந்தர நாடுகள், தேவனுடைய ஆலய கோபுரங்கள் நிரம்பியதும், தேவனுடைய பிள்ளைகள் திரள்திரளாக வாழ்வதும், ஆண்டவரது துதி கீதங்கள் இராப் பகலாக முழங்கிக்கொண்டிருக்கின்றதுமான எண்ணற்ற நாடுகள் உலகில் இருக்கின்றன. அந்த தேசங்கள் ஒன்றில் தமது அற்புதமான முதல் சூரிய ஒளிக்கதிரை வீசச்செய்ய மனம் இல்லாமல் பாவ இருள் நிறைந் ததும், எங்கும் விக்கிரக வணக்கங்கள் நிரம்பி வழிவதுமான நமது இந்து தேசத்தில் தமது படைப்பின் மாட்சியை விளங்கச் செய்வது தேவனுடைய திருவுளத்துக்குப் பிரியமாக இருந்திருக்கின்றது.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட கிரீன்விச் வானமண்டல ஆராய்ச்சி மையத்தின் ஆய்வுப்படி 2000 வருடம் பிறந்து சூரியனின் முதல் ஒளிக் கதிர்கள் வானிலிருந்து நேராக இந்தியா தேசத்திலுள்ள நிக்கோபார் தீவு கூட்டங்களிலுள்ள கட்சல் ஏன்ற இடத்தில்தான் வீசுமாம். ஆனால், ஒன்றை நாம் துக்கத்தோடு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த அற்புதமான காலைச் சூரியனின் முதற் கதிர்கள் இந்திய மக்கள் மேல் பிரகாசிப்பதில்லை. ஆம், சர்வவல்ல தேவனின் ஆலயங்களை இடித்து தரைமட்டமாக்கி, அவருடைய ஊழியக்காரர்களை அடித்து சித்திரவதை கள் செய்து, அவருடைய பரிசுத்த கன்னியரை கற்பழித்து கொலை செய்து அவருடைய பரிசுத்த மிஷனரிகளை அவர்களுடைய பிள்ளைகளுடன் உயிரோடு வைத்து தீயிட்டுக்கொழுத்தி சாம்பலாக்கிய நமது பாதகத்தின் காரணமாக அந்த மங்களகரமான முதற் கதிர்கள் இந்தியர்களாகிய நம்மேல் வீசுவதில்லை. அதற்கு மாறுக, மேலே குறிப்பிட்ட கட்சல் என்ற இடத்தின் கடல் கரையில் அந்த நாளின் விடிபகல் வேளையை எதிர் நோக்கிக் காத்திருக்கும் கடல் ஆமைகளுக்கும், அங்குள்ள உப்பு நீர் முதலைகளுக்கும்தான் கிடைக்குமே தவிர நீசப்பாவிகளாகிய நமக்குக் கிடைக்காது.

"அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர் களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கின்றோம்" (ரோ 8 : 28)

"இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக : நான் செய்கிறது இன்ன தென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்" (யோவான் 13 : 7)

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நேற்றும், இன்றும், என்றும் மாறுத நம் அருமை இரட்சகர் இயேசு வின் பரிசுத்தமும் இனிமையுமான நாமத்தில் நான் உங்களை வாழ்த்து கின்றேன்.

தேவ எக்காளம் உங்களில் அநேகருக்கு ஆசீர்வாதமான பத்திரிக்கை யாக இருப்பதற்காக நான் என் தேவனை ஸ்தோத்திரிக்கின்றேன். தேவ எக்காளத்தை திரும்ப, திரும்ப வாசித்து ஆவிக்குள்ளாக மிகுதியும் பயன் பெறுவதாக கடிதங்கள் எழுதி வருகின்றீர்கள். கர்த்தருக்கே துதி உண்டாவதாக. உங்களைப்போலவே நானும் அதின் செய்திகளை திரும்ப, திரும்ப வாசிக்கின்றேன் என்றால் உண்மையில் நீங்கள் ஆச்சரியம் அடைவீர்கள். நான் அந்தச் செய்திகளை எழுதினாலும் அதிகமான ஜெபத்தோடும் தேவ ஆவியானவரின் முழுமையான ஒத்தாசையோடும் நான் அவைகளை எழுதுவதால், இவைகளை நாம்தான் எழுதினோமா என்ற எண்ணம் அதை வாசிக்கும்போது எனக்கு ஏற்பட்டு மீண்டும் மீண்டும் வாசித்து எனது தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்வில் அதிகமாக பயன்பெறுகின்றேன். ''தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத் தின்படி அவருக்கு ஊழியம் செய்தான்'' (அப் 13 : 36) என்ற தேவ வசனத்தின் அடிப்படையில் இந்த எளிய ஊழியத்தை பயத்தோடும், மிகுதியான ஆத்தும பாரத்தோடும் செய்து வருகின்றேன்.

இந்த நாட்களில் எங்கு பார்த்தாலும், எந்த ஒரு செய்தி தாளை வாசித்தாலும் ''கார்கில்'' என்ற வார்த்தையே மிகவும் அதிகமாக மேலோங்கி நிற்பதை நாம் காணலாம். சிறியோர் முதன் பெரியோர் வரை யாவரின் வாயிலும் இந்த கார்கில் என்ற வார்த்தையே உச்சரிக்கப் பட்டு வருகின்றது. பள்ளி குழந்தைகள், வாலிபர்கள், முதியோர்கள் எல்லாரும் தங்கள் கரங்களில் பாத்திரங்கள் ஏந்தி கார்கில் யுத்தநிதி சேர்க்கின்றனர்.

மேற்கண்ட கார்கிலுக்கும் எனக்கும் மிகுந்த பற்றும் பாசமும் உண்டு. இந்த கார்கில் பட்டணத்தில் தேவன் தமது எல்லையற்ற அன்பை என்மேல் பொழிந்து என்னை திக்குமுக்காடச் செய்தார். இந்த கார்கில் பட்டணம் அழகிய காஷ்மீரத்திலுருந்து ஒரு நாள் பேருந்து ஓட்ட தூரத் தில் உள்ளது. காலையில் காஷ்மீரத்தில் பேருந்து ஏறினால் இருள் நன்ருக சூழும் இரவு நேரம்தான் அது கார்கில வந்து சேருகின்றது. சோஷிலா என்ற பயங்கரமான பனிமலை கணவாயை பேருந்து கடந்து ஓரிரு மணி நேர ஓட்டத்திற்குப் பின்னர் நமது கண்களுக்கு தென்படும் மலைகள் யாவும் எந்த ஒரு மரங்களும், தாவரங்களும் இல்லாமல் பாலைவன மலை களாகவே காட்சி அளிக்கின்றன. ஆனால் கார்கில் பட்டணம் நெருங்க, நெருங்க பசுமை நமது கண்களுக்குத் தெரிகின்றது. வில்லோ மரங்களும், ஆப்ரிகாட் என்ற பழ மரங்களும், சுரு என்ற நதியின் இருமருங்கிலும் செழிப்பாக வளர்ந்து நிற்கின்றன. சுரு நதியின் தண்ணீரை லாவகமாக சிறு, சிறு ஓடைகளாக கொண்டு வந்து மலைகளில் அடுக்கடுக்காக வயல் நிலங்களை உருவாக்கி கோதுமை, பார்லி மற்றும் காய்கறிகளை போது மான அளவிற்கு விளைவிக்கின்றனர். ஆப்ரிகாட் பழங்களுக்கு இந்த இடம் பேர்போனது.

கார்கில் பட்டணம் மிக வைராக்கியமான முகமதிய பட்டணமாகும். ஜனத்தொகை மிக மிக குறைவாக இருந்தபோதினும் இங்கு வாழ்வோர் அனைவரும் முகமதியர்கள். அநேகமாக ஒவ்வொரு வீடுகளிலும், கடை களிலும் ஈரான் என்ற முகமதிய தேசத்தின் தீவிர முகமதிய தலைவர் அயோத்துல்லா கோமேனியின் படம் வைக்கப்பட்டிருப்பதை நான் பார்த்தேன். களவு, கொள்ளை, கொலை, விபச்சாரம் போன்ற தீய காரியங்கள் எதுவும் முற்றுமாக இந்தப் பட்டணத்தில் இல்லை என்று சொல்லப்படுகின்றது. ஆச்சரியமாக இல்லையா ! முற்றும் உண்மைதான் எனது கண்களாலேயே நான் அதைக்கண்டேன். நாம் நமது பொருட்களை அங்கு இழந்துவிட்டாலும் பத்திரமாக அதை திரும்ப பெற்றுக்கொள்ள லாம் என்று அங்குள்ள ஒரு வைராக்கியமான முகமதிய வாலிபன் அலி உசேன் என்பவன் என்னிடம் கூறினான். அந்த வாலிபனுடைய ''எவர் கிரீன்'' என்ற லாட்ஜில்தான் நான் தங்கியிருந்தேன். எனது கண்களுக்கு முன்பாகவே தனது லாட்ஜை ஒட்டிய விலையுயர்ந்த பொருட்கள் நிறைந்த கடையை பூட்டாமல் அன்று மாலை தனது கிராமத்துக்கு இராத்தங்க சென்றுவிட்டான். ''உங்கள் கடிகாரத்தை நீங்கள் எங்கள் ஊரில் தொலைத்துவிட்டால் அதை நீங்கள் பத்திரமாக எங்கள் ஊர் பள்ளி வாசலுக்கு சென்றுபெற்றுக் கொள்ளலாம். உங்கள் கடிகாரத்தை கண்டெடுத்தவர்கள் உடனே அதைக்கொண்டு போய் முகமதிய பள்ளி வாசலில் உள்ள மௌலவியிடம் கொடுத்துவிடுவார்கள் என்றான்.

நமது கிறிஸ்தவ கிராமங்களில் இந்த அற்புதம் நடக்குமா? தோவலய வாசலில் தனது புதிய செருப்புகளை கழற்றி வைத்து விட்டு ஆராதனை நடத்திவிட்டு வெளியே வரும்போது குருவானவருடைய செருப்புகள் அங்கில்லை. அவைகளை கிறிஸ்தவர்களே திருடிக்கொண்டு போய் விட்டார்கள். ஆனால் குருவானவருக்கு ஒரு ஆறுதல் உண்டு. அவரது ரூபாய் 200 பெறுமான பாட்டா செருப்புகளுக்கு பதிலாக ரூபாய் 5 க்கும் மதிப்பில்லாத ஒரு ஜோடு ஹவாய் ரப்பர் செருப்புகள் கட்டாயம் அங்கிருக்கும். அவைகளை போட்டுக்கொண்டு குருவானவர் வீடுவரை தைரியமாக சென்றுவிடலாம். சபையில் ஆண்டுக்கு 2 தடவைகள் நடத்திய பேரின்ப பெருவிழாக்களில் கிடைத்த உயிர் மீட்சியின் காரண மாக அந்த 5 ரூபாய் ஹவாய் செருப்புகளை மறவாமல் விட்டுச்செல்லும் பரலோக பாடத்தை அந்த செருப்பு திருடன் பெற்றிருக்கின்றான். 5 ரூபாய் ஹவாய் செருப்புடன் வீடுசெல்லும் குருவானவர் அன்று ஆராத னையில் செலுத்தப்பட்ட காணிக்கைகளில் இடம்பெற்றிருந்த பெரிய நோட்டுகளில் ஒன்றிரண்டை கிராதியிலேயே கைபோட்டு தனது பைக்குள் எடுத்துப்போட்டு வெளியே வந்தவராவார். இவை எல்லாம் இன்று உண்மையாக நடக்கும் காரியங்களாகும். அது உங்களுக்கும் தெரிந்த ஒன்றுதான். இதை எல்லாம் நாம் எங்தே கொண்டு சொல்லுவது? கர்த்தர்தான் நமக்கு இரங்கவேண்டும்.

கார்கிலில் தமது அன்பை என் மீது பொழிந்த என் அன்பின் நேசர்

தேவ ஊழியத்தின் பாதையில் லடாக் மற்றும் ஸன்ஸ்கார் பள்ளத் தாக்குக்கு சென்ற நான் கார்கில் பட்டணத்தில் சில இரவுகளை களித்திருக் கின்றேன். முதல் இரவில் நானும் காணமற்போய்விட்ட பரிசுத்த தேவபிள்ளை சாது கந்தையானந்து ஐயா அவர்களும் கார்கில் பட்டணத் தின் வெண் புழுதி தெருவில் படுத்திருந்தோம். தண்ணீர் போல அன்று இரவில் கொட்டிய பனி பொழிவிலும் கர்த்தர் தமது பிள்ளைகளாகிய எங்கள் இருவரையும் அற்புதமாக பாதுகாத்தார்.

அடுத்த இரண்டு இரவுகள் கார்கிலில் குளிர் காய்ச்சலால் பீடிக்கப் பட்டு தன்னறிவிழந்த நிலையில் நான் படுத்திருந்தேன். அப்பொழுது நான் ஸன்ஸ்கார் பள்ளத்தாக்கில் தேவனுடைய ஊழியத்தை செய்வ தற்காக நிறைய சுவிசேஷ கைப்பிரதிகளுடன் சென்றிருந்தேன். ஆரம் பத்தில் குறிப்பிட்ட அலி உசேனின் ''எவர் கிரீன்'' லாட்ஜில்தான் நான் அப்பொழுது தங்கியிருந்தேன். குளிர் காய்ச்சலில் நடுநடுங்கிப்படுத் திருந்த எனது அறைக்கு அன்பின் ஆண்டவர் பி. என். கோல் என்ற ஒரு காஷ்மீர பொறியாளரை என்னைப்பார்ப்பதற்காக அனுப்பியிருந்தார். காஷ்மீரத்து பிராமண குலத்தை சேர்ந்த (பண்டிதர்) அவர் வைராக்கிய மான இந்து குடும்பத்தில் பிறந்தவராவார். வெளிநாட்டு கிறிஸ்தவ

மிஷனரிகள் நடத்திய மிஷன் பள்ளியில் படித்த அவர் தனது 14 ஆம் வயதில் ஆண்டவர் இயேசுவை தனது சொந்த இரட்சகராக ஏற்று கிறிஸ்தவரானார். அவர் இரட்சிப்பின் அனுபவத்தை கண்டடைந்த வரலாறே ஒரு அதிசயமாகும். 14 ஆண்டுகளுக்கு முன்பாக அதை நான் நமது தேவ எக்காளத்தில் எழுதியுள்ளேன். இந்த தலையங்க குறுகிய இடத்துகுள் திரும்பவும் அந்த சாட்சியை நான் எழுத விரும்பவில்லை. காஷ்மீர அரசாங்கத்தின் மின்சாரத்துறையில் பொறியாளராக பணி செய்த அவர் கார்கிலுக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்துக்கு மின்சார வேலை காரணமாக கார்கிலுக்கு வந்து அங்கே உள்ள ''எவர் கிரீன்'' லாட்ஜில் முகாமிட்டிருந்தார்கள்.

நான் மிகவும் சுகயீனமாக படுத்திருந்த நாளின் மாலை நேரம் எனது அறையின் கதவை அவர் வந்து தட்டினார். நான் மிகுந்த கஷ்டத்துடன் கதவை திறந்தபோது எனது கண்களுக்கு முன்பாக சகோதரன் கோல் நின்று கொண்டிருந்தார்கள். நல்ல உயரமும், வாட்டசாட்டமான அழகான சரீர அமைப்பும் கொண்டிருந்த அவருடைய முகம் தேவ பிரசன்னத்தால் நிறைந்திருப்பதை என்னால் காண முடிந்தது. அந்த தேவபிள்ளை என்னிடம் கேட்ட முதல் கேள்வி ''நீங்கள் ஒரு கிறிஸ்தவனா?'' என்றதுதான். நான் ''ஆம்'' என்று விடை பகர்ந்ததும் அவர் கேட்ட அடுத்த கேள்வி ''சகோதரனே, நீங்கள் ஆண்டவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒரு விசுவாசியா?'' என்று கேட்டார்கள். நான் அதற்கும் ''ஆம். சகோதரனே'' என்று பதில் கொடுத்ததும் என்னை அப்படியே தனது மார்புற கட்டி தழுவிக்கொண் டார்கள்.

உங்களை வந்து நான் பார்க்கும்படியாக கர்த்தர் என் உள்ளத்திலே பேசினார் என்று சகோதரன் கோல் என்னிடம் சொன்னார்கள். எனது சுகயீனத்தை அறிந்த அவர் உடனே டாக்டரிடம் சென்று எனது நிலையை எடுத்துக்கூறி மாத்திரைகள் சகிதம் என்னண்டை வந்து சேர்ந்தார்கள். அவரது வலது கரத்திலே சூடான ஒரு கோப்பை கரிய தேயிலை பானம் இருந்தது. அதினுள் காஷ்மீரத்து வழக்கப்படி பாதாம் பருப்புகள் மிதந்துகொண்டிருந்தன. இடது கரத்திலே மாத்திரைகள் இருந்தன. படுத்திருந்த எனது படுக்கை வரை தாழ்ந்து குனிந்து மாத்திரைகளை சாப்பிட்டு தேயிலை பானத்தை என்னை குடிக்கச்செய்தார்கள். அந்த பரிசுத்த தேவபிள்ளையின் அன்பின் செயலால் கர்த்தர் எனக்கு அந்த இராக்காலத்திலேயே நல்ல சுகத்தை தந்தார். எனக்கு நல்ல சுகம் கிடைத்த பிறகும் என்னை அடிக்கடி வந்து பார்த்து அந்த அன்பு சகோதரன் நன்கு கவனித்தார்கள். தனது அனுபவசாட்சியை எல்லாம் என்னிடம் கூறினார்கள். நான் ஸன்ஸ்கார் பள்ளத்தாக்குக்கு தேவ

ஊழியத்துக்கு புறப்படும் நாளின் அதிகாலை வேளை அவர்களே எனது கைப்பிரதிகள் மூட்டையை பேருந்து நிலையம் வரை சுமந்துகொண்டு வந்து பேருதவி செய்தார்கள்.

நான் ஊழியம் முடித்து தமிழ்நாடு திரும்பியதும் என்னோடு ஒழுங்காக கடிதத் தொடர்பு வைத்திருந்தார்கள். எனக்கு இரண்டு அழகான காஷ்மீர கம்பளி சால்வைகள் அன்பளிப்பாக அனுப்பி இருந்தார்கள். அதின் ஒன்று இன்று வரை என் வசம் பத்திரமாக உள்ளது. காஷ்மீரத்தில் தீவிரவாதிகள் இந்து பண்டிதர்களை சுட்டுக்கொல்லும் காரணத்தால் சகோதரன் கோல் அவர்கள் அந்த மாநிலத்தில் உள்ள தனது சொந்த வீடு வாசல்கள் யாவையும் விட்டுவிட்டு ஜம்மு என்ற இடத்துக்கு வந்தார்கள். பின்னர் அவர்களுக்கு என்ன நடந்ததோ எனக்கு தெரியாது. அவர்களிடமிருந்து எந்த ஒரு கடிதமும் எனக்கு வரவில்லை.

கர்த்தாவின் எல்லையற்ற தேவ அன்பு

தன்னந்தனியனாக ஆதரவற்ற அநாதையாக விஷக்காய்ச்சலால் தாக்குண்டு அந்த முகமதிய பட்டணத்தில் படுத்திருந்த எனக்கு சகாயம் செய்யும்படியாக தனது பரிசுத்த தேவபிள்ளையை அந்த இடத்துக்கு அனுப்பிய தேவனுடைய அன்பின் செயலை எண்ணிப் பாருங்கள். சகோதரன் கோல் அவர்கள் எப்பொழுதோ காஷ்மீருக்கு போயிருக்க வேண்டியவர்கள். ஆனால், தேவன் அவர்களை கார்கிலில் தாமதிக்க வைத்திருந்தார். காரணம், அவர்களோடு சேர்ந்து வேலைசெய்யக் கூடிய மின்சார துறை வேலையாட்கள் ஏற்ற நேரம் கார்கிலுக்கு வந்து சேரவில்லையாம். வேலையாட்களை ஏற்ற நேரம் வரவொட்டாமல் தடுத்து நிறுத்தி என்னை எனது சுகயீனத்தில் கவனிக்க வசதியாக சகோதரன் கோலை ஆயத்தப்படுத்தி வைத்திருந்த தேவ அன்பை என்னவென்று சொல்லுவது !

ஆம். தேவன் அன்புள்ளவர். அவர் தமது மக்களுக்கு எப்பொழுதும் நன்மையே செய்து கொண்டிருப்பார். தமது மக்களின் வாழ்நாட்காலம் முழுவதும் அவர் தமது அன்பை பொழிந்து கொண்டே இருப்பார். ஒரு சின்னஞ்சிறிய தீங்குகூட தேவன் தமது அருமை மக்களுக்கு செய்யார்.

இரத்த சாட்சியாக மரித்த போலிகார்ப் என்ற பக்தசிரோன்மணியை குறித்து நீங்கள் வாசித்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன். இயேசு இரட்சகரை தூஷித்து ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால் அக்கினியில் போட்டு அவரை எரிக்கும் முடிவை உடனே கைவிட்டுவிடுவதாக நாட்டை அரசாண்ட சக்ரவர்த்தி அண்டோனியஸ் போலிகார்ப்பிடம் கூறியபோது அவர் சொன்ன மாறுத்தரம் ''86 வருட காலமாக நான் என் ஆண்டவருக்கு தொண்டு செய்து வருகின்றேன். இந்த 86 ஆண்டு

காலமும் அவர் எனக்கு ஒரு தீங்கு கூட செய்யவில்லை. என்னை பாவத்திலிருந்து இரட்சித்த அப்படிப்பட்ட என் ராஜாதி ராஜாவை நான் எப்படி தூஷிப்பேன் ? '' என்று கூறினராம்.

ஆம், நமது தனிப்பட்ட ஒவ்வொருவருடைய வாழ்விலும் அவர் எந்த ஒரு தீங்கும் செய்யவே இல்லை. ஆனால், மக்கள் அவரை தங்களுக்கு தீங்கு செய்பவராக திட்டமாக கருதுகின்றனர். அவரை தூஷிக்கின்றனர் அவர்மேல் கடுங்கோபம் கொள்ளுகின்றனர்.

அன்பின் தேவனை பகைத்து தூஷிப்பவர்கள்

எனக்கு மிகவும் நெருங்கிய கிறிஸ்தவ இனத்தவர் ஒருவர் தனது அன்பான மனைவி புற்று நோயால் இறந்து அவர்களை கல்லறை தோட்டத்தில் அடக்கம் செய்துவிட்டு வீடு வந்ததும் முதல் வேலையாக அவர்களும், அவர்களது வாலிப மகனும் சேர்ந்து தங்கள் வீட்டின் சுவர்களில் மாட்டப்பட்டிருந்த ஆண்டவருடைய படங்களையும், தேவ வசனங்களையும் தடிக்கம்பால் சுவரிலேயே வைத்து அடித்து நொறுக்கி செருப்புக் காலால் மிதித்து அந்தப் படங்களை கிழித்து குப்பை குழியில் வீசி எறிந்து விட்டனர்.

இப்படி செய்தவர்களில் அந்த தகப்பனுடைய மரணம் சுமார் 10 வருடங்களுக்கு பின்னர் சடுதியாக நேரிட்டது. அவர்களுடைய அடக்க ஆராதனையில் கலந்து கொள்ள நான் சென்றிருந்தேன். அப்பொழுது அவர்கள் இரண்டாம் தாரத்து மனைவி ஆண்டவர் இயேசுவை மனங் கொண்ட மட்டும் திட்டி தீர்த்தார்கள். வீட்டில் ஆரம்பித்த திட்டு கல்லறை தோட்டத்து கல்லறை குழியில் மண்போட்டு பிரேதத்தை மூடும் வரை நீண்டு சென்றது. அவர்கள் திட்டிய திட்டுகளில் ஓரிரு வார்த்தைகள் இன்றும் எனது நினைவில் உள்ளது. ''நாங்கள் உனக்கு என்ன, என்னவெல்லாமோ செய்தோமே, ஆனால், நீ கொஞ்சம் கூட இரக்கம் காட்டாமல் என்னையும், என் சிறு பிள்ளைகளையும் நடுத்தெருவில் நிற்க வைத்துவிட்டாயே'' என்ற வார்த்தையும் அதில் ஒன்றாகும். எவ்வளவு தான் ஏசினாலும், தன் படங்களை அடித்து நொறுக்கி, காலின் கீழ்போட்டு மிதித்து குப்பை மேட்டில் வீசி எறிந்தாலும் தேவன் அந்தக்குடும்பத்துக்கு மிகுந்த நன்மை செய்து அவர்களுடைய பிள்ளைகள் யாவரையும் உயர்த்தி ஆசீர்வதித்திருக்கின்றார். அந்த சகோதரி ஏசியதுபோல அவர்கள் பிள்ளைகள் எவரும் நடுத்தெருவில் நிற்கவில்லை. மாறாக, அவர்களுடைய பிள்ளைகள் அரசாங்க அலுவல்களில் நல்ல சம்பளங்களில் இன்று இருக்கின்றனர்.

தங்கள் குடும்ப வாழ்வில் மரணங்கள், வியாதிகள், கடன் தொல்லைகள், வேலையில்லா திண்டாட்டம், குழந்தை பாக்கியம் இல்லாமை,

வயது வந்தும் திருமணமாகாத கொடிய சூழ்நிலை, குடி மற்றும் போதை மருந்து பழக்கங்களுக்கு அடிமைப்பட்டு கிடக்கும் கணவன் அல்லது பிள்ளைகள் போன்ற துயரப்பிரச்சினைகளால் கசக்கிப் பிழியப்படும் தேவ மக்கள் தங்களது தாங்கொண்ணா பாடுகளின் காரணமாக தங்கள் ஆண்டவர் இயேசுவை தூஷிப்பதும், அவர் பேரில் எரிச்சலாக இருப்பதும் சர்வசாதாரணமாக நாம் எங்கும் காணும் ஒரு காரியமாகும்.

ஆனால், ஆண்டவருடைய அன்பை ருசித்த அவருடைய மெய்யான அடியார்கள் தங்கள் அருமை இரட்சகரை ஒருக்காலும் தூஷிக்கவோ அல்லது குற்றப்படுத்தவோ அல்லது அவர்மேல் எரிச்சலடையவோ அல்லது கோபம் கொள்ளவோ மாட்டார்கள். அவர் என்னை கொன்று போட்டாலும் இன்னும் அவரை நம்புவேன் என்ற யோபு பக்தனைப்போல அந்த தேவ பிள்ளைகள் பாடுகளின் மத்தியிலும் தங்கள் கர்த்தரை இன்னும் உறுதியாக பற்றிப்பிடித்து அவரில் நிலைத்து நிற்பார்கள்.

திரளான தண்ணீர்கள் (பாடு துயரங்கள்) (ஏசாயா 43 : 2)
நேசத்தை அவிக்கமாட்டாது (உன் 8 : 7)

ஒரு தேவ பிள்ளையின் வீட்டிலே கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த மூன்று பிள்ளைகளுமே போலியோ வியாதியால் முடமாகிவிட்டனர். இருவர் ஆண்கள், அடுத்தது பெண் மகள். ஆண் மக்கள் நடக்கமுடியாத முடமான நிலை மாத்திரமல்ல பேச முடியாத ஊமைப் பிள்ளைகள். பெண் பிள்ளை பேசுவாள், ஆனால், அவளும் நடக்க இயலா முடமான மகள். இந்த மூவரையும் அவர்களைப் பெற்ற தாய் தகப்பன் எப்படி வைத்து கவனித்து அவர்களுக்கு சம்ரட்ஷணைகள் செய்ய முடியும் என்று நீங்கள் நன்றாக யோசித்துப் பாருங்கள். அவர்களை போஷிப்பது, அவர்களை ஸ்நானம் செய்விப்பது, உடுத்துவிப்பது, மலஜாதிகள் செய்ய எடுத்துச் சென்று அவர்களை சுத்தப்படுத்துவது இன்னும் எத்தனையோ காரியங்களை செய்தாகவேண்டும்.

அந்த தாய், தந்தையர் இரவில் நிம்மதியாக தூங்க இயலுமா ? இப்பொழுது பிள்ளைகள் வளர்ந்து சற்று பெரியவர்களாகிவிட்டனர். ஒவ்வொருவரையும் இரவும் பகலும் படுக்கையிலிருந்து தூக்கி கொண்டு சென்று காரியங்களை கவனிக்க வேண்டும். இதைக்குறித்து நாம் கண்ணீர் சிந்தும்படியாக எவ்வளவோ எழுத இயலும். எனினும் உங்களது யூகத்துக்கே அவைகளை விட்டுவிடுகின்றேன். அந்த அருமைப் பெற்றோர் அந்த பிள்ளைகளுக்கு எதற்காக ஜெபிப்பார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள் ? அவர்கள் தேவ மக்களானதால் தங்கள் பிள்ளைகள் மூவரின் இரட்சிப்புக்காக ஜெபிப்பார்கள். மற்றபடி அவர்கள் ''ஆண்டவரே, எங்கள் பாடுகள் நீங்கவும், எங்கள் மக்களின் துயரங்கள்

முடியவும் அவர்களை சீக்கிரமாக உம்மண்டை அழைத்துக்கொள்ளும்'' என்றுதான் ஜெபிக்க இயலும். மெய்தான், பெற்ரோரின் காலத்துக்குப் பின்னர் அவர்களை யார் கவனிப்பார்கள் ?

மூன்று முடமான பிள்ளைகளை கர்த்தர் தங்களுக்கு கொடுத்தாலும் அவர்களின் பெற்ரோரான அந்த அருமை தேவ மக்கள், இந்து மார்க்கத் திலிருந்து ஜீவனுள்ள தேவனுடைய ஒளிக்குள் வந்த அந்த பெற்ரோர் கர்த்தர் இயேசுவுக்குள் மிக உறுதியாக இருந்து அவரை நேசித்து அவரை பாடித்துதித்து கீர்த்தனம் பண்ணி வருகின்றனர். அவர்களு டைய முடமான பிள்ளைகளும் கர்த்தருடைய அன்புக்குள் வளர்ந்து தங்கள் ஆண்டவரை |துதிப்பதும், ஜெபிப்பதுமாக உள்ளனர். இதுதான் தேவன்மேலுள்ள மெய் அன்பு ! இந்த அன்பை எத்தனை முடமான பிள்ளைகள் இருந்தாலும் அசைக்க இயலாது ! அல்லேலூயா.

ஒரு வல்லமையான தேவ ஊழியர். கர்த்தரை அதிகமாக நேசிக்கும் ஒரு தாசன். எத்தனையோ மக்களை கர்த்தருக்குள் வழிநடத்தினவர்கள். வேதாகமத்தை அலசி ஆராய்ந்து அதில் பாண்டித்தியம் பெற்றவர்கள். ஒரு ஆவிக்குரிய சபையின் உண்மையான மேய்ப்பன். பெற்ரோர் தங்கள் பிள்ளைகளுக்குக்கூட அந்த தேவ ஊழியரின் பெயரை வைத்துக்கொள்ள விரும்பும் அளவுக்கு ஒரு பரிசுத்தவான். அப்படிப்பட்ட தேவ மகனின் வீட்டிலும் பாடுகள். கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த பிள்ளைகளில் ஒரு பெண் மன நோய் கொண்டவள். வேதத்தில் நாம் காண்கின்ற லேகியோனைப் போல தன்னைத்தானே காயப்படுத்திக்கொள்ளும் அளவுக்கு பெலவீனமான மகள். ஆ, அந்த பரிசுத்தவானும். அவர் களின் பரிசுத்தவாட்டியுமான மனைவியும் தங்கள் அருமை மகளுக்காக தேவசமூகத்தில் எத்தனையாக மன்ருடியிருப்பார்கள்! எவ்வளவு கண்ணீர் வடித்திருப்பார்கள் ! அநேக ஆண்டுகள் ஆனபோதினும் மகளில் மாற்றமில்லை.

எனினும், தேவ மனிதர் கர்த்தருக்குள் மிகவும் பொறுமையாக இருந்து தேவன் தனக்கு தந்த பாரமான சிலுவையை அன்போடு சுமந்தவர்களாக, தனது கண்களிலிருந்து வடியும் கண்ணீரை தானே மென்று விழுங்கிக்கொண்டு கர்த்தரில் மனமகிழ்ச்சியோடு கடந்து சென்று கொண்டிருக்கின்ருர்கள். அதின் காரணமாக தன் கர்த்தரை குறித்து தனது இருதயத்தின் ஆழமான அடித்தளத்தில் கூட ஒரு மனத்தாங்கல் அவர்கள் கொண்டிருக்கமாட்டார்கள் என்று நாம் அடித்துக் கூறலாம். அத்தனையான தேவபக்தன் அவர்கள். இதுதான் தேவன்மேல் கொள்ளும் ஆழமான அசைக்கமுடியாத அன்பு.

ஒரு பரிசுத்த குடும்பத்தை நான் நன்கறிவேன். குடும்பமாக ஆண்ட வரை நேசித்து கனப்படுத்திய குடும்பம் அது. திடீரென அந்தக்

குடும்பத்தில் அதின் தலைவர் மரணத்தின் மூலமாக பிரிக்கப்பட்டார்கள். தேவ எக்காளம் பத்திரிக்கையை அதிகமாக விரும்பி வாசித்த தேவபிள்ளை அவர்கள். கணவனை இழந்த அருமை சகோதரி மிகுந்த பொறுமையோடு அந்த இழப்பை ஏற்று தனது விசுவாச வாழ்வைத் தொடர்ந்தார்கள். ஆண்டுகள் சில உருண்டோடின. கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த ஒரே மகனை மாரடைப்பின் மூலமாக சடுதியாக இழந்தார்கள். அந்த மகனுக்கு மனைவியும் சிறிய குழந்தைகளும் கூட உண்டு. அந்த ஆறுத துயரத்தையும் கூட சகோதரி தனது முழு பெலத்தையும் கொடுத்து தாங்கி கர்த்தருக்குள் அமர்ந்திருந்தார்கள். ஒரிரு மாதங்களுக்கு முன்னால் அவர்களின் ஒரே மகளின் கணவரையும் கர்த்தர் தம்முடைய ராஜ்யத்துக்கு அழைத்துக் கொண்டார். ''கணவன், மகன் என்ற எனது ஆறுதலின் அரவணைப்பை அகற்றிவிட்ட தேவன் எனது குடும்பத்துக்கு ஒரே கொழுகொம்பாக இருந்து குடும்பத்தின் காரியங்களை கவனித்த எனது மருமகனையும் ஒரு நாள் இரவுக்குள்ளாகவே தம்மண்டை சேர்த்துக் கொண்டார். அவர் கர்த்தர் அவரது திருவுள சித்தம் அதுவாக இருந்திருக்கின்றது'' என்று எழுதியிருந்தார்கள். மற்றபடி ஆண்டவரைப்பற்றி வேதனைப்பட்டு ஒரு அச்சரம் கூட அவர்கள் குறிப்பிடவில்லை. கற்பாறையாம் கிறிஸ்துவின் மேல் அஸ்திபாரம் போட்டு தனது கிறிஸ்தவ வாழ்வை கட்டிய வலுமையான தேவ அன்பு இதுவேதான். மூன்றுபேர் என்ன, முழு குடும்பமே மரணத்தின் மூலமாக துடைக்கப்பட்டாலும் இந்த தேவ அன்பை அசைக்கவியலாது.

எனது கிறிஸ்தவ வாழ்விலும் கணக்கற்ற பாடுகளின் ஊடாக கடந்து வந்த பாவி நான். முற்றிலும் மனநிலை பாதிப்புக்குள்ளான எனது அன்பான மனைவியோடு நான் அனுபவித்த துயரங்களும் சஞ்சலங்களும் சொல்லி மாளாது. எனது ஆகாரத்தை அவர்களுக்கு முன்பாக நான் சமைத்து சாப்பிட்டேன். இப்பொழுது அவர்கள் இல்லாமல் நான் தனியனாக சமைக்கின்றேன். ஒரு சிறிய உதவி கூட அவர்கள் எனக்கு செய்ய மறுத்துவிடுவார்கள். ஆகாரம் சாப்பிடும்போது வாயில் சோறு இருந்து விக்கல் எடுத்தால் தண்ணீர் கூட எடுத்துத்தர மனமற்றுப் போய் விடுவார்கள். ஆ, எத்தனையான கடினமான வாழ்க்கைப் பயணம் !

மனைவியின் பெலவீனம் அறிந்த இளைய மகன் அப்பொழுது மிகவும் சிறுவனாக இருந்தான். ஒரு நாள் பிள்ளை என்னிடம் வந்து ''அப்பா, இந்த அம்மாவை நீங்கள் ஏன் கட்டினீர்கள் ? எனது பள்ளி நண்பர்களுடைய தாய்கள் எல்லாம் எப்படி அன்பாக இருந்து அவர்களை கவனிக்கின்றனர்'' என்று கூறினான், ''என் மகனே, இந்த அன்பான தாயார் இல்லாவிட்டால் இந்த அழகான உலகத்தை நீ எப்படி கண்டிருக்க முடியும் ?'' என்று மகனிடம் கேட்டால் அவனுக்கு புரியாத சிறுபருவ

மாதலால் அதை நான் கேட்கவில்லை. இத்தனை கடினப்பயணப் பாதை யிலும் என்னை ஆட்கொண்ட என் நேச கர்த்தரை நான் முறுமுறுத்ததோ, அவர்பேரில் மனக்கசப்பு கொண்டதோ அதின் காரணமாக தேவ ஊழியம் செய்யாமல் விரக்தி அடைந்து இருந்ததோ கிடையாது. எனது 18 ஆம் வயதில் என்னை தமக்கென தெரிந்துகொண்ட என் நல்ல தேவன் எனது வாழ்வில் எனக்கு வந்து சம்பவிக்கபண்ணியதெல்லாம் எனது நித்திய நன்மைக்காகவே என்று நான் மிகுந்த மகிழ்ச்சியோடு கூறுவேன். ஆரம்பத்தில் நாம் பார்த்த போலிகார்ப் இரத்தசாட்சி பரிசுத்தவானைப் போல தேவன் எனது வாழ்நாள் முழுவதும் எனக்கு நன்மையே செய்து வந்துள்ளார்.

பரிசுத்த தேவ மக்கள் தங்கள் வாழ்வில் கடந்து செல்லும் பாடு துன்பங்களை கோர்வையாக எழுதிக்கொண்டே செல்லலாம். அதற்கு இங்கு இடம் போதாது. ஆனால், அவர்கள் எல்லாரும் ஏகோபித்த குரலில் ''எங்கள் தேவன் எங்கள் வாழ்வில் எங்களுக்கு வந்து சம்பவிக்க பண்ணியவை யாவும் எங்கள் நித்திய நன்மைக்காக மாத்திரமே. எங்கள் அன்பின் நேசர் எங்களுக்கு ஒரு சிறிய தீங்கு கூட செய்யவில்லை'' என்று ஆரவாரித்து குரல் கொடுப்பார்கள்.

முடிவில்லா யுகாயுகங்களாக தம்மோடு நாம் வாழ நம்மை தகுதிப்படுத்தும் தேவன்

பூவுலகத்தில் நாம் வாழப்போகும் வாழ்க்கை தேவனுடைய வசனத்தின்படி அநேகமாக 80 ஆண்டுகளுடன் (சங் 90 : 10) முற்றுப் பெறுகின்றது. ஆனால், நாம் பரலோகத்தில் ஆண்டவர் இயேசுவுடன் வாழப்போகும் வாழ்க்கை 80 அல்லது 100 வருடங்களோடு முடிவடையும் ஒரு வாழ்கையல்ல. அப்படியானால் ஆண்டவருடன் 1000 ஆண்டுகள் வாழப்போகும் வாழ்க்கையா ? இல்லை, அப்படியானால் இரட்சகரோடு ஒரு லட்சம் வருடங்கள் வாழவிருக்கும் பேரின்ப வாழ்வா? அதுவும் இல்லை, அப்படியானால் பரிசுத்த கர்த்தரோடு ஒரு கோடி ஆண்டுகள் வாழப்போகும் பரதீசின் வாழ்வா? அதுவும்தான் இல்லை, அப்படியானால் பரமராஜாவோடு கோடி என்ற எண்ணை கோடி என்ற எண்ணால் பெருக்கி வரும் கோடானுகோடி ஆண்டுகள் வாழப்போகும் மோட்ச வாழ்வா ? அந்த எண்ணிக்கைக்குரிய ஆண்டுகளின் காலக்கெடுவிலுள்ள மேலோக வாழ்வும் அல்ல. கணக்கிட முடியாததும், மனிதனின் எண் கணக்குக்கு உட்படாததும், முடிவு என்பது முற்றுமே இல்லாத ஊழி, ஊழி காலமான ஆண்டுகள் நாம் நமது இரட்சகருடன் பொன்தளம் போட்ட வீதிகளை உடையதும், நவரத்தின கற்களால் தேவனால் நிர்மாணிக்கப்பட்டதுமான மாட்சிமிகும் மோட்ச நகரிலே நாம் வாழ இருக்கின்றோம்.

அப்படி நாம் நித்திய காலமாக மோட்சத்தில் அவருடன் வாழ்வ தற்கு தேவன் நம்மை இந்த பூவுலகத்திலேயே நன்கு ஆயத்தம் செய்கின் ரூர். அந்தவிதமான ஆயத்தம் பலவிதங்களிலும் நம்மில் நடைபெறு கின்றது. தங்களுடைய நாசியில் தம்முடைய ஜீவசுவாசத்தை வைத்த தங்கள் அன்பின் ஆண்டவரை முற்றுமாக மறந்து உலக மாயையில் குதித்து கும்மாளமிடும் மக்களுக்கு சட்டென்று ஒரு மரணத்தை அந்தக் குடும்பத்தில் சம்பவிக்கப்பண்ணி அவர்களின் கட்டுக்கடங்கா பெருமையை அடக்கி பரலோகத்துக்கு நேராக அவர்களுடைய கண்களை ஏறெடுக்கும் படியாகச் செய்கின்ரூர். தேவன் தம்முடைய மக்களை எப்படி எப்படி எல்லாம் சிட்சித்து தம்முடைய பரலோகப் பாதைக்கு அவர்களை திருப்பிக் கொண்டு வந்து சேர்க்கின்ரூர் என்பதை கீழே கண்ட மூன்று உதாரணங் களால் உங்களுக்கு விளக்க விரும்புகின்றேன்.

தவருன மந்தையுடன் சேர்ந்துவிட்ட பேதை ஆடு

தேவ ஊழியத்தின் பாதையில் 1998 ஆம் ஆண்டு இமயமலைகளி லுள்ள டார்ச்சுலா என்ற இடத்துக்கு நாங்கள் சென்றிருந்தோம். ஒரு நாள் டார்ச்சுலாவிலிருந்து சில கி. மீ. தொலைவிலுள்ள ஒரு சிறிய கிராமத்துக்கு தேவ ஊழியத்திற்காய் போயிருந்தோம். அந்த சமயம் ஒரு பெரிய கூட்டம் ஆட்டு மந்தை டார்ச்சுலாவிலிருந்து வெளியே எங்கேயோ போய்க்கொண்டிருந்தது. குறைந்தது ஆயிரம் ஆடுகளுள்ள அந்த பெரிய மந்தையை சில தீபெத்திய நாடோடிகள் கவனமாக ஓட்டிச் சென்று கொண்டிருந்தனர். அந்த மந்தைக்கு பாதுகாவலாக சில தீபெத்திய நாய்கள் சென்று கொண்டிருந்தன. சற்று நேரத்துக்குள்ளாக இந்த ஆட்டு மந்தையை எதிர்த்து எதிர் திசையிலிருந்து ஒரு ஆட்டு மந்தை டார்ச்சுலாவை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஏரிரு நூறு ஆடுகளைக்கொண்ட அந்த மந்தையைக்கண்டதும் இரண்டு ஆட்டு மந்தைகளும் ஒன்றுக்கொன்று கலந்து இன்று ஒரு பெரிய சிக்கலை உண்டுபண்ணிவிடும் என்று நான் எண்ணினேன். ஆடுகள் எல்லாம் ஒரேவிதமாக செம்மறியாடுகளாக இருந்தன. என்ன ஆச்சரியம், டார்ச்சுலாவை நோக்கி வந்துகொண்டிருந்த ஆடுகள் அற்புதமாக அந்த பெரிய ஆட்டு மந்தையைக்கடந்து வெளியே வந்துவிட்டது. இந்த மந்தை கொஞ்ச தூரம்தான் சென்றிருக்கும். அதற்குள்ளாக ஆயிரத் துக்கும் அதிகமான ஆடுகளைக்கொண்ட ஆட்டு மந்தையை ஓட்டிச்சென்று கொண்டிருந்த தீபெத்தியர்களில் ஒருவன் ஓட்டமாக ஓடி வந்து சிறிய மந்தைக்குள் பாய்ந்து அதில் ஒரு குறிப்பிட்ட ஆட்டை பிடித்து மந்தை யிலிருந்து இழுத்து வந்தான். தனது ஆடுகளில் ஒன்று அந்த சிறிய மந்தை ஆடுகளுடன் சேர்ந்து கொண்டதை அந்த மேய்ப்பன் எப்படித் தான் கண்டுபிடித்தானோ எனக்கு தெரியவில்லை. அந்த ஆட்டின் ஒரு காலைப் பிடித்து ரோட்டில் கடகடவென்று இழுத்துக்கொண்டு வந்ததால்

அது சத்தம்போட்டு கதறத் தொடங்கியது. ஆனால், அந்த ஆட்டிடையன் அதற்கு இரங்குவது போல தெரியவில்லை. தனது ஆட்டை தனது மந்தையுடன் கொண்டு வந்து சேர்க்கும் வரை அதை இரக்கமின்றி இழுத்துக்கெகண்டே வந்து சேர்த்தான்.

அந்த ஆடு அந்தவிதமாக இழுத்துக்கொண்டு வந்த தனது மேய்ப்பனை ஒரு இரக்கமற்ற கொடியவனாக எண்ணியிருக்கும். : நான் எத்தனை மகிழ்ச்சியோடு எனது நண்பர்களோடு போய்க் கொண்டிருந்தேன். நான் ஒரு தவறும் செய்யவில்லையே'' என்று அது நினைத்திருக்கலாம். ஆனால், அதற்கு முன்பாக உள்ள ஆபத்து என்னவென்பதை அதைப்பிடித்து இழுத்து வந்த மேய்ப்பன் நன்கு அறிவான். தனது மந்தையிலிருந்து தப்பிபோன ஆட்டை மற்ற மேய்ப்பன் அடுத்த கிராமம் சென்றதுமே குறைந்த விலைக்கு உடனே விற்றுவிட்டு போய்விடுவான். குறைந்த விலைக்கு கிடைத்த திருட்டு ஆட்டை வாங்கினோரும் அதை விரைவாக வெட்டிக்கொன்று இறைச்சியாக்கிவிடுவார்கள். சமைத்தும் சாப்பிட்டுவிடுவார்கள். தனது அன்பான மேய்ப்பன் தன்னை ரோட்டில் கொடூரமாக இழுத்துச்சென்ற செயலுக்காக அது அவனை கொடியவனாக கருதுவது அதினுடைய மதியீனமாகும்.

மேற்கண்ட இமயமலை ஆட்டைப்போலவே தேவ மக்களும் தங்களுடைய நல்ல மேய்ப்பனை விட்டு விட்டு தங்கள் ஆத்துமாவுக்கு நாசத்தை உண்டுபண்ணக்கூடிய சத்துருவான பிசாசின் மந்தையில் சேர்ந்து கும்மாளமிட்டுக்கொண்டு ஜீவ பாதை தவறி செல்லும் தமது மக்களை இமயமலை ஆட்டிடையனைப்போல நடுரோட்டில் வைத்தே காலைப்பிடித்து அலற, அலற இழுத்ததைப்போல துன்பங்கள், வியாதிகள், பாடுகள், நெருக்கங்களைக்கொடுத்து இழுத்து நீதியின் ஜீவ பாதையில் திரும்பவும் அவர்கள் தங்கள் பாதங்களை ஊன்றும்படியாகச் செய்கின்றார்.

அணில் கூட்டில் தண்ணீர் வார்த்த சம்பவம்

நாங்கள் குடியிருக்கும் வீட்டுக்கு அருகில் ஒரு பேரிக்காய் மரம் உள்ளது. மரத்தின் பெரிய கிளைகள் இரண்டு அடி மரத்திலிருந்து சற்று உயரத்தில் இரண்டாக பிரிந்து செல்லுகின்றது. அவைகள் பிரியும் இடத்தில் ஒரு ஆழமான பொந்து உள்ளது. அந்த பொந்தில் கடந்த 3 ஆண்டுகளாக கருஞ்சிட்டு குருவி ஒன்று ஒழுங்காக ஒவ்வொரு ஆண்டு கோடை காலமும் முட்டையிட்டு குஞ்சு பொரித்து தனது குஞ்சுகளை பத்திரமாக கூட்டிச் செல்லுவதை நான் கவனித்து வருகின்றேன். இந்த ஆண்டும் அந்த குருவி அதே பொந்தில் முட்டைகளிட்டு தனது குஞ்சுகளை அழைத்துச் சென்றதன் பின்னர் சுமார் 2 மாத கால இடைவெளிக்குப் பிறகு ஒரு அணில் அந்த பொந்தை பார்வையிட்டு தனது குட்டிகளைப் போட அது ஏற்ற இடம் என்று கண்டு கூடு கட்டத் தொடங்கியது.

முதலாவது துணிகள் போன்றவற்றை அது கூடு கட்ட எடுத்துச்செல்லு வதை நான் கவனித்தேன். பின்னர் அது மென்மையான நார்களை தனது வாயில் கவ்விக்கொண்டு செல்லுவதை நான் பார்த்தேன். இந்த செயலுக்கு பின்னர் அது தனது குட்டிகளைப் போடும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இந்தச் சமயத்தில் திடீரென ஒரு நாள் அணில் வீர், வீர் என்று சத்தம் போட்டது. தனக்கு பிராணச் சேதம் உண்டாகும் போது அணில் அந்த குரலை எழுப்புவதுண்டு. அதின் அபயக் குரலின் காரணத்தை அறிய நான் வெளியே வந்து பார்த்தபோது பக்கத்து வீட்டு பூனை அணிலின் கூடுகட்டும் நடவடிக்கையைக் கவனித்து அந்தப் பொந்துக்கு அருகில் வைத்தே அணிலைப் பாய்ந்து பிடிக்க பிரயாசப்பட்டு அதின் முயற்சி நூல் இழையில் தோல்வி அடைந்ததை நான் கண்டேன்.

திரும்பவும் அணில் அந்தப் பொந்துக்குள் நுழையும் பட்சத்தில் பூனையானது அருகில் காத்திருந்து அணிலை கட்டாயம் பிடித்துவிடும் என்பதை கண்ட நான் அணிலை அந்த பொந்துக்குள் திரும்பவும் போக விடாமல் தடுப்பதற்கு என்ன உபாயம் செய்யலாம் என்று ஆழ்ந்து யோசித்தேன். அணில் கூடுகட்டிய பொந்திற்குள் பெரிய கற்கள் எதையும் போட முடியாது. காரணம் அது ஒரு இடுக்கமான பொந்து. இறுதியாக எனக்கு ஒரு நல்ல யோசனை தென்பட்டது. அதின்படி ஒரு வாளி நிறைய தண்ணீர் நிரப்பி வந்து ஒரு சிறிய மக்கின் உதவியால் தண்ணீரை மொண்டு அந்த பொந்துக்குள் தாராளமாக ஊற்றினேன். அது நிறைய தொடங்கியது. தண்ணீர் நிறைந்த பொந்துக்குள் அணில் எப்படி தனது குட்டிகளை போட இயலும்? அணில் அதற்கப்பால் அந்த பொந்தின் பக்கமே வரவில்லை. பொல்லாத பூனையார் வாயிலிருந்து அணிலை நான் பாதுகாத்தேன்.

அணில் கூடுகட்டி தனது குட்டிகளை போட ஆயத்தமானபோது அந்த பொந்திற்குள் தண்ணீர் ஊற்றிவிட்டு நான் வரும்போது கர்த்தரு டைய ஆவியானவர் என் உள்ளத்தில் ''என் மகனே, நான் அன்பாக நேசிக்கின்ற எனது அன்பு மக்கள் ஒவ்வொருவருக்கும் நீ செய்த அதே காரியத்தைத்தான் செய்கின்றேன். பூனை வாயிலிருந்து அணிலை காப்பாற்ற நீ அணில் கூடுகட்டிய பொந்தினுள் தண்ணீரை ஊற்றினாய். நானும் அப்படியேதான் எனது அருமை பிள்ளைகள் வலுசர்ப்பமாம் பிசாசின் வாயிலிருந்தும், நித்திய நரக அக்கினியிலிருந்தும் பாதுகாக்க பற்பலவிதமான சிட்சைகளையும், பாடுகளையும் அவர்கள் வாழ்வில் அனுமதிக்கின்றேன்'' என்று பேசினார்.

நான் அணில் பொந்தில் தண்ணீர் ஊற்றுவதை அந்த அணில் பார்த் திருக்குமானால் அது என்னை சபித்து சாபமிட்டிருக்கும். ''எனது பாடுகள் பல நாட்கள் பிரயாசங்கள் யாவையும் ஒரு நொடிப் பொழுதில் இரக்க மற்ற கொடியவன் பாழடித்துவிட்டான்'' என்று அது அழுது புலம்பி யிருக்கும். ஆனால், நான் அதின் உயிரை நிச்சயமான மரணத்திலிருந்து பத்திரமாக பாதுகாத்து கொடுத்திருக்கின்றேன் என்பது அணிலுக்கு தெரியாது.

நல்ல வசதியான மேல்நாட்டு உத்தியோகம். பாங்கிலே திரண்ட பணம். குடும்பத்தில் அனைவருக்கும் நோய் நொடி யற்ற திடகார்த்த சரீரம். தேவனைத் தேடவும், அவரை பாடித்துதிக்கவும் அந்த ஐசுவரிய குடும்பத்துக்கு அவசியமே இல்லாமல் போய்விட்டது. செல்வத்திரட்சியால் கர்த்தரை தேடாமல் இருந்தாலும் பரவாயில்லை. அந்த செழுமையான நிலையில் குடும்பத்தின் தலைவன் கர்த்தருடைய காருண்யத் தையும், இரக்கத்தையும், அவருடைய கிருபை கடாட்சத்தை யுமே குறித்து எள்ளி நகையாடி பேசி ''நான் கட்டின பாபிலோன்'' என்ற நெஞ்சின் கர்வம் மெதுவாக தலைகாட்டத் தொடங்கியது. இந்த நிலையில் முதலாவது தேவன் குடும்பத் தலைவனின் புத்தியை தடுமாறச் செய்து தனது நல்லவேலையை விட வைத்து சொந்த தொழில் தொடங்க வைக்கின்றார். கூட்டுச்சேர்ந்து ஆரம்பித்த தொழில் எதிர்பாராதவிதமாக கடும் நஷ்டத்துக்குள் போய் முடிகின்றது. இந்த இக்கட்டான நேரம் குடும்பத்தலைவனின் சரீரத்தில் ஒருவித சரும நோய் ஆரம்பித்து அவனை இரவும் பகலும் வாட்டி வதைக்கின்றது. தன்னை அன்பாக இதுவரை நேசித்த மனைவியின் அன்பு தடு மாறுவதை அவன் மிகுந்த கலக்கத்துடன் பார்க்கின்றான். வேலையை இழந்த துயரம், தொழிலில் பெரும் பண நஷ்டம், சரீரத்தில் பலமான நோய். இந்த துயரமான நேரம் மனிதர் தன் முகத்தை தேவனுக்கு நேராகத் திருப்புகின்றார். தம்மை நோக்கி கூப்பிடும் எந்த ஒரு பாவியையும் தள்ளாத அன்பின் தேவன் தமது பிள்ளையின் முகத்தை கருணையோடு பார்த்து சமாதானத்தையும், சந்தோசத்தையும் அந்த சிறுமைப்பட்ட ஆத்துமாவுக்கு கொடுக்கின்றார். மீண்டும் புது வாழ்வு மெல்ல மெல்ல அந்த குடும்பத்தில் துளிர்க்கின்றது. தனது ஆண்ட வரை தேடாமல் போன மனக்கடினமான நாட்களையும். அந்த அன்பின் தேவனுடைய வழிநடத்துதல்களையும், அன்பையும் அற்பமாக எண்ணி இகழ்ந்து பேசின காலங்களையும் மனிதர் அருவருத்து சபிக்கத் தொடங்குகின்றார். தேவனுடைய சிங்காசனம் அந்த மனிதரின் உள்ளத்தில் நிலைநாட்டப்பட்டு அவருடைய அன்பின் பிரசன்னம் அந்த மனிதரை சூழ்ந்து கொள்ளுகின்றது.

இப்படியாகவே தேவன் தமது அன்பிலிருந்து வழிவிலகிச் செல்லும் தமது மக்கள் அனைவரையும் சிட்சித்து, அடித்து, நொறுக்கி திரும்பவுமாக தமது அன்புக்குள் கொண்டு வந்து சேர்க்கின்றார். சங்கீதக்காரர் இதைக்குறித்து பேசும்போது ''நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது'' (சங் 119 : 71) என்றும் ''நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந் தேன். இப்பொழுதோ உம்முடைய வார்த்தையை காத்து நடக்கிறேன்'' (சங் 119 : 67) என்றும் கூறுவார்.

பாதுகாப்பான கூட்டைவிட்டு விட்டு காற்று வாங்கவந்த நாரைக்குஞ்சுகள்

கடந்த வருடம் ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பரத்பூரின் கலேடா பறவைகள் சரணாலயத்தை நாங்கள் காணச் சென்றிருந்தோம். அங்கு தண்ணீருக்குள் நின்று கொண்டிருந்த ஒரு உயரமான பெரிய மரத்தில் நீண்ட கால்களையுடைய செங்கால் நாரைகள் (பெயிண்டட் ஸ்ட்ரோக்ஸ்) கூடுகள் கட்டி அந்தக் கூடுகளில் குஞ்சுகள் இருப்பதை நான் கவனித்தேன். ஒவ்வொரு கூட்டிற்கு முன்பும் இரண்டு நாரைகள் தங்கள் இரண்டு குஞ்சுகளுக்கு முன்பாக அமைதியாக நின்று கொண்டிருப்பதை கவனித்தேன். இப்படி பல கூடுகள் அந்த பெரிய மரத்தின் உச்சியில் இருந்தன. அந்தக்கூடுகளை நான் அப்படியே பார்த்துக் கொண்டிருந்த வேளையில் குறிப்பிட்ட ஒரு கூட்டில் இரண்டு நாரைகள் தங்கள் இரண்டு குஞ்சுகளை ஒன்று மாற்றி மற்றொன்று சரமாரியாக கொத்தியவண்ணமாக இருப்பதை நான் துக்கத்துடன் பார்த்தேன். அப்படி அவைகள் கொத்துவதை நான் பார்த்ததும் அவைகள் ஒருவேளை அவைகளுக்கு பெற்றோர் பறவைகள் அல்லவென்றும் இன்னும் சற்று நேரத்துக்குள்ளாக அவைகள் அந்த இரண்டு குஞ்சுகளையும் கொத்தியே கொன்றுவிடும் என எதிர்பார்த்தேன். ஆனால், உண்மையில் அவைகள் அந்த குஞ்சுகளின் பெற்றோர்தான். அப்படியானால், அவைகள் தங்கள் குஞ்சுகளை அத்தனை இரக்கமில்லாமல் ஒருவர் மாற்றி ஒருவர் ஏன் கொத்தவேண்டும்? அதற்கான காரணத்தை சீக்கிரமாகவே நான் கண்டு கொண்டேன்.

அந்த இரண்டு குஞ்சுகளும் தங்களுடைய பாதுகாப்பான கூடுகளை விட்டு கீழே இறங்கி வந்து ஆபத்தான மரக்கிளையில் அமர்ந்திருந்தன. தங்கள் பாதுகாப்பான கூட்டைவிட்டு குஞ்சுகள் கீழே இறங்கி வந்ததிலும் காரணம் இருந்தது. வசதியற்றதும், தாங்கள் உண்ட உணவுகளின் நாற்றமான கழிவுகளின் மேல் படுத்திருப்பதும் அவைகளுக்கு விருப்பமில்லாமல் இருந்திருக்கவேண்டும். எனவே, அவைகள் காற்று வாங்கி நல்ல சௌகரியமாக கொஞ்ச நேரம் உட்கார்ந்து மகிழ தங்கள் கூட்டைவிட்டு இறங்கியிருக்க வேண்டும். சற்று கவனகுறைவாக இருந்தால் அவைகள் இரண்டும் அங்கிருந்து கீழே உள்ள தண்ணீர் தடாகத்தில் விழவேண்டியதுதான். இப்படி கீழே விழக் கூடிய குஞ்சுகளை சாப்பிட்டு ஏப்பமிட நரிகள் தண்ணீரில் சுற்றித்திரிந்தவண்ணமாக உள்ளன. கூட்டை விட்டு இறங்கி வந்த குஞ்சுகளை பெற்றோர் பறவைகள் கொத்தும் ஒவ்வொரு கொத்திலும் அவைகள் அமைதியாக நகர்ந்து, நகர்ந்து கூட்டை நோக்கி ஏறுவதை நான் கண்ணுரக்

கண்டேன். அந்த இரண்டு குஞ்சுகளும் முழுமையாக கூட்டுக் குள் போய் சேர்ந்து பாதுகாப்பாக இருக்கும் வரை தாய், தந்தை பறவைகளின் பலமான கொத்துகள் தொடர்ந்து விழுந்து கொண்டே இருந்தன. அந்த காலை வேளையில் கர்த்தருடைய ஆவியானவர் அந்தக்காட்சியை நான் காணும் படியாக செய்து எத்தனை அருமையானதொரு ஆவிக்குரிய பாடத்தை நான் கற்றுக்கொள்ள கிருபை செய்தார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்.

மேற்கண்ட பரத்பூர் நாரை குஞ்சுகளைப்போன்று தங்கள் பாதுகாப்பான கூட்டை விட்டுவிட்டு உலக மாயை என்ற குளுகுளுவென்ற காற்றை வாங்க வரும் கிறிஸ்தவ மக்கள் உண்டு. ஒழுங்கான குடும்ப ஜெபம், பரிசுத்தம், பக்தி வாழ்க்கை, பரலோக வாழ்வின் வாஞ்சை போன்றவற்றை அவர்கள் மெதுவாக கொஞ்சம், கொஞ்சமாக கை நழுவ விடுவார்கள். அது எப்படி வந்தது என்றால் தங்கள் வீட்டில் ஒரு டி. வி. பெட்டி வந்து சேர்ந்ததால் அது நடந்தது. தங்கள் பிள்ளைகள் டி. வி. இல் கார்ட்டூன் படங்கள் பார்ப்பதற்காக அடிக்கடி பக்கத்து வீட்டுக்கு போய்விடுகிறார்கள் என்று எண்ணி பெற்றோரே ஒரு டி. வி. பெட்டியை விலைக்கு வாங்கி வந்து அந்தந்த நேரம் பிள்ளைகளுக்கு கார்ட்டூன் நிகழ்ச்சிகளை போட்டுக் காட்டினார்கள். செய்திகளையும் ஒழுங்காக பார்த் தார்கள். பின்னர், பறவைகள், வனவிலங்குகள், மற்றும் இயற்கை விந்தைகளை டி. வியில் காண்பிக்கும் ''டிஸ்கவரி சானல்'' பகுதியை எல்லாருமாக பார்க்கத் தொடங்கினர்கள். பின்னர் அது வளர்ந்து, வளர்ந்து ஒழுங்காக சினிமாக்களை பார்க்கத் தொடங்கினர்கள். இறுதியாக பிள்ளைகளும் கெட்டு, பெற்றோரும் கெட்டார்கள்.

தங்கள் அருமை இரட்சகரின் உன்னதமான தேவ அன்பி லிருந்து கொஞ்சம், கொஞ்சமாக வழிவிலகி உலக நேசத்துக் குள் சிக்கிக்கொண்ட தனது மக்களை ஆண்டவர் இப்பொழுது எதிர்பாராத பணச்செலவுகள், பணக் கஷ்டங்கள், பாடுகள், சத்துருக்களின் நெருக்குதல்கள், நிந்தை, அவமானம் போன்ற வற்றால் கொத்து கொத்தென்று கொத்தி திரும்பவும் தங்களு டைய பாதுகாப்பான பரிசுத்த நிலைக்கு கொஞ்சம், கொஞ்சமாக அவர்களை கொண்டு வந்து சேர்க்கின்றார். சாத்தான் எப்படி வீட்டுக்குள் புகுந்தான் என்பதை கண்டுபிடித்த அந்த தேவ மக்கள் தங்கள் டி. வி. பெட்டியை முதல் வேலையாக தூக்கி எடுத்து ஒரு போர்வையால் மூட்டைகட்டி தங்கள் வீட்டின் மொட்டை மாடிக்கு நிரந்தரமாக தள்ளிவிடுகின்றனர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

பாடுகளின் ஊடாக கடந்து செல்லும் தேவ ஜனமே
உனது அதிசய கர்த்தரின் ஞானத்தை தியானித்துப் பார்

தேவனுடைய மாட்சியான சிருஷ்டிப்பின் கிரியைகளில் உள்ள அவரது அனந்த ஞானத்தை நாம் அடிக்கடி சிந்தித்து தியானிப்போமானால் நாம் நமது கிறிஸ்தவ வாழ்வில் அனுபவிக்கும் பாடுகள் யாவும் நமக்கு பொறுமையையும், நீடிய சாந்தத்தையும், கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கும் பரலோக மன அமைதியையும் நிச்சயமாக அளிக்கும்.

ஒரு சமயம் ஒரு கர்த்தருடைய பிள்ளை இப்படியாக எனக்கு எழுதினார்கள் ''வீட்டிலே பெருமை கொண்ட எனது மனைவியோடு வாழும் கடினமான வாழ்க்கை, நான் செய்யும் தொழிலிலே பெற்ற எனது தகப்பன் தந்திரமாக எனது பணங்களை எடுத்து தனது வசதியாக வாழும் பெண் மக்களுக்கு என்னை அறியாமல் கொடுத்து என்னை அலைக்களிக்கும் கொடுமை போன்றவற்றின் மத்தியில் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து ஒரு நாள் மாலை நேரம் நான் சமுத்திரத்தை நோக்கி ஓடினேன். சமுத்திர கரை மணலில் அமர்ந்த வண்ண சமுத்திரத்தையும், அடுக்கடுக்காக அதிலிருந்து எழுந்து வரும் பெரிய அலைகளையும் பார்த்துக்கொண்டே இருந்தேன். ஆண்டவரின் எல்லையற்ற ஞானத்தை நான் அந்த சமுத்திரத்திலே கண்டேன். நான்கில் மூன்று பரப்பை தன்னகத்தே வைத்துக்கொண்டுள்ள சமுத்திரத்தை கரைகள் இல்லாமல் படைத்து அது பூமியை விழுங்கிவிடாதிருக்க அதற்கு கட்டளை கொடுத்து ''இம்மட்டும் வா, மிஞ்சி வராதே, உன் அலைகளின் பெருமை இத்துடன் தணியக்கடவது'' என்று கட்டளை அளித்து அந்த பிரமாண்டமான சமுத்திரம் கடவாதிருக்கும் எல்லையை அதற்கு நிர்மாணித்த கர்த்தரின் பிரமிக்கதக்க ஞானத்தை ஆழ்ந்து தியானித்தேன். இருள் சூழும் நேரம் வரை கடற்கரை மணற் பரப்பிலேயே அமர்ந்திருந்தேன். ஆண்டவருடைய ஞானத்தை தியானித்ததின் பின்னர் என் மனதிலே மிகுந்த சமாதானம் ஏற்பட்டது. இந்த ஞானத்தோடு சமுத்திரத்தை படைத்த என் தேவன் எனது வாழ்வில் பாடுகளை அனுமதித்ததிலும் அவருக்கு ஒரு மேலான நோக்கம் இருக்கவேண்டும் என்ற நிச்சயமான முடிவுக்கு வந்தேன். ''இரையாதே, அமைதலாயிரு'' என்று சமுத்திரத்தை அதட்டி அமரப்பண்ணிய கர்த்தர் போராட்டங்கள் நிறைந்த எனது மனதையும் அந்த மாலை நேரத்திலே அடக்கி அமரச் செய்து தேவ சமாதானத்தோடு வீட்டுக்கு வர கிருபை செய்தார்'' என்று எழுதியிருந்தார்கள்,

வாசிக்கும் தேவ ஜனமே, உங்களைச் சுற்றியுள்ள தேவனுடைய படைப்பின் ஞானத்தை அடிக்கடி உற்று நோக்கிப் பாருங்கள். ''கர்த்தர் ஞானமுள்ள தேவன்'' (1 சாமு 2 : 3) என்று சாமுவேல் தீர்க்கனின் பரிசுத்த தாயார் அன்னாள் அவரை புகழ்ந்து போற்றி பாடினார்கள்.

வானம், பூமி, சமுத்திரம் என்ற மூன்று அற்புத படைப்புகளிலும் தேவனுடைய அற்புத ஞானம் கரை புரண்டு ஓடுகின்றது. ''வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது'' (சங் 19:1) என்ரூர் சங்கீதக்காரன். தேவன் படைத்த நட்சத்திரக் கொத்துகளை உங்கள் கண்ணேறிட்டுப் பாருங்கள். அவர் படைத்த நட்சத்திரங்கள் பலவற்றின் ஒளி இன்று வரை பூமியை வந்து எட்டவில்லையாம். ஒளியானது ஒரு விநாடிக்கு 1,86,000 மைல்கள் வேகத்தில் பயணம் செய்யக் கூடியது. தேவன், வானம், பூமியை படைத்து எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்பொழுதே தங்களது பயணத்தை தொடங்கிவிட்ட அந்த நட்சத்திரங்களின் ஒளியானது இன்று வரை பூமியை வந்து அடையவில்லை என்ரூல் அந்த நட்சத்திரங்கள் எவ்வளவு உயரத்தில் இருக்கவேண்டும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள் ! ஒவ்வொரு நட்சத்திரக் கொத்திலும் 1000 கோடி நட்சத்திரங்கள் உள்ளனவாம். அப்படி 1000 கோடி நட்சத்திரக்கொத்துகள் அகண்ட வான வீதியிலே உள்ளனவாம். ஒரு நட்சத்திரம் நமது பூமியைவிட எத்தனையே கோடி மடங்கு பெரியதாம். தேவனுடைய மாட்சியான ஞானத்தை நாம் நினைத்துப் பார்த்தால் நமது தலை தானாகவே சுழலத்தொடங்கும்.

பூமியை பாருங்கள், ஆண்டவர் படைத்த தாவரங்கள், பறவைகள், மிருகங்கள், ஊர்வன யாவும் அவரது ஞானத்தால் நிறைந்துள்ளன. ஒவ்வொரு மலருக்கும் ஒரு வடிவமைப்பு, ஒரு வாசனை, அதற்கான நிறங்கள் உள்ளன. ஒவ்வொரு பழத்துக்கும் ஒரு வடிவமைப்பு, ஒரு வாசனை, ஒரு அலாதியான சுவை. ஒவ்வொரு மரமும் அதின் இலைகளும் தனித்தன்மையுடையவைகளாக இருக்கின்றன.

12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை பூக்கும் குறிஞ்சி மலரைப் பாருங்கள். இங்கு எங்கள் நீலகிரி மலைகளில் மலரும் அந்த அதிசய தாவரம் 12 ஆண்டுகளாக எந்த ஒரு சலனமுமின்றி இருந்துவிட்டு 12 ஆம் வருடத்தில் முளைத்து வளர்ந்து மலை முழுவதும் மலர்களால் நிறைந்து கிடப்பதை காணலாம். அடுத்த ஒரு 12 ஆண்டுகளுக்கு அந்த தாவரங்கள் இருக்கும் இடத்தை கண்டு பிடிக்கவே முடியாது. என்னே தேவனின் ஞானம் !

இரவில் மாத்திரம் மணம் வீசும் "இரவு ராணி" என்ற மலர் தாவரத்தை நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா ? பகல் முழுவதும் அந்த தாவரத்தின் மலர்களில் ஒரு சிறிய வாசனையை நாம் கண்டு பிடிக்க இயலாது. ஆனால், இருள் சூழ்ந்த இரவு நேரத்தில் அந்த செடிகளண்டை செல்லுங்கள். ஆ, என்ன ஒரு நறுமணம் ! அந்த இடமே வாசனையால் மூழ்கிக்கிடக்கும் பகலில் அந்த வாசனை எங்கே சென்றது ? இரவில் அது எப்படி திரும்ப அந்த மலருக்குள் வந்தது !

பூச்சிகள் சிறு, பறவைகளைக்கூட உணவாகக்கொள்ளும் தாவரங்களை பற்றி நாம் படித்திருக்கின்றோம். ஆனால், மிருகங்களை உணவாகக்கொள்ளும் மரங்கள் கூட இருக்கின்றனவாம். ஆண்டவரது படைப்புகள் ஆராய்ந்து முடியாதவைகள் !

ஒரு பெரிய ஆலமரத்தை நான் பார்த்துக்கொண்டிருந்தேன், பிரமாண்டமான அந்த மரம் தனது விசாலமான கிளைகளை நாலு திசைகளிலும் பரப்பியிருந்தது. அந்த மரத்தின் பெரிய கிளைகள் முறிந்து விழுந்து விடாமல் இருக்க கிளைகளிலிருந்து விழுதுகள் கீழே நோக்கி இறங்கி வந்து தொங்கிக்கொண்டிருந்தன. தொங்கிக் கொண்டிருந்த விழுதுகள் சில இடங்களில் பூமியை வந்து தொட்டு மரகிளைகளுக்கு ஊன்று கோல்களாக நின்று கொண்டிருந்தன. தொங்கிக்கொண்டிருந்த இளம் விழுதுகளில் சிறுவர்களும் வாலிப பிள்ளைகளும் ஊஞ்சல் கட்டி ஆடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். ஆலமரத்தின் பழக்கால மானதால் கிளிகள், மைனாக்கள், குயில்கள் போன்ற பறவைகள் ஆனந்தக் குரல்கள் எழுப்பிக்கொண்டே பழங்களை கொத்தி தின்று கொண்டிருந்தன. அந்த ஆனந்தமான குரல்களை கேட்டு மனமகிழ்ந்த நிலையில் அந்த மரத்தின் நிழலில் அப்படியே கண்ணயர்ந்து நித்திரை செய்வோரையும், ஆங்காங்கு சிறு சிறு கூட்டமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும் மக்களையும் நான் கண்டேன். தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதை மன்னனுக்கும், அவனது பரிவாரங்களுக்கும் நிழல் கொடுக்கும் விதத்தில் பிரமாண்டமாக வளர்ந்து படர்ந்து கிடக்கின்றது. அந்த ஆலமரத்தின் சிறிய விதையை நாம் நமது நகத்தில் வைத்து நசுக்கி ஒன்றுமில்லாமல் செய்து விடலாம். அத்தனை சிறிய விதை கடினமான கருங்கல் பாறையில் விழுமானால் அந்த பாறையை அது உடைத்துக் கொண்டு தனது வேர்களை ஊன்றும், பனை, வேம்பு போன்ற மரங்களில் விழுமானால் அந்த மரங்களை அப்படியே அது ஊடுருவி பிழந்து கொண்டு சென்று தனது ஆதிக்கத்தை மட்டும் நிலைநிறுத்தி விடும். ஆ, தேவனுடைய ஞானத்தை என்னவென்று சொல்லுவது! ஒரு சிறிய அற்பமான வித்துக்குள் எத்தனை வலிமையை தேவன் வைத்து படைத்துள்ளார்.

தேவனுடைய அனந்த ஞானத்தைக் குறித்து கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியாவிலிருந்து சமுத்திரத்தைக் கூழாக கலக்கும் நீல திமிங்கலம் வரையான ஜீவராசிகள் ஒவ்வொன் றைக்குறித்தும் ஒரு பெரிய புத்தகம் எழுதலாம். அப்படி எழுதப் படும் புத்தகம் முற்றுப்பெற்றதாக இருக்க முடியாது. எந்த ஒரு ஜீவராசியையும் முழுமையாக ஆராய்ந்து இதுதான் இதன் சரித்திரம் என்று முற்றுப்புள்ளி கொடுக்க நாசியில் சுவாசமுள்ள மனிதனால் இயலாது. அதற்குரிய முழுமை ஞானம் அதின் சிருஷ்டிகரின் கரத்தில் மட்டுமே உள்ளது. 3 மைல்களுக்கு அப்பாலிருந்து தேனே சேகரித்து வந்து தனது தேன்கூண்டில் சரியாக விழும் தேன் ஈயைக் குறித்துக்கூட மண்ணை மனித னால் முழுமையாக ஆராய்ச்சி செய்து இதுதான் தேனீயின் முழுமையான வாழ்க்கை வரலாறு என்று முடிவு செய்து எழுத அவனால் கூடாது.

கர்த்தாவின் ஜனமே உன் கண்ணீரை துடைத்துக்கொள்

தேவனால் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியை நமது ஆதி தாய் தந்தையர் கரம் நீட்டி பறித்து புசித்த அந்தக்கணமே ஏதேனின் பூங்காவிலே சூருவளி காற்று வீசத் தொடங்கிற்று. அதுவரை நமது ஆதிப் பெற்றோருடன் மகிழ்கொண்டாடி பரவசமாக அன்போடு விளையாடிக்கொண்டிருந்த ஏதேன் தோட்ட பறவைகளும், விலங்குகளும், ஊர்வனவும் பயந்து மிரண்டு நாலு திசைகளிலும் சிதறி ஓடத் தொடங்கின. பகலின் குளிர்ச்சியான வேளைகளில் ஏதேன் பூங்காவனத்தில் வந்து அமரும் தேவனுடைய மாட்சியான பிரசன்னமும் அதை விட்டு விலகிற்று. உலகத்துக்குள் முதன் முதலாவதாக "பயம்" (ஆதி 3 ; 10) பிரவேசித்தது. சத்துருவாகிய பிசாசு இந்த அழகிய உலகத்தை தனது ஆதிக்கத்துக்குள்ளாக தனது கரங் களில் மகா தந்திரமாக எடுத்துக்கொண்டான். தேவனுடைய அழகான உலகத்துக்குள் பாவமும், சாபமும், ரோகமும் பிரவேசித்தது.

பொல்லாங்கனுக்குள் கிடக்கும் இந்த உலகத்தில் மனுக் குலம் நிம்மதியாக வாழ இயலாது. எனவேதான், கிறிஸ்தி யான், அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ள இந்த நாசபுரி யிலிருந்து உச்சிதப்பட்டணத்துக்கு புறப்பட்டுச் சென்றான். அப்படி புறப்பட்டு சென்ற அவனை இடைமறித்து அப்பொல் லியோன் கிறிஸ்தியானை போகவிடாதபடி தடுக்க முயற்சிக் கின்றான். அந்த சாத்தானும் அப்போல்லியோனுக்கு கிறிஸ் தியான் கொடுத்த பதில் இதுதான் "உன் அரசாட்சிக்குட்பட்ட தேசத்தில் (பூமியில்) நான் பிறந்தது மெய்தான். ஆனால் உனக்கு ஊழியம் செய்ய என்னால் இயலவில்லை. வேலை வாங்கினாலும் கூலி கொடாதவனிடத்தில் எவன்தான் இருப் பான் ? நீ கொடுக்கும் கூலி அரை வயற்றுக்கு பற்றுமா ?

பாவத்துக்கு சம்பளம் மரணம்தானே! அதினால் எனக்கு புத்தி தெளிந்த பின்பு, தெளிந்த புத்தியுள்ள பலரும் செய்கிறது போல என் வாழ்வுக்கு அனுகூலமான வழியை தேடிக்கொண்டேன்''.

மனுக்குலம் நிம்மதியாக இந்த உலகத்தை கடந்து பரலோகம் செல்ல சாத்தான் ஒருக்காலும் இடம் கொடுக்கமட்டான். நமது ஆண்டவரும் இந்த உலகத்தை துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாக கடந்து சென்றார் (ஏசா 53 ; 3). அவருடைய அடியார்களாகிய சீடர்களும் தங்களுடைய பூலோக யாத்திரையை குறித்து பேசும்போது ''இந்நேரம் வரைக்குப் பசியுள்ளவர்களும் தாகமுள்ளவர்களும் நிர்வாணிகளும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கின்றோம். இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானோம்'' (1 கொரி 4 ; 11, 13) என்று கூறினார்கள்.

ஆண்டவராகிய இயேசு தாமே ''உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு'' (யோ 16 : 33) என்று தம்மை பின் பற்றிச் செல்லும் தமது அடியார்களாகிய நமக்கு வெகு திட்டமாக கூறியுள்ளார் ''நாம் அநேக உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்'' (அப் 14:22) என்று அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் கோடிட்டு காட்டியிருக்கின்றார். அத்துடன் அவர் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது ''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறயாவரும் துன்பப்படுவார்கள்'' (2 தீமோ 3:12) என்று தெளிவுபடுத்தியுள்ளார். வாழ்நாட்கள் மனுஷனுக்கு குறைவு, ஆனால், பூவுலகில் அவனுக்கு சஞ்சலம் மிகுதி (யோபு 14 : 1) என்று பாடுகளின் உச்சக்கட்டத்தை எட்டிப் பிடித்த யோபு பக்தன் நமக்கு சொல்லுவார். மனுஷன் அநேக ஆண்டுகள் வாழ்ந்து அந்த ஆண்டுகளில் எல்லாம் இன்பம் அனுபவித்து மகிழ்ந்திருந்தாலும் அவன் துன்ப நாட்களோ கட்டாயம் சந்தித்தே தீரவேண்டும். மகிழ்வின் நாட்களையும், துயரத்தின் காலங்களையும் தராசிலே போட்டு எடைபோட்டுப் பார்த்தால் துயரநாட்கள் போடப்பட்டுள்ள தராசின் தட்டு மிகுந்த பாரத்தால் தரைகட்டி நிற்பதை காணக்கூடும் என்று உலக ஞானத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்த சாலொமோன் ராஜா கூறுவார் (பிர 11 8)

நமது ஞானக்கன்மலையாம் தேவனின் ஆராய்ந்து முடியாத எல்லையற்ற ஞானத்தை குறித்து இந்த தலையங்க செய்தியில் நான் எழுதினதை நீங்கள் வாசித்திருக்கின்றீகள். அப்படிப் பட்ட ஞானப் பரம்பொருளாம் நம் நல்ல தேவன் நமது வாழ்

நாட்கால வருடங்களில் இந்த, இந்த காலக்கட்டத்தில் இந்த இந்த சம்பவங்கள் நமக்கு வந்து சம்பவிக்கவேண்டும் என்றும் இந்த, இந்த சம்பவங்களின் மூலமாக எனது பிள்ளை தனது வாழ்வில் இன்ன, இன்ன மாற்றம் அடைந்து அது எனது பரலோக பேரின்ப வாழ்வுக்கு தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் என்றும் எல்லா காரியங்களையும் முடிவில்லாத நித்தியத்தை மையமாக வைத்து முன்கூட்டியே ஆதியிலேயே ஆராய்ந்து நிதானித்து அந்த பரம குயவனும் மாவல்ல கர்த்தர் நம்மை உருவாக்கி இந்த மண்ணுலகில் வாழவிட்டிருக்கின்றார். அந்த ஞானமுள்ள தேவனின் ஒழுங்கு முறையின்படியே நமது வாழ்வில் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றது. அவையாவும் ரோமர் 8 : 28 ன்படி நமது நித்திய நன்மைக்காக வந்து சம்பவித்துக்கொண்டிருக்கின்றன.

நமது கரங்களில் அந்தந்த காலங்களில் பரத்திலிருந்து அருளப்படும் கசப்பான பாத்திரங்களை முறுமுறுப்பில்லாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும். கெத்செமனே பூங்காவில் தனது பிதா கொடுத்த கசப்பான பாத்திரத்தை அன்போடு ஏற்று பருகிய நமது அன்பின் இரட்சகரைப் போல நாமும் நமது வாழ்வில் நமக்குக்கொடுக்கப்படும் பாத்திரத்தை அன்போடு பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் ஆண்டவருடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியும் இருக்க வேண்டும். அதற்கு மாறுக பரலோக நாச்சியாருக்கு அடங்கியிராமல் அவருடன் முறுமுறுத்துக்கொண்டு வனந்தரத்தை நோக்கி நம் இஷ்டப்படி ஓடுவதோ அல்லது ஆண்டவருடன் கோபித்துக்கொண்டு வீட்டுச் சுவர்களில் மாட்டப்பட்டுள்ள ஆண்டவரின் படங்களை அடித்து நொறுக்கி அவைகளை காலின் கீழ்போட்டு மிதித்து அவமதிப்பதோ நமக்கு ஆசீர்வாதமாக இருக்காது. ஆண்டவருடன் நாம் கோபித்துக்கொண்டு எங்கே செல்லமுடியும் ? உம்முடைய சமூகத்தைவிட்டு எங்கே ஓடுவேன் ? (சங் 138 : 7) என்றார் சங்கீதக்காரர். ஆண்டவருடன் சண்டையிட்டு அவரை தூஷித்து அவர் சமூகத்திலிருந்து ஓடுவதானால் சாத்தானும் பிசாசிடம்தான் நாம் ஓடவேண்டும். அவனிடம் செல்லும் நமக்கு அவன் நரகத் தீ சூழையை 7 மடங்கு சூடாக்கி அதிலே நம்மைப்போட்டு நித்திய காலமாக வேகவைக்க ஆவலாக காத்துக்கொண்டிருக்கின்றான்.

இதை கருத்தோடு வாசிக்கும் தேவ பிள்ளையே உனது கண்ணீரை துடைத்துக்கொள். உனது வாழ்வை வந்து தாக்கும் அனேத்து பாடு துயரங்களும் உனது நித்திய பரலோக நன்மைக்காகவே ஒரு நாள் முடிவுறும். ஏன் எனக்கு இத்தனை பாடுகள்? இந்த இளவயதிலேயே இந்த விதவையிருப்பின் தனிமையை பெற நான் என் ஆண்டவருக்கு என்ன துரோகம் செய்தேன் ?

பரிசுத்தவாட்டியாம் எனது அருமை மகளுக்கு தேவன் ஏன் ஒரு குழந்தை செல்வத்தை கொடுக்கவில்லை? இரவும் பகலும் இளைப்பாறுதல் இல்லாமல் என்னை வாட்டிவதைக்கும் இந்த கொடிய ஆஸ்துமா நோயை ஆண்டவரை அதிகமாக நேசிக்கும் எனக்கு வர அவர் ஏன் அனுமதித்தார்? கர்த்தாவின் நாமத்துக்கு இரவும் பகலும் சங்கீதம் பாடும் எனது தெய்வபக்தியுள்ள மக்களுக்கு தேவன் இன்னும் வேலைகொடாமல் அவர்களை மனமடிவாக்குவதன் காரணம் என்னவோ? அதே சமயம் அவரை நொடிப்பொழுது கூட நினைத்துப்பார்க்காத அவபக்தியுள்ளோருக்கும், தெய்வநிந்தனை செய்வோருக்கும் ராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்களை கொடுப்பதில் கர்த்தருக்குள்ள நினைவு யாது? இந்தவிதமான நமது எண்ணற்ற விளக்களுக்கு எல்லாம் சர்வ ஞானமுள்ள தேவன் அளிக்கும் ஒரே விடை ''நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறிவாய், இனிமேல் அறிவாய்'' (யோ 13 : 7) என்பதுதான்.

இந்த உலகத்தில் பாடுகளோடும், கண்ணீரோடும் உச்சித பட்டணத்துக்கு பிரயாணம் சென்று கொண்டிருக்கும் தேவ மக்களாகிய உங்களுக்கு மிகவும் ஆறுதலாக இருக்கத்தக்கதாக 100 வருடங்களுக்கு முன்பாக நமது இந்திய தேசத்தில் மேற்கு வங்காளத்தில் மிஷனரியாக கர்த்தருக்கு ஊழியம் செய்த ஒரு பரிசுத்த மிஷனரி அம்மையாரின் கண்ணீரின் அனுபவ சாட்சியோடு இந்த தலையங்க செய்தியை முடிக்க விரும்புகின்றேன்.

நூறு வருடங்களுக்கு முன்பாக மேற்கு வங்காளத்தின் டார்ஜிலிங் மலைப்பட்டணத்தில் ஒரு செப்டம்பர் மாதம் 25 ஆம் நாள் முன் இரவில் ஒரு சிறிய தூறலாக ஆரம்பித்த மழை வர வர கொட்டு கொட்டென்று கொட்டத் தொடங்கிற்று பட்டணத்தின் ஒரு மலை விழிம்பிலிருந்த அந்த மிஷனரி துரையின் பங்களாவில் அவருடைய 17,15,13, 11, 8, 5 வயதுடைய விடா, லூ யிஸ், வில்பர், ஹெர்பர்ட், யூனிசி, எஸ்தர் என்ற ஆறு அன்புப் பிள்ளைகளும், வங்காள பணிப் பெண் ஜெசுதரும் அந்த சமயம் இருந்தனர். அன்று இரவில் அந்த பங்களாவானது கோர மழையின் காரணமாக நிலச்சரிவுக்குள்ளாகி அந்த ஏழு பேரும் கெடு பள்ளத்தாக்கில் புதையுண்டு மாண்டு போய்விட்டார்கள். தேவ பக்தர்களான மிஷனரி துரையும் அவருடைய மனைவியும் அப்பொழுது கல்கத்தா பட்டணத்தில் இருந்தனர்.

தங்களுடைய அன்புப் பிள்ளைகள் அனைவரையும் இழந்த அந்த மிஷனரிகளான சங்கை லீயும், அவரது அபிஷேகம் பெற்ற அன்பு மனைவி அடா லீ அம்மையாரும் சற்றும் மனம் தளரவில்லை. இந்தக் கோரமான விபத்தைத் தங்கள் வாழ்க்கையில் அனுமதித்த தங்கள் அன்பின் கன்மலையாம் கர்த்தரை

REGISTERED NEWS PAPER
DEVA EKKALAM Regn. No. M : 8850 / 1970

நன்றியோடு ஸ்தோத்திரித்தார்கள். கண்ணீர் கவலையில்லாத மோட்ச இன்ப வீட்டில் தங்கள் அன்புச் செல்வங்கள் அனைவரும் மிகவும் பத்திரமாக இயேசு அப்பாவுடன் இருப்பதை எண்ணி உள்ளம் பூரித்தார்கள். அந்தக் கண்ணீரின் நாட்களில் அடா லீ அம்மையார் தனது பக்தியுள்ள சிநேகிதி ஒருவருக்கு எழுதின கடிதம் ஒன்றில் கீழ்க்கண்ட வரிகள் இருந்தன ::

(''நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் நமது உபத்திரவத்தின் குகையானது அவ்வப்போது சாதாரணமாக இருப்பதைக்காட்டிலும் ஏழு மடங்குகள் அக்கினியின் உக்கிரத்தை அதிகரிக்க வேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில், அப்பொழுதுதான் அக்கினி சூழையில் காணப்படும் நான்காவது ஆளின் சாயல் தேவ மைந்தனின் சாயலாக இருக்கும். அக்கினியின் கொடூரம் அதிகரிக்க அதிகரிக்க தேவ மைந்தனின் பிரசன்னத்தின் ஒளியும் பிரகாசமடையத் தொடங்கிவிடுகின்றது. ''யாக்கோபு என்னும் பூச்சியே, பயப்படாதே'' என்று என் அன்பின் நேசர் என் காதிற்குள் கூறுவதை நான் அடிக்கடி கேட்கின்றேன். ஒவ்வொரு உபத்திரவத்தின் குகைக்கு அருகிலும் புடமிடுவோனுகிய கர்த்தரும் கட்டாயம் உட்கார்ந்து கொண்டுதானிருப்பார். நான் சோதிக்கப்பட்ட பின்பு பொன்னுக விளங்குவேன்'') என்று எழுதியிருந்தார்கள்.

என் அன்பான தேவ பிள்ளையே ''உன்னுடைய பின் நாட்களில் உனக்கு நன்மை செய்யும் பொருட்டு உன்னைச் சிறுமைப்படுத்தும்.....'' (உபா 8:15) உன் அன்பின் கண்மணி உனது வாழ்க்கையில் ''உன்னுடைய எல்லா நெருக்கங்களிலும் உனக்காக நெருக்கப்படுகின்றவரும்'' (ஏசா 63 : 9) ''நீ தண்ணீர்களைக்கடக்கும்போது உன்னோடிருப்பவரும், நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளாமல் உன்னை பாதுகாப்பவரும், நீ அக்கினியில் நடக்கும்போது உன்னை வேகாமல் காப்பவரும் அக்கினி ஜூவாலை உன் பேரில் பற்றாமல் அரவணைப்பவருமான'' (ஏசா 43 : 2) அன்பின் தயாபரன் ''ஏற்ற காலத்தில் உன்னை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடக்கியிருக்க'' (1 பேதுரு 5 : 6) கருத்தாயிரு. அதற்கான கிருபைகளை அன்பின் தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் தந்தருள்வாராக.

Edited and Published by N. Samuel
MAILING ADDRESS :- N. Samuel, Editor, "Deva Ekkalam."
Post Box No. 6, Kotagiri - 643 217 Nilgiris.